
## ஒலுவில் அமுதன்



# கலையாத மேகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K. RETNAVEL SLPS-I
Rtd. Principal
Justice of the Peace (Whole Island)
Notary Public
Sworn Translator English / Tamil
Sagama Road, Kolavil-01
Akkaraipattu

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையாது மேகங்கள்

(சிறுகதைத் தொகுதி)

1999

- ஒலுவில் அமுதன் -

விலை 70/=

வெளியீடு :
முஸ்லீம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம்
அம்பாறை மாவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலுவில் அமுதனின்

## ஏனைய நூல்கள்

* மனக்கோலம் (கவிதைத் தொகுதி)

* மரணம் வரும் வரைக்கும் (கவிதைத் தொகுதி)

**பதிப்புரிமை :**

**ஆசிரியருக்கே**

*முஸ்லிம் வீக் பணிப்பாளருக்கும்.*

*செலக்டின் ஓப்செற் ஊழியர்களுக்கும்.*

*ஜவா குறுப் கொம்பியூட்டர் இயக்குனர் ஜனாப் எம்.எச். ரோஷின்.*

*அல்-ஹாஜ் எஸ். முத்துமீரான்.*

*தாரகை தௌபீக்.*

*ஆகியோர்களுக்கும்*

*என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்!*

**- ஒலுவில் அமுதன் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

இவ்வருடத்தில் தனது இருபதாண்டு நிறைவை வெகுவிமர்சையாக கொண்டாட தீர்மானித்துள்ள முஸ்லீம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனம் – இம்மாவட்டத்தின் அரசியல், பொருளாதார, கல்வி போன்ற துறைகளில் மாத்திரமன்றி இலக்கியம், கலை கலாச்சாரத்துறைகளிலும் பணியாற்றி வந்திருக்கின்றது. இம்முன்னணி நடத்திய இலக்கிய கருத்தரங்குகள், மாதமொரு கவியரங்கு என்பன இலக்கிய கலைஞர்களின் அவதானிப்பை தன்பால் ஈர்த்துக் கொண்ட நிகழ்வுகளாகும்.

நூல் வெளியீடுகளிலும் எமது முன்னணி கவனத்தை செலுத்தி வருகின்றது. எமது பிரதேச எழுத்தாளர்களின் படைப்புக்களை நூல்வடிவம் பெறச்செய்வதிலும் அவர்களை ஊக்குவிப்பதிலும் முன்னணி தம்மாலான பங்களிப்பினை நல்கி வருகின்றது.

ஏற்கனவே கவிஞர் அன்புடீனின் "முகங்கள்" கவிஞர் மு. றூகாவின் "புயல்வாசித்த புல்லாங்குழல்" ஆகிய இரண்டு கவிதைத் தொகுதிகளை முன்னணி வெளியிட்டிருக்கின்றன. இப்போது வெளியிட்டுள்ள ஒலுவில் அமுதனின் "கலையாத மேகங்கள்" சிறுகதைத் தொகுதி முன்னணியின் மூன்றாவது வெளியீடாகும்.

"மரணம் வரும்வரைக்கும்" கவிதைத் தொகுதியை அண்மையில் வெளியிட்டுள்ள அமுதன் தேசிய பத்திரிகைகளிலும், வானொலியிலும் அவ்வப்போது, கவிதை, கட்டுரை, சிறுகதை என்பன எழுதி வந்திருக்கின்றார். தனது படைப்புக்களை நூலாக்கம் செய்வதில் அமுதன் காட்டிவரும் ஆர்வமும், சிரத்தையும், வேகமும் பாராட்டத்தக்கவை. ஒரு எழுத்தாளனின் படைப்புக்களை ஒன்று சேர்த்து நூல் உருவில் பார்க்கும் போதுதான் அவனைப்பற்றிய கணிப்பை செய்ய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வெளியீட்டு முயற்சிகளுக்கு வாசகர்கள் அளித்து வந்த வரவேற்பை முன்னணி நன்றியுடன் நினைவுகூர்ந்து இத்தொகுதிக்கும் இவர்களின் ஆதரவை ஆவலுடன் எதிர்பார்க்கின்றது.

அமுதனின் எழுத்துப்பணி தொடரவும் இலக்கியப்பார்வை விரிவடையவும் சிறுகதைத் துறையின் புதிய பரிமானங்களை கண்டறிந்து, நவீன உத்திகளைக் கையாண்டு அவர் இன்னும் பிரகாசிக்கவும் நமது முன்னணி வாழ்த்துகின்றது.

எம். ஐ. உதுமாலெவ்வை
முன்னணிகளின் தேசிய பணிப்பாளர்,
அகில இலங்கை முஸ்லிம் லீக்
வாலிப முன்னணி,
53, வை. எம். எம். ஏ. வீதி,
அக்கரைப்பற்று 01.
T. Phone 067 - 77626

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் உரை

நான் இருபத்திமூன்று வருடங்களுக்கு மேலாக இலக்கிய பணிபுரிகின்றேன். 1976 – 1979 காலப்பகுதியில் நிறைய ஓய்வு இருந்ததால் அதிகமாக எழுதினேன். 1980 – 1990 காலப்பகுதியில் இடையிடையே எழுதினேன். பொறுப்புக்களும் சுமைகளும் அதிகரித்தபடியால் 1991 – 1993 காலப்பகுதியில் எழுதுவதை நிறுத்தினேன்.

பிரச்சினை தீர்ந்த பின் மீண்டும் 1994 தொடக்கம் எழுத தொடங்கி இதுவரை எழுதிவருகின்றேன். 1988 ஆண்டு திக்குவல்லை ஸப்வான் அவர்களின் 'இனிமை' வெளியீடாக எனது முதலாவது கவிதைத் தொகுதி "மனக்கோலம்" வெளிவந்தது. மல்லிகை, தினகரன், சிந்தாமணி, தடாகம், தினபதி, மினா, புன்னகை ஆகிய பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவந்த ஆக்கங்கள் இதில் இடம்பெற்றன. இருபத்திநான்கு பக்கங்களைக் கொண்ட கவிதைத் தொகுதி.

இரண்டாவதாக எனது சொந்த முயற்சியினால் "மரணம் வரும் வரைக்கும்" என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டேன். இது 78 பக்கங்களைக் கொண்டது.

மூன்றாவதாக "கலையாத மேகங்கள்" என்ற இந்தச் சிறுகதையை இவற்றையெல்லாம் விட அதிக பக்கங்களில் வெளியிட்டுள்ளேன்.

பிரபல எழுத்தாளர் ஒருவரிடம் அணிந்துரை எழுதித்தரவேண்டும் என்று கேட்டேன். உடன்பட்டார். சிறுகதை தொகுதியை கையளித்தேன். ஒருவாரத்தின் பின் வருமாறு சொன்னார். போனேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை என்பது வெறும் புகழுரை மட்டுமல்ல. குறைகளையும் சுட்டிக்காட்டும் ஒரு உரை.

"இந்த கதைக்கெல்லாம் அணிந்துரை எழுதித்தரமுடியாது" என்று மறுத்துவிட்டார். அவர் உடன்பட்டு இறுதி நேரத்தில் கைவிட்டதால் அணிந்துரை இல்லாமலே வருகின்றது. அவர் மறுத்தது கதைகளில் சில கருத்துப்பிழையாம்!

அவர் எடுத்துச்சொன்ன பிழைகளில் ஒன்று வெள்ளைச்சாறமும், வெள்ளைச் சட்டையும் போட்ட தமிழ் பாத்திரம் ஒன்று வருகின்றது. தமிழர்கள் சாறன் அணிவதில்லை. வேட்டிதான் அணிவார்கள் என்று பதினெட்டாம் நூற்றாண்டு கதை கதைத்தார். இன்று தமிழர்கள் அனேகமாக சாறம் உடுக்கிறார்கள் என்பது அவருக்குத் தெரியவில்லையே!

இரண்டாவது புலியாலும், அரசாலும் மக்களுக்கு கஷ்டம் என எழுதியது பிழையாம்.! புலிகளால், அரசால் மக்களுக்கு கஷ்டம் இல்லையா? முதுமை அடைந்தும் திறமை இருந்தும் அறிவுக்கூர்மை வரவில்லையே!

மூன்றாவது அவர் சொன்ன பிழை யுத்தத்தைப் பற்றி தமிழர்கள் நிறைய எழுதுகிறார்களாம். எனக்கும் தாய்மொழி தமிழ்தானே! இன்றைய காலகட்டத்துக்குப் பொருத்தமான கருவை வைத்து எழுதியது குற்றமா? எனது கதைகள் தகுதியற்றனவா? வாசக பெருமக்களே நீங்களே கூறுங்கள் அணிந்துரை இல்லாவிட்டாலும் எனக்கு வாசகர்களின் மதிப்புரை இருக்கும்.

இந்த வருடம் இரண்டு புத்தகங்களை வெளியிட்டவன் நானென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கிறேன். வேறு யாரும் இரண்டு புத்தகங்கள் இந்த வருடம் வெளியிட்டார்களோ தெரியாது.

தற்கால நிகழ்வை வைத்து கதைகள் புனைந்துள்ளேன். காலத்துக்குப் பொருத்தமானவை, சிந்திக்கக்கூடியவை. புகழுக்காக பணத்துக்காக நான் எழுதவில்லை. இலக்கியப்பணி புரிய வேண்டும். நானும் எழுத வேண்டும் என்பதற்காக எழுதுகின்றேன்.

"மரணம் வரும்வரைக்கும் கவிதையில் நூறு, புத்தகங்களுக்கு மேல் வாசிகசாலைகளுக்கும், பாடசாலைகளுக்கும் அனிபளிப்புச் செய்துள்ளேன். வேறு யாரும் எழுத்தாளர்கள், கவிஞர்கள் இவ்விதம் செய்தார்களோ நானறியேன்.

வாசக பெருமக்களே... அடுத்தவருடம் நடுப்பகுதியில் எனது நாலாவது வெளியீடாக சுவையான ஒரு சமூகநாவலை என்னிடம் இருந்து எதிர்பார்க்கலாம். இனி கதைகளுக்குள் வலம் வாருங்கள். உங்கள் கருத்துக்களை என்வசம் தாருங்கள். வாசகர்களுக்கே தகுதி, திறமை தெரியும். உங்களிடமே பொறுப்பை விடுகின்றேன்.

- ஒலுவில் அமுதன் -
(ஆ. அலாவுதீன்)
67 புதுப்பள்ளி வீதி,
அக்கரைப்பற்று - 05.
T. Phone 067 - 78339
Celltel 072 - 669828
1999, August.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே ☞


01. நிலை மறந்தால்...

02. பெண்ணின் பணி...

03. நேர்கோடுகள்...

04. இறைவன் இருக்கின்றான்...

05. கலையாத மேகங்கள்...

06. மோகமேகம்...

07. மூடிய திரைகள்...

08. காலம் மாறும்...

09. ஒரு படைப்பாளியின் பயணம்...

10. கொடிய அரசன்

11. கனவுகள் = கற்பனைகள்

12. எண்ணங்கள் இரையாகின்றன.

13. வெளிச்சமரம்

14. தொடங்கிய பயணம்

15. கொடுத்து வைத்தவர்கள்!


எனது அன்புத்தந்தை மர்ஹூம் இஸ்மாலெவ்வை மரைக்கார் ஆதம்லெவ்வை அவர்களின் நினைவு (ஒரு வருட) தினத்தை முன்னிட்டு இச்சிறுகதை தொகுப்பை வெளியிட்டு வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

– ஆசிரியர் –


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைமறந்தால்...!

சுந்தரம் முதலாளியை அந்த ஊரில் தெரியாதவர்களே இல்லை. வெள்ளை சாறம், வெள்ளை நீண்ட கைசேர்ட் அணிந்தவராக காட்சி தருவார்.

அவரின் முகத்தில் புன்னகையைக் காண்பது அரிது. வெறுப்புள்ளவராகவே எவரையும் நோக்குவார். காரணம் பணத்திமிர். அந்த ஊரில் முக்கியபணக்காரர் பத்துப் பேரில் இவரும் ஒருவர். இத்தனைக்கும் சுந்தரம் முதலாளி பணக்கார பரம்பரையில் பிறந்தவரல்ல.

சிறுவனாக இருக்கும் போது அன்றாட சாப்பாட்டிற்கே திண்டாடியவர். தாய்கூலிவேலை செய்து சுந்தரத்திற்கு இரு நேரச்சாப்பாடு வழங்கிவந்தாள். கறி கோழியும், ஆடுமல்ல. மரவெள்ளிக்கிழங்கும், கீரை வகையும்தான்.

மண்குடிசையில் சூரியன் எட்டிப்பார்க்கும் தரையில் தவழ்ந்து தூங்கி வாழ்ந்து பழக்கப்பட்டவர் சுந்தரம்.

இன்று பெரும்பணக்காரர். எப்படி பணக்காரர் ஆனார்? அது பழையவர்களுக்குத் தெரிந்த கதை. புதியவர்களுக்கு புரியாத புதிர்.

கந்தவனம் போடியாருக்கு குழந்தை வாரிசு இல்லை. பாராத வைத்தியமே இல்லை. கேட்காத வைத்தியரே இல்லை. இனி குழந்தை பிறக்காது என வைத்தியர்கள் கூறிவிட்டார்கள். சுந்தரம்மீது கந்தவனம் போடியாருக்கு ஒரு பற்று ஏற்பட்டது. வயோதிபகாலத்தில் தங்களைப் பார்ப்பானே என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது. சுந்தரத்தின் தாயாருக்கு விடயத்தைச் சொல்லி சுந்தரத்தை தனது வீட்டுக்கு அழைத்துப் போனார் கந்தவனம் போடியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை இல்லாக்குறைக்கு பிள்ளையாக வளர்த்தார். கிழங்கும் கீரையும் உண்டு பழகிய சுந்தரத்திற்கு சுவையுணவு பரிமாறப்பட்டன. சுந்தரத்திற்கு சொர்க்கத்தில் இருப்பது போன்று நினைவு.

காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றன. கந்தவனம் போடியாருக்கு முதுமை வர கூடவே நோயும் வந்தது. நெஞ்சுவலி என்று நெஞ்சைப் பொத்திப்பிடித்து படுத்தவர் எழும்பவே இல்லை! உயிர் பிரிந்து விட்டது.

எல்லா சொத்து சுகங்களும் சுந்தரத்திற்கே சொந்தமாகியது. கந்தவனம் போடியாரின் மனைவியும், கணவன் இறந்து சில மாதங்களில் உயிரை விட்டு விட்டாள். அதன் பிறகு ஏழை சுந்தரத்திற்கு அதிர்ஷ்டம் அடித்தது. சுந்தரம் முதலாளியென ஊருக்கு அறிமுகமானான்.

பல வியாபாரத்தலங்களுக்கு அதிபதியானான். ஊருக்குத்தேவையான கட்டிடப்பொருட்கள் பலவற்றுக்கு ஏகபோக விநியோகஸ்தனானான்.

இலாபம் பெருகியது. ஐம்பது ஏக்கருக்கு மேல் விவசாயம் செய்யத்தொடங்கினான். நெல்லும் அதிக விளைச்சலை ஏற்படுத்தியது. சொந்தமாக எத்தனை ஏக்கர் வயல் நிலம் இருக்கின்றதென ஊரவர்களுக்கே கணக்கு சொல்லமுடியாத அளவிற்கு வயல்நிலம் உண்டு.

பல வழிகளாலும் வருமானம் சுந்தரம் முதலாளியைத் தேடிவந்து கொண்டிருந்தது.

ஆனால் ஏழைகளுக்கு ஒரு ரூபாயாவது கொடுத்து பழக்கம் இல்லை.

ஏழைகளைக் கண்டாலே ஏசிவிட்டு செல்வான். கைநீட்டுவோரைக்கண்டாலே வெறித்துப் பார்த்து போய் விடுவான்! கந்தவனம் போடியார் சுந்தரத்தை எடுத்து வளர்க்காவிட்டிருந்தால் தனது நிலை என்னவாகியிருக்கும் என்பதை சிறிதும் எண்ணிப்பார்க்காதவராக இருக்கிறார் சுந்தரம் முதலாளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்விளைச்சலில் நிறைந்த இலாபமீட்டிய சுந்தரம் முதலாளி குத்தகைக்கு ஐம்பது ஏக்கர் போல எடுத்து நெல் பயிரிட்டிருந்தார். சொந்தவயல் 70 ஏக்கர் போல செய்திருந்தார்.

ஊரில் கட்டிடப்பொருட்கள் விற்கும் கடைகள் பல புதிதாக முளைத்திருந்ததால் சுந்தரம் முதலாளிக்கு அதில் அதிக இலாபமீட்ட முடியாதிருந்தது. அது மட்டுமல்ல. சுந்தரம் முதலாளியின் கடையில் பொருட்கள் அதிகவிலை என்பதாலும் வியாபாரம் சுருங்கத்தொடங்கியது.

எல்லாவற்றையும் விட்டு விட்டு முழுமூச்சாக விவசாயம் செய்வதிலேயே ஆர்வம் காட்டினார். இலாபம் பன்மடங்காகியது.

இந்த முறை சுந்தரம் முதலாளிக்கு விளைந்திருக்கிறதைப் போல் யாருக்கும் விளையவில்லையென ஊரவர்கள் பேசிக்கொண்டார்கள்.

அறுவடையை எதிர்பார்த்திருந்தார் சுந்தரம் முதலாளி.

வேளாண்மை விளைவிற்காகவும் சுந்தரம் முதலாளியின் வருமான பெருக்கத்திற்காகவும் அரும்பாடு பட்டுக் கொண்டு வந்தான் ராமமூர்த்தி. இப்போது தராவிட்டாலும் எப்போதாவது தனக்குச் சேரவேண்டிய உழைப்பின் பயனை சுந்தரம் முதலாளி தருவார் என்று இலவுகாத்த கிளியாக இருக்கின்றான் ராமமூர்த்தி.

ஐந்து, பத்து ஏக்கர் என்று விவசாயம் செய்கின்ற சாதாரண விவசாயி கொடுக்கின்ற கூலியைக் கூட சுந்தரம் முதலாளி கொடுப்பதில்லை. இம்முறை அறுவடையின் பின்னர் சரியான கூலியைத் தராவிட்டால் வேறு எங்காவது வேலைக்கு செல்லவேண்டியதுதான். இந்த முறை முதலாளியிடம் துணிந்து கேட்க வேண்டும் என்ற முடிவோடு இருந்தான் ராமமூர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளைவந்தது. அறுவடைமுடிந்து நெல் மூட்டை மூட்டையாக சுந்தரம் முதலாளியின் அரிசி ஆலைக்கு எடுத்துச்செல்லப்பட்டன. அவரது "ஸ்டோர்" கடை எல்லாம் நெல்மூட்டைகளால் நிரம்பி வழிந்தன.

நாலைந்து லொறிகள் பண்டாரவளை, பதுளை, கண்டி, கொழும்பு என்று அரிசி மூட்டைகளோடு பறந்து சென்றன.

பணக்கட்டுக்களுடன் திரும்பிவந்தார்கள். சுந்தரம் முதலாளியின் அரிசி ஆலைக்குச் சென்றான் வயற்காரன் ராமமூர்த்தி முதலாளி சுந்தரம் இருந்தார்.

"என்ன ராமமூர்த்தி இந்தப்பக்கம்?" எனக்கேட்டார் சுந்தரம் முதலாளி.

"இல்லை முதலாளி... வந்து..."
"என்ன சொல்லுடா கெதியா"
"நான் இப்ப நாலைந்து வருஷமா உங்கட வயல்வேலை செய்யிறேன்..." என்று இழுத்தான் ராமமூர்த்தி.

"இதற்கென்ன இப்போ" கோபமாக கேட்டான் சுந்தரம் முதலாளி.

"இல்லே முதலாளி ஒரு வருஷம் கூட எனக்கு ஒழுங்காக கூலி தாறீங்க இல்ல" என்றான் ராமமூர்த்தி.

"நான் கூலி தரல்லையா? நீ தின்கின்ற மண்ணா? என்ர உழைப்பாலேதான் வாழ்கிறாய் மறந்து பேசாதே" என்றான் சுந்தரம் முதலாளி.

"தின்கின்றத்துக்கு வேலை செய்யனும் என்றால் நாய் போல் கஷ்டப்படவேண்டிய அவசியமில்லை. நான் பட்டபாட்டுக்கு மற்றப்போடிமார் கொடுக்கிறத்தத்தாங்க. பத்து ஏக்கர் செய்து கொடுத்தவனுக்கு கொடுக்குற கூலியைக் கூட நீங்க எனக்குத் தரல்லையே. அதனாலே..." என்று இழுத்தான் ராமமூர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதனாலே என்னடா? என்ன பயம் காட்டுறே" சுந்தரம் முதலாளி தைரியமாகச் சொன்னார்.

"என்ர சம்பளத்த ஒழுங்காகத் தரல்லே என்டா இனி உங்களுக்கு வேலை செய்யப்போறல்ல. உடையார் கடையிலே வேலை செய்யப்போறேன். மாதம் நாலாயிரம் தாறேன் என்றாங்க." என்றான் தொழிலாளர் ராமமூர்த்தி.

"போடா நீ எங்கென்டாலும் போ. என்ற உப்பைத் தின்னிட்டு எனக்கிட்டே வீரம் பேசுகிறாய். நீ நல்லா இருக்கமாட்டாய்" கோபமாகக் கத்தினார் சுந்தரம் முதலாளி.

"ஏழைகள்ள நெருப்பைக் கட்டிவெச்சிருக்கிற நீங்கள்தான் நாசமாக போவீங்க. எனக்குச் சேரவேண்டிய சம்பளத்தை அபகரிச்சு வெச்சிருக்கிறநீ நல்லவனா? பொறகு கஷ்டப்படுவாய்" என்று கூறித்தள்ளிச் சென்று விட்டான் ராமமூர்த்தி. பக்கத்தில் நின்றிருந்தால் பல்லை உடைத்திருப்பான் சுந்தரம் முதலாளி.

"முதலாளி உங்க சரித்திரம் தெரியாதவன் அல்ல நான். என் பாட்டி சொன்னா. திங்க சோறில்லாம உங்க அம்மா கூலிவேலை செய்து மரவெள்ளிக்கிழங்கு அவிச்சு தர அதை தின்னு வளர்ந்தவங்க. யாரோ ஒரு போடியாராம். அவருக்கு பிள்ளையில்லையாம். அவரு உங்களை எடுத்து வளர்த்தாராம். அவரு செத்ததாலே பணக்காரனாகிவிட்டீங்க. பழசை மறந்துட்டீங்க. மீண்டும் அதே நிலமை கடவுள் தருவார்." என்று கூறினார் ராமமூர்த்தி.

அவனை அடிக்க துரத்தினார் சுந்தரம் முதலாளி. ராமமூர்த்தி ஓடித்தப்பி விட்டான்.

புதிய வயற்காரன் தேவைப்பட்டான் சுந்தரம் முதலாளிக்கு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் ராமமூர்த்திக்குக் கொடுத்த அநியாய கூலியை தெரிந்தவர்களாக இருந்தமையால் முன்கூட்டியே சம்பளத்தைத்தான் பேசினார்கள்.

இப்போதுதான் சுந்தரத்திற்குத் தெரிந்தது. ராமமூர்த்திக்குரிய சம்பளத்தை ஒழுங்காக வழங்கவில்லை என்ற உண்மை நிலை.

இருந்தும் புதிதாக வரும் தொழிலாளிகள் கேட்கும் சம்பளத்தைக் கொடுக்க விருப்பில்லாதவராக இருந்தார் சுந்தரம் முதலாளி.

பக்கத்தவர்கள் வயல்வேலை தொடங்கிவிட்டார்கள். குத்தகைக்குச் செய்யும் காணிகளை வேறு போடிமார் எடுத்து விதைத்திருந்தார்கள். சுந்தரத்தின் சொந்தவயல் அதாவது கந்தவனம் போடியார் கொடுத்த வயற்காணி அறுபது ஏக்கர் மாத்திரமே அவரால் செய்யக்கூடியதாக இருந்தது.

அதற்கு வயற்காரன் எடுப்பது பெரும்பாடாகி விட்டது.

ஈற்றில் வயதான ஒருவரை நியாயசம்பளத்திற்கு வைத்துக்கொண்டார். நியாயமான சம்பளத்திற்கு வைக்காவிட்டால் அவரால் விவசாயமே செய்ய முடியாத நிலை. விவசாயம் செய்யாவிட்டால் பெரும்பணக்காரன் என்ற நிலை படிப்படியாக மாறி காணிகளையும் விற்கவேண்டிய நிலமை ஏற்படுமே! அதன் பிறகு அந்தஸ்தும் குறைந்து விடுமே!

இன்னும் ஒரு மாதத்தில் சித்திரைப்புத்தாண்டு பிறக்கப்போகின்றது. ஏழை எளியவர்கள் பணக்காரர்களின் இல்லம் நோக்கி படையெடுக்கத் தொடங்கினார்கள்.

கொடுத்துப்பழக்கமில்லாத சுந்தரம் முதலாளியின் வீடு நோக்கியும் அவர்கள் விரைந்தார்கள். எவருக்கும் சுந்தரம் முதலாளி கொடுக்கவில்லை. ஏச்சுப்பேச்சுடன் வெளிக்கேற்றையும் மூடி தாழிட்டார். ஏழைகள் அவரைத் திட்டித்தீர்த்துச் சென்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏழைகளுக்குக் கொடுக்காத பணக்காரனும் ஒரு மனிதனா?"

"ஏழைகளுக்கு இரங்காதவனுக்கு கடவுளும் இரங்கமாட்டான்"

"பணக்காரர்களிடம் ஏழையின் பங்கும் உண்டு அதைக் கொடுக்காதவன் தன்னுயர்வையும் அழித்துவிடுபவன்" எனப்பலரும் பலவாறு சொன்னார்கள்.

தொழிலாளர் ராமமூர்த்தியை விலக்கியதிலிருந்து சுந்தரம் முதலாளிக்கு சனிதோஷம் பிடித்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

ஏழைகளுக்கு இரங்கும் தன்மை அவரிடமில்லையே! ஏழையாகப்பிறந்த அவரைப் பணக்காரன் ஆக்கிய ஆண்டவன் செய்த உதவியையும் மறந்தவன் ஆகிவிட்டான். சுந்தரம் முதலாளி என்றுதான் சொல்ல வேண்டும். ஆண்டவன் என்றும் பார்த்துக் கொண்டிருப்பானா?

பக்கத்து வயல்களெல்லாம் பாங்காக விளைந்திருந்தன. சுந்தரம் முதலாளியின் வேளாண்மை நெருப்பால் சுட்டாற்போலாகிவிட்டது.

தெரிந்த கிருமிநாசினி எல்லாம் தெளித்துப்பார்த்தார். சரிவரவில்லை. அறுவடை வருவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே நெல்மணி முழுக்க கருகிவிட்டது. எதனை செய்தாலும் இனி சரிவராது என்ற நிலை!

•

ஓரளவு பணம் கொடுத்து வயற்காரனையும் வீட்டுக்கு அனுப்பி விட்டார் சுந்தரம் முதலாளி. லட்சக்கணக்கில் அவர் செலவழித்ததிற்கு ஒரு சதமும் பயனில்லாமல் போய்விட்டது.

அரிசி ஆலைகள் இரண்டு மூடப்பட்டன. ஒன்று மட்டும் பாக்கியாக இருந்தது. அந்த அரிசி ஆலைக்கு நெல் கொள்வனவு செய்ய இருபது ஏக்கர் வயற்காணியை விற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த போக வேளாண்மை செய்வதற்குரிய மூலதனம் குறைவாக இருந்தமையால் மிகுதி காணியை குத்தகைக்குக் கொடுத்தார்.

இவ்விதம் சுந்தரம் முதலாளி பணக்காரர் பத்துப்பேரில் ஒருவர் என்ற நிலை மாறி சாதாரண பணக்காரர் நிலமைக்கு ஆளானார். இப்போது எவரையும் அவர் முறைத்துப்பார்ப்பதில்லை.

அவர் பணக்காரராக இருந்த போது ஒரு ஏழைக்குத்தானும் உதவியதில்லை.

அது மட்டுமல்ல தொழிலாளிக்கு நியாயமான ஊதியம் கொடுப்பதுமில்லை, இப்போது அவருக்கு பத்து ஏக்கர் வயற்காணி மட்டுமே எஞ்சியது. அரிசிஆலை, கார், லொறி, எல்லாம் பஞ்சாகப்பறந்து போயின ஏழைகள் இப்போது அவர் வீட்டுக்கு உதவி கேட்டுச் செல்வதில்லை. காரணம் அவர் இப்போது பணக்காரர் இல்லையே!

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணின் பணி...!

சும்மா சொல்லக்கூடாது அழகிலும் அழகி தர்ஷிகா.

ஒரு முறை பார்த்தவர்கள் மறுமுறை பார்க்க ஆசைப்படும் பளிங்குபோன்ற உடற்கட்டு. அழகாக இருப்பதால் அவள் பெருமைப்பட்டாள். தனது அழகால் அடையமுடியாததையெல்லாம் அடையலாம். பெறமுடியாததையெல்லாம் பெறலாம் எனக்கனவு கண்டாள்.

அதனால் சாதாரண தொழில் புரியும் ஆடவர்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

படித்த வசதியுள்ள, உயர்தொழில்புரியும் ஆடவர்கள் பலரின் நட்பு தர்ஷிகாவிற்கு கிடைத்தது. அவர்களோடு பழகுவதே தர்ஷிகாவிற்கு பிடித்தமான பொழுது போக்கு. கதைத்து சிரிப்பாளே சிரிப்பு சலங்கை ஒலியாகி நாற்றிசைகளிலும் சிதறி எதிரொலிக்கும்.

தர்ஷிகாவோடு பழகியவர்கள் பலர் திருமணம் செய்து விட்டார்கள். இன்னும் சிலர் குழந்தைகளையும் கண்டு கொண்டார்கள்.

"எண்ணம் வைத்து பழகுவதெல்லாம் நழுவிப்போகிறதே! பழகும் வாலிபர்கள் என்னை மறக்காமல் இதயத்தில் ஏற்றுவார்கள் என நினைத்தால் அவர்களுக்கு இதயமே இல்லாமல் போய்விடுகின்றது." என்ற ஏக்கமும் அவளுக்கு இருந்தது. மாதமும் வருடமும் நகர்ந்தே போயின.

தர்ஷிகாவின் மனதில் மகிழ்ச்சி தோன்றவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசையுடன் சாந்தனுக்கு வரைந்த காதல் கடிதத்திற்கு பதில் வராதது மட்டுமல்ல. அவனின் உறவே இல்லாமல் போய்விட்டது. இரண்டொரு வருடங்களாக அவள் வரைந்த காதல் கடிதங்களின் முடிவும் தோல்வியாகவே அமைந்தன.

இப்போதுதான் தர்ஷிகா சிந்தித்துப்பார்த்தாள். "இன்றுள்ள நிலையில் அழகை மட்டும் நம்பி இளைஞர்கள் வரமாட்டார்கள். அழகோடு பணத்தையும் அல்லவா பார்க்கிறார்கள். என்ன இல்லா விட்டாலும் பணம் மட்டும் இருந்தால் போதும். பறந்து வந்திருப்பார்கள். என்ன செய்வது? ஏழையாக பிறந்து விட்டேனே! துன்பத்தை அனுபவிக்கத்தானே வேண்டும்." என நினைத்து வேதனைப்பட்டாள் தர்ஷிகா.

அவளின் எதிர்பார்ப்பு எல்லாம் ஏமாற்றமாகவே முடிந்திருந்தன. பெற்றோர்கள் அவளுக்கேற்ற ஏழை வாலிபனை திருமணம் பேசி முடித்தார்கள்.

இதனையும் மறுத்தால் ஆயுள் முழுதும் தனியாக இருந்து நெருப்பாக தீயவேண்டுமே! துணை இல்லாமல் இருப்பவளுக்குத்தானே அதன் அருமை தெரியும். அந்தக் கொடுமை தெரிந்தவள் அல்லவா தர்ஷிகா.

கணவனுடன் இணைந்து வாழ்க்கையில் இறங்கினாள் தர்ஷிகா.

கணவனின் உழைப்பு அவளின் எதிர்பார்ப்புக்கள் எதனையும் பெற்றுக் கொள்வதற்கு போதாமல் இருந்தன. மீண்டும் வறுமைத்தனத்திற்கு வழி சமைத்தது. எண்ணம்போல உடைஉடுக்க முடியவில்லை. ஆசைதீர சுவையுணவு உண்ண முடியவில்லை. கழுத்துக்கு மூன்று பவுணிலாவது மாலை போட முடியவில்லை. அவளுடன் கல்வி பயின்ற ஏனைய பெண்கள் அனுபவிக்கும் வசதிகளைக் கூட தர்ஷிகாவால் அனுபவிக்க முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையிலும், கண்ணீரிலும் நாட்களைக் கடத்தினாள். நீண்டநாள் சிந்தனையின் பின்னர் கணவனுக்கு ஒரு பணிவான கடிதம் எழுதிவிட்டு பணிப்பெண் வேலைக்குப் பயணமானாள் பாலைவனநாட்டுக்கு.

---

ஒரு மணம் முடித்த பெண்ணுக்கு தனது கணவனின் பணிகளை செய்து முடிப்பதுதான் முதல் பணி.

ஆனால் தர்ஷிகாவோ வேற்று நாட்டில் வேற்று குடும்பத்தினரின் பணிகளை ஏற்று கூலிக்கு மாரடிக்கும் போக்கில் விரைந்து செல்கிறாள்.

கணவனின் பணியை செய்ய மறுத்தவள் இனிப்பணிப்பெண்ணாக இருந்து என்னபயன் காணப்போகின்றாள்.

(யாவும் கற்பனை)

(சூடாமணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்கோடுகள்!

படிக்கின்ற காலம் தொட்டு ரஸிகாவும் சலீமும் நெருங்கிய நட்புக்கொண்டிருந்தார்கள். சலீம் முஸ்லிம் என்றோ ரஸீகா தமிழ் என்றோ அவர்களுக்குள் சாதி வேற்றுமை கிடையாது.

நெருங்கிய நட்பு என்ற வரையறைக்குள் பழகுவார்கள். காதலோ கத்தரிக்காயோ கிடையாது.

அன்பிற்கு ஆணி வேராக இருப்பார்கள். உறவுக்கு இலக்கணமாக பழகுவார்கள். ஒற்றுமைக்கு சிகரமாக இருப்பார்கள்.

"சலீம் உனக்கிட்டக்கேட்டா காதலிக்கல்லே.... வெறும் நட்பு என்கிறாய். காதலித்தவர்களை விட இறுக்கமாக பழகுகின்றாயே! என்னிடம் மறைக்காதேடா! நீ அவளை காதலிக்கிறாய். தமிழ்ப்பெண் என்பதாலேயே என்னிடம் மறைக்கிறாய். அப்படித்தானே?" சலீமிடம் ஒரு நண்பன் கேட்டான்.

"காதலித்தால் சொல்வதற்கு என்ன? மனம் விரும்பியவள் தமிழாக இருந்தால் என்ன? காதலுக்கு கண்ணில்லை என்பார்கள். உனக்குமா தெரியாது? நான் ரஸீகாவை இதுவரை காதலிக்கவில்லை. இனிமேல் காதலாக மாறுமோ தெரியாது. நிச்சயமாக இப்போது காதலிக்கவில்லை. இறுக்கமான நட்பு மட்டும்தான்!" என்றான் சலீம்.

"சரி சரி என்னவானாலும் பண்ணு. இஸ்லாத்திற்கு இழுக்கு ஏற்படுத்தி விடாதே!" என்றான் சலீமின் நண்பன் முஸ்தகீம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடா இழுக்கு? எதுடா இழுக்கு? விரும்பிய பெண்ணை காதலிச்சு இஸ்லாத்திலே எடுத்து திருமணம் முடிக்கிறது இஸ்லாம் விரும்புற காரியம். ஆனா.... அந்த நோக்கம் இப்ப இல்லே. திருமணம் செய்ய வேண்டிய அவசியமுமில்லே" என்றான் சலீம்.

சலீம் கச்சேரியில் வாகன போக்குவரத்து அதிகாரியாக கடமை புரிகிறான். ரஸிகாவுக்கு தொழில் ஏதும் கிடைக்கவில்லை.

விடுமுறை நாட்களில் ரஸிகாவின் வீடு சென்று உரையாடி மகிழ்வான் சலீம். அன்றும் வழமை போன்று ரஸிகாவின் வீட்டுக்குச் சென்றான். ரஸிகாவின் முகத்தில் வழமையான புன்னகையை காணவில்லை. சோகத்தின் தழுவல் முகத்தில் தவழ்ந்தது. படபடவென பேசும் அவள் வாயே திறக்கவில்லை. மௌனமே ஆட்சி புரிந்தது.

சலீம்தான் மௌனத்தைக் கிழித்தான். "என்ன ரஸிகா பேச்சை காணோம். கோபமா" எனக்கேட்டான் சலீம்.

உங்களோடு நான் கோபப்படுவேனா? உங்கட ஆட்கள் முஸ்லிம் பொடியன்மார் கடிதம் போட்டிருக்கினம். உங்களோட வெச்சிருக்கிற உறவை விடச்சொல்லி. அத்தோட என்னையும் உங்களையும் மிச்சம் கூடாத மாதிரி எழுதியிருக்காங்க அவனுகள் சகோதரிகளோட பிறக்காதவனுகள். நாம காதலிச்சாலும் பரவாயில்லை. அன்பாக பழகுகின்றோம். இதைத் தெரியாம எப்படியெல்லாம் எழுதுறானுகள்" எனக்கூறி துக்கப்பட்டாள் ரஸிகா.

"இதற்குத்தானா? முகத்தைச் சுருட்டிவெச்சிருக்கீங்க. நரம்பில்லா நாக்கால வரம்பில்லாமப் பேசலாம். சுதந்திரமான பேனா கேவலமாக எழுதலாம். இதற்கெல்லாம் அஞ்சக்கூடாது. நமது அன்பு வற்றாத ஊற்று. காலம் உணர்த்தும். நமது உறவு மூச்சு அடங்கும் வரை தொடரும்" என்றான் சலீம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னவோ எனக்குப்பயமாகத்தான் இருக்கு சலீம். நாங்க ஏழைக. உங்கட ஆட்கள் யாரும் வந்து எங்களைப் பயம்காட்டலாம்." தைரியக்குறைவுடன் பேசினாள் ரஸிகா.

"பயப்படாதீங்க. நான் இருக்கிறேன். இந்த சதிகாரர்களின் கோழைத்தனத்திற்கு புறமுதுகு காட்டாதீங்க. முதுகெலும்பு இல்லாதவங்க. நேரில்வந்து பேச சக்தி இல்லாதவங்க. இப்படித்தான் அதையும் இதையும் எழுதி தள்ளுவாங்க. இந்தப்பூச்சாண்டி வேலைகளுக்கெல்லாம் பயப்படக்கூடாது" தைரியமூட்டினான் சலீம்.

சிறிது நேரம் இருவரும் மௌனம் சாதித்தார்கள். ரஸிகாவின் அம்மாவும் வந்து சேர்ந்து கொண்டார்.

"நீங்க இரண்டு பேரும் மிக அன்பாகப்பழகுறீங்க. சந்தோஷம். அன்புக்கு சாதி இல்லை. அன்புக்கு மொழியில்லை. அன்புக்கு இனமில்லை. இதற்கு உதாரணம் நீங்க ரெண்டு பேரும்" என்றாள் ரஸிகாவின் தாய் கமலா.

"ஆமாம் அம்மா. எங்கள் இருவரையும் நட்பாக இருக்கச்சொல்லித்தான் இறைவன் படைத்திருக்க வேண்டும்." என்றான் சலீம்.

ரஸிகாவிற்கு தோடம்பழம் என்றால் மிகமிக விருப்பம். சலீம் பத்துப்பழங்கள் வாங்கி வந்திருந்தான். அதை ரஸிகாவிடம் கொடுத்தான், ரஸிகா விருப்புடன் வாங்கிக்கொண்டாள்.

"எனக்குப்பயமில்ல சலீம். உங்கட ஆட்கள் உங்களுக்கு அடிக்க வருவாங்களோ என்றுதான் பயமாக இருக்கு" என்றாள் ரஸிகா.

எனக்கு அடிச்சுவிட்டு இருக்கவிடுவேனா? பொலிஸிற்கு எடுத்து மூட்டு மூட்டாகக்கழற்றுவன்" என்றான் சலீம். இருவரும் இடையிடையே இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனங்கள் பேசுவதும் நீண்டநேரம் மௌனத்தில் இருப்பதுமாக கால்நாளை கடத்திவிட்டு பிரிந்தார்கள்.

அவர்கள் உறவு பலவருடங்களுக்கு மேலாக நீடித்து வலுப்பெற்றுள்ளது. எவராலும் பிரிக்கமுடியாது.

வழமை போன்று அன்றும் வேலைக்கு சென்று வீடு நோக்கி வந்தான் சலீம். அவனது தந்தை தாஸிம் ஹாஜியார் சலீமை கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார். வழமையாக சலீம் வீட்டுக்கு வந்தால் தாஸிம் ஹாஜியார் மகனை பாசத்தோடு உற்றுநோக்கி புன்னகைப்பார். சலீமும் பதிலுக்கு புன்னகைத்து உடைகளை மாற்ற செல்வான். இன்று கண்கொட்டாமல் தந்தை பார்த்தது மட்டுமல்ல. புன்னகையை வீசவில்லை. கூரிய விழிகளினால் நோக்கினார்.

அது அம்பு போன்று சென்று சலீமின் நெஞ்சை துளைத்து நோவை ஏற்படுத்தியது.

"இதற்கு என்ன காரணம்" என மூளையை போட்டு குழப்பினான் சலீம்.

ரஸிகாவின் உறவைத்தவிர வேறு என்னவாக இருக்க முடியும்? தந்தை என்ன சொல்லப்போகிறார் எனப்பார்ப்போமே என்றிருந்தான் சலீம்.

"வாங்க மகன்" சலீமின் தந்தை தாஸிம் ஹாஜியார் அழைத்தார்.

இப்படி அழைத்தால் முக்கியவிடயம் ஏதாவது சொல்லப்போகிறார் எனப்பொருள் படும். அச்சத்துடன் தந்தையின் முன்னால் சென்று அமர்ந்தான்.

"சலீம் படித்து உத்தியோகம் எடுத்தாய். உனக்கு வயசும் வந்திற்று. இனி கண்ணோட கல்யாணம் செய்து வைக்க விரும்புறன். என்ன சொல்றாய்?" தாஸிம் ஹாஜியார் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னவாப்பா அவ்வளவு அவசரம்? இன்னும் இரண்டொரு வருஷங்கள் போகட்டும்" என்றான் சலீம்.

"வெட்கப்படாதே மகன் யாரையாவது விரும்பியிருந்தால் சொல்லு. நல்ல குடும்பம் என்றா செய்து வைக்கிறன்" என்றார் தந்தை தாஸிம் ஹாஜியார்.

சலீமால் எந்தப்பெண்ணையும் நினைத்துப்பார்க்க முடியவில்லை. வெறும் உறவை மட்டும் வைத்த ரஸிகாவை சுற்றிச்சுற்றியே அவனது எண்ணம் சுழன்றது.

ரஸிகா தமிழ் பெண். ஆனால் நல்ல குணம். இளகிய மனம். நிறைந்த அடக்கம். இவளை இஸ்லாத்தில் எடுத்து முடித்தால் என்ன? தந்தை போர்க்கொடிதான் தூக்குவார். அந்நிய மதத்தவனோடு உறவு வைப்பவரேயே வெறுப்பவர். என்னால் ரஸிகாவைத்தவிர வேறு எவரையும் மணம் செய்ய முடியாது. வெறும் உறவு திருமணத்தை நினைத்தவுடன் ரஸிகாவையே எதிர்கால நாயகியாக்கிவிட்டது. இன்னும் காதலென்ற கோட்டுக்குள் வராமலே அவளை விரும்பிவிட்டேன்." எனப்பல எண்ணினான் சலீம்.

"சலீம் என்ன யோசிக்கிறே? யாரையும் விரும்புகிறாயா?" விடாமல் கேட்டார் தாஸிம் ஹாஜியார். சலீமால் எப்படி பதில் பேச முடியும்!

"இல்லைவாப்பா ஒரு வருஷமாவது போகட்டும்" என்றான்.

"பரவாயில்லை. ஒரு வருஷம் முடிஞ்சபிறகு நான் பார்த்து வைச்சிருக்கிற பணக்கார பெண்ணை முடிச்சுக்கோ" என்றார். தாஸிம் ஹாஜியார். சலீம் வாய்திறக்கவில்லை. எப்படி திறக்கமுடியும்?

'ரஸிகாவை இஸ்லாத்திற்கு எடுத்து மனம் முடிக்க அவர்களது உறவினர்கள் சம்மதிப்பார்களா? அல்லது ரஸிகா வேறு யாரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலிக்கிறாளா? வெறும் அன்பாக மட்டும்தானே பழகுகின்றோம். அவள் விரும்பாவிட்டால் என் ஆசை நிறை வேறாது. வீண்கற்பனைகளை மனதில் வளர்க்கக்கூடாது. இனி மனதுக்குள் வைத்து குடைந்து கொண்டிருக்கவும் முடியாது. ரஸிகாவைச் சந்தித்து எண்ணத்தை எடுத்துச்சொல்ல வேண்டும்' என ஒரு முடிவுக்கு வந்தான் சலீம்.

ரஸிகா திறமையாகப்படித்திருந்தாலும் செல்வாக்கு அற்ற நிலையில் தொழில்பெற முடியாது போய்விட்டது. கிடைக்கின்ற சிறு தொழில்களுக்கு அவள் செல்வதுமில்லை!

"மகள் ரஸிகா உனக்கு வயதும் ஏறிற்றுப்போகுது. நீ நெனைக்கும் தொழிலும் கிடைக்கிதில்லே! இருக்கிற காசைச்சேர்த்து இந்த வீட்டையும் திருத்தி உனக்கு கல்யாணத்தை செய்துவைக்கலாம் என்று ஆசைப்படுறன். என்ன சொல்றாய் ரஸிகா?" என்று கேட்டாள் தாயார் கமலா.

"என்ன அம்மா அவசரம்? கொஞ்சம் பொறும்மா" கெஞ்சினாள் ரஸிகா.

"இனியும் நீ சொல்றத்தை கேட்டுக்கொண்டிருக்க முடியாது. யாரையாவது விரும்புறாயா?" கமலா விடாப்பிடியாக கேட்டாள்.

"நான் யாரை விரும்புறன்? சலீமைத்தவிர வேறு எந்த ஆணோடும் பேசுவதைக்கூட கண்டிருக்கிறாயா? அவர் முஸ்லிம் அவரைத் திருமணம் செய்ய முடியாது. ஆனா...." என்று இழுத்தாள் ரஸிகா.

"என்ன ஆனா ஆவன்னா" கமலா ஆத்திரத்துடன் கேட்டாள். ரஸிகா மௌனம் சாதித்தாள்! மனம் கற்பனை பண்ணியது.

"சலீம் ஒரு முஸ்லிம். வெறும் நட்பாகத்தான் பழகுகின்றோம். அவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை விரும்பினால் திருமணம் செய்யலாம். அதுவும் எப்படி திருமணம் செய்வது? ஊர் என்ன சொல்லும்? திருமணம் செய்தாலும் இந்த ஊரில் இருக்க முடியாது. நான் ஏன் இவ்வளவு கற்பனை பண்ண வேண்டும்? சலீம் காதலிக்காவிட்டால் இந்த எண்ணத்துக்கே இடமில்லை. அவரிடம் எப்படிக்கேட்பேன்?" சிந்தனையில் மூழ்கியிருந்தாள் ரஸிகா.

"ரஸிகா உன் கற்பனையை விடு. உனக்கு மூன்றுமாத காலம் அவகாசம் தாறேன். வீட்டை திருத்தப்போறன் அதற்குள் யாரையும் விரும்பினா சொல்லு" கட்டளை இட்டாள் கமலா.

ஒருவாரம் கடந்து சலீம் ரஸிகாவின் வீட்டுக்கு வந்தான். தனது எண்ணத்தை எப்படிச் சொல்வதென தெரியாது சுற்றி வளைத்துக்கொண்டே பேசினான். ரஸிகாவும் சொல்லிவிடுவோமா என்று எத்தனை தரம் முயன்றும் தோற்றுப்போனாள்.

சலீம் எப்படியும் சொல்வதென்ற முடிவோடு கதையின் திசையை மாற்றினான்.

"ஏன்தான் முன்னவர்கள் இனங்களை ஏற்படுத்தி மனிதர்களுக்குள் வேற்றுமையை வளர்த்தாங்களோ தெரியல்லே. மனிதன் என்ற இனம் மட்டும் இருந்தா பிரச்சினை இல்லாத பூமியாக உலகம் இருக்கும். விரும்பியவர்களை விரும்பியவர்கள் திருமணம் செய்து கொள்ளலாம். யாரும் தடுக்க போறதில்லே. இப்போ... நான் ரஸிகாவை திருமணம் செய்வதென்டா பெற்றோர் விடுவாங்களா?" எனச்சொல்லி நிறுத்தினான் சலீம்.

ரஸிகாவின் வெளிறிய முகம் சிவந்து போனது. மேனியில் ஒருவித படபடப்பு ஏற்பட்டது. மீண்டும் தொடர்ந்தான் சலீம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ரஸிகா நான் உங்களை காதலிக்கிறேன். உங்க விருப்பம் என்ன?" சலீம் கேட்டான். தயங்கியவாறு பேசத்தொடங்கினாள் ரஸிகா.

"நானும் உங்களை விரும்புறன். சொல்லத்தான் நெனச்சேன். முடியல்லே! நீங்க துணிந்து கேட்டீங்க. நம்காதல் காதலாகத்தான் இருக்கும். எப்படி திருமணம் செய்வது?" ரஸிகா கேட்டாள்.

"என்னுயிர் ரஸிகா. நீயும் என்னை விரும்பி விட்டாய். இனி என்ன கவலை.? வெறும் நட்பு காதலாகிற்று. எனது தந்தை எனக்கு திருமணம் செய்து வைப்பதற்கிடையில் உன்னை திருமணம் செய்து கண்டிக்கு அழைத்துப் போகப்போகின்றேன். மாறுதல் கிடைக்கும். ரஸிகா இஸ்லாம் மதத்திற்கு வர விரும்புகின்றாயா?" என சலீம் கேட்டான்.

"உங்களை அடைய உங்கள் சமயத்திற்கு வர எனக்கு பூரண சம்மதம்" என்றாள் ரஸிகா.

ரஸிகாவை ரம்ஸியா எனப்பெயர் மாற்றுவேன். உனது அம்மா இல்லாதது நல்லதாகப்போயிற்று. அவரும் ஒரு நாளும் சம்மதிக்கமாட்டார். எனக்கு இடமாற்றம் கிடைத்தவுடன் சொல்வேன். யாருக்கும் சொல்லாமல் தாயாருக்கு மட்டும் விளக்கமாக ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டு வரவேண்டியதுதான்! இனி சிந்திக்க ஒன்றுமில்லை. எனது எதிர்காலம் ரம்ஸியாவின் கையில் உனது வாழ்க்கை என் கையில்" என்றான் சலீம்.

"இப்போதே ரம்ஸியாவாக்கி விட்டீர்களே" என்றாள் ரஸிகா.

மாலை வேளை இனிமையான தென்றல் ரஸிகாவின் உள்ளத்தையும் ஊடறுத்துச்சென்றது. சலீம் தன்னை திருமணம் செய்தது போன்ற இன்பத்தினை அடைந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பலமான யோசனையா இருக்கு. எந்த நாட்டைப்பிடிக்கப்போகிறாய்?” என ரஸிகாவின் தாய் கமலா கேட்டாள்.

“நாட்டைப்பிடிக்க நான் யார்? என்பாட்டை கற்பனையில் பாடிப்பார்த்தேன்.” என்றாள் ரஸிகா.

“இரு இரு இரண்டு மாதத்திற்குப்பிறகு நான் உனக்கு கட்டுப் போடுகின்றேன்.” என்றாள் கமலா.

“சரியம்மா அதற்கு முதல் என்ன நடக்கும் என இறைவனுக்குத்தானே தெரியும்” என்றாள் ரஸிகா கதைத்து வீணடிக்க கமலா விரும்பவில்லை. வேலைகளைக் கவனித்தாள்.

சலீமுக்கு இடமாற்றம் கிடைத்து விட்டது. இன்னும் இருவாரத்தில் இதமான குளிர்வீசும் பிரதேசத்தில் சொகுசான வாழ்க்கையை ரஸிகாவோடு இல்லை ரம்ஸியாவோடு அனுபவிக்க போகிறான். இடமாற்றம் கிடைத்த செய்தியையும், தாயாருக்கு கடிதம் எழுதி வைத்து விட்டு ஓடி வரவேண்டிய திகதியையும் கடிதவடிவில் அனுப்பி இருந்தான் சலீம்.

இதனைப்படித்த ரஸிகா ஆனந்தவெள்ளத்தில் மிதந்தாள். கற்பனையால் சலீமைக் கட்டிப்பிடித்து முத்தமழை பொழிந்து மோகத்தில் திளைத்தாள்.

நாளும் வந்தது. சலீம் சிறிய மடலாக இருந்தாலும் சிந்திக்கக்கூடிய மடலாக எழுதி வைத்து விட்டு புறப்பட்டான்.

சலீம் சென்ற பின்னர் மேசையில் ஒரு கடிதம் கிடப்பதைக் கண்டு விரித்தார். மகன்தான் எழுதியிருந்தான்.

அன்புத்தந்தையே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னை வளர்த்து ஆளாக்கிய இறைவனுக்கு அடுத்த இதயஜோதியே எத்தனை வருடங்கள் கழிந்தாலும் உங்களை ஒரு நாளும் மறக்கமாட்டேன். ஆனால் உங்களுக்கு விருப்பமில்லாத வேறுசாதிப்பெண்ணோடு வாழப்போகிறேன் என்று இழிவாக நினையாதீர்கள். இஸ்லாம் கூறும் வழியில் நமது மதத்தில் எடுத்து மணம் செய்கிறேன்.

சிறுவயது முதல் என்னோடு அவளுக்கும் அவளோடு எனக்கும் அளவிலா அன்பு ஏற்பட்டு விட்டது. இந்த அன்பு காதலாக மாறும் என்று கனவிலும் நினைக்கவில்லை. அந்தக்காதல் கணவன் மனைவியாக்கிவிட்டது.

என்னை இன்று வெறுக்கலாம். பிறகு ஒருகாலம் எங்களை வரவேற்கலாம். அதுவரை கண்டியிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உங்களின் அழைப்புக்காக காத்துக்கொண்டிருக்கிறோம்.

உங்கள் மகன்

சலீம்

தாஸிம் ஹாஜியாருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இன்னும் சிலகாலம் சென்ற பின் அன்பு மகளை மருமகளை வரவேற்கத்தான் போகிறார்! அதுவரை இடைவேளை.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் இருக்கின்றான்!

அந்த தபாற்கந்தோர் திறப்பதற்கு அரைமணி நேரம்தான் இருந்தது. சிற்றூழியர்கள் தபாற்கந்தோரின் முன்னே வந்து கூடிவிட்டார்கள்.

சிலபொதுமக்கள் அவர்களுக்கும் முன்னர் வந்து விட்டார்கள். காசுக்கட்டளைகள் ஒன்பது மணிக்குத்தான் மாற்றிப் பெற்றுக் கொள்ள முடியும் எனத்தெரிந்தும் பணத்தின் அவசியத்தினால் எட்டு மணிக்கு முன்னர் கூடிவிட்டார்கள்.

இடமாற்றம் பெற்றுவந்த புதிய தபால் அதிகாரியைப் பற்றி உரையாடினார்கள்.

"என்ன இருந்தாலும் மனிதனுக்கு பொறுமை தேவை. யார் எதை கதைத்தாலும் எரிந்து விடுகிறாரே அது படித்தவன் இது முடிந்தவன் என்று கூறி முட்டாள்தனமாக நடக்கின்றாரே! ஒழுங்கான முறையில் அலுவலகத்தை நடத்த தெரியாதவர்கள் எத்தனை பட்டங்கள் பெற்றாலும் அவையெல்லாம் ஏட்டுச்சுரக்காய் போல்தான்! என்ன பயன்?" என்றான் சிங்காரவேல்.

மற்றவர்கள் சும்மா இருப்பார்களா? அருமை நாதன் வாயைத் திறந்தான்.

"நமது பணி கடிதத்தை உரியவர்களிடம் சேர்ப்பதுதானே! இதை ஒழுங்காக செய்கின்றோம். தேவை இல்லாத விடயத்தில் தலையிடுவதையும் தேவையில்லாதவைகளைப் பேசுவதையும் இனி விட்டுவிடக்கூடாது" எனக்கூறினான் அருமை நாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரியாக சொன்னைகள்" என்றான் சிங்காரவேல் அதே வேளை முக்கிய விடயங்கள் சொல்லத்தொடங்கினான் காதர்.

"நாமும் சிற்றூழியர்கள்தான் குமாரும் சிற்றூழியர்தான்! ஏன் அவனுக்கு மேலதிகாரி சலுகைகள் வழங்குகிறார். வேலைக்கு தாமதித்து வந்தாலும் எதுவும் சொல்கிறாரில்லை. லீவு கேட்டவுடன் கொடுக்கிறார். அவன் என்ன குற்றம் செய்தாலும் மன்னிக்கிறார்." ஆச்சரியக்குறியுடன் நிறுத்தினான் காதர்.

"குமார் சிற்றூழியர் என்றாலும் பணக்காரப்பிள்ளையாயிற்றே! இது உனக்குத் தெரியாதா? நமக்குத் தெரியாமல் ஏதும் கொடுத்திருக்கலாம்." எனக்கூறினான் அருமைநாதன். இம்மூவரும் உரையாடிக்கொண்டிருந்த போது இலிகிதர் பொண்ணுச்சாமியும் வந்து சேர்ந்தான்.

"ஒரு மண்ணும் தெரியாத இவரை இங்கு தபாலதிகாரியாக போட்டிருக்கிறார்கள். தபாலகம் குப்பை கொட்டும் இடமாகத் தெரிகிறது. மேசை, கதிரை எல்லாம் தூசி, புழுதி, கொழும்பிலிருந்து யாரும் வந்தால் இது தபாலகமா? அனாதை விடுதியா? என்றுதான் கேட்பார்கள். சிறிய பிரச்சினைகளைக் கூட எப்படி சமாளிப்பதென தெரியாமல் எங்களையும் குழப்புவார். சென்றவாரம் புத்தகங்கள், விண்ணப்பபத்திரங்கள் என்பன கொழும்பிலிருந்து வந்தன. அதை எங்கு எப்படி வைப்பதென தெரியாது. ஒரு கிழமை செலவிட்டார். வேலைகளையும் தடைசெய்தார்.

"வேலை செய்ய விட்டதுமில்லை. பத்திரங்களை அடுக்கியதுமில்லை நிர்வாக திறமையும் அற்றவர்" என்றார் பொன்னுசாமி.

எட்டு மணிபோல் தபாலகம் திறக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுமக்கள் முண்டியடித்துக்கொண்டு உட்சென்றார்கள். மணியோடர் மாற்றுவோரும் பெறுவோரும் வெளியே நின்று கொண்டிருந்தார்கள். கூட்டம் சிறிது சிறிதாகக் குறைய தொடங்கியது.

தபால் அதிகாரி தனது இருப்பிடத்தில் அமர்ந்தார். அலுவலகம் என்றும் பாராமல் புகைக்கத்தொடங்கினார். சிறிது நேரம் சிந்தித்தார். சுற்றிப்பார்வையை சுழலவிட்டார்.

வந்ததும் வராததுமாக ஏதாவது பத்து நிமிடங்கள் கதைக்காவிட்டால் உண்ட உணவு செரிக்காதோ என்னவோ விளாசித்தள்ளுவார். மற்றவர் அதைக்கேட்காவிட்டாலும் குறையாக நினைப்பார்.

பேச்சைக்கேட்ட வண்ணம் வேலையில் ஈடுபட்டார்கள்.

முனைத்தெருவுக்கு கடிதம் கொண்டு செல்லும் தபால் சேவகன் கடுகதி கடிதங்கள் இரண்டை உரியவர்களிடம் சேர்ப்பிக்க தவறிவிட்டான். எவ்வளவோ கஷ்டப்பட்டும் முகவரியாளரை கண்டுபிடிக்க முடியவில்லை. வேறு என்னதான் செய்ய முடியும்?

தபாலதிகாரியிடம் கொண்டு சென்று கொடுத்தான்.

"உனது கடமையை நீ செய்ய வேண்டும். திரும்ப கொண்டு வந்து கொடுத்தால் வேலை செய்ய முடியாதென்று அர்த்தம். நான் எனது கடமையை செய்ய வேண்டும். என்னை குறை நினைக்கக்கூடாது" என எரிந்து விழுந்தார்.

உயர் அதிகாரிக்கு கடிதம் எழுதி கடும் நடவடிக்கை எடுத்தார். உடனே அவனுக்கு தற்காலிக வேலை நீக்கக்கடிதம் கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்திரத்தோடும் துக்கத்தோடும் வீடு சென்றான். இந்த ஆத்திரத்தில் உயர் அதிகாரிக்கு "பெட்டிசன்" போட்டான்.

உயர் அதிகாரிகள் அந்த தபாற்கந்தோரை நோக்கி படையெடுத்து வந்தார்கள். புத்தகத்தில் கையெழுத்துப் போட்டும் தபாலதிகாரி அலுவலகத்தில் இருக்கவில்லை! இதனால் தபாலதிகாரிக்கு நிரந்தர வேலை நீக்க கடிதம் கிடைத்தது.

தற்காலிக வேலை நிறுத்தம் செய்யப்பட்ட தபால் சேவகனுக்கு விசாரணையின் பின்னர் மீண்டும் வேலை வழங்கப்பட்டது. நேர்மையின் சின்னமான அவன் இறைவனைப் புகழ்ந்து கொண்டான்.

(யாவும் கற்பனை)

(நன்றி : தினகரன் வாரமஞ்சரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையாத மேகங்கள்

காலை ஆறு மணி. தேநீர்க்கடைகள் கூட இன்னும் திறக்கவில்லை. பஸ் தரிப்பில் நாலைந்து மனிதர்கள் நின்று கொண்டார்கள். தெருநாய்களும் மாடுகளும் நிறைய நின்றன.

அந்த நாளில் என்றால் அதிகாலை நாலரை மணிக்கே அக்கரைப்பற்றில் இருந்து பேரூந்துகள் புறப்படத்தொடங்கும். மனிதர்களும் கூட்டம் கூட்டமாக பயணத்தைத் தொடங்குவார்கள். தேநீர்க்கடைகள் மூடுகிறார்களா என்பது தெரியமாட்டாது. எந்த நேரமும் திறந்த மாதிரியே இருக்கும்.

பயங்கரவாதம் ஒன்று உருவான பின் சூரியன் ஏறி முகத்தை பார்த்தவுடன்தான் மனிதர்கள் தெருவுக்கு வருவார்கள்.

பாதுகாப்பு படையினருக்கும் பயம். புரட்சி வாதிகளுக்கும் பயம். பொதுமக்களுக்கும் பயம் – பயம் இல்லாதவர்கள் கிடையாது. பிரயாணம் தொடங்கினால் வீடு வந்து சேருவோம் என்று நிச்சயமாக கூறமுடியாது. மட்டக்களப்பு பஸ்ஸை எதிர்பார்த்து நிறையப்பேர் நின்றார்கள். ஏழுமணியாகியும் வரவில்லை. மட்டக்களப்புக்குச் செல்பவர்களின் முகத்திலே பரபரப்பு. ஊருக்குப் போய் சேரவேண்டும் என்று நினைத்தவர்களும் அலுவலகத்திற்குப் போய் சேரவேண்டும் என்று நினைத்தவர்களும் ஒன்றாக கூடிவிட்டார்கள்.

"ஆறரை மணி பஸ் வரவில்லையே. பிரேக் டவுனா" ஒரு முதியவர் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் வரல்லேன்னா காரணம் ஏதும் இருக்கும். மட்டக்களப்புல குண்டுவெடிச்சதாம் என்டும் கதைக்கிறாங்க" என்றான் ஒரு வாலிபன்.

"குண்டுவெடிச்சா மட்டக்களப்பு பஸ் வராதுதான். இன்னும் கொஞ்சம் பார்ப்போம்" என்றார் இன்னொருவர்.

சிறிது நேரத்தில் மட்டக்களப்பு செல்வதற்கான பஸ் வந்தது. பஸ் கண்டக்டர் ஏதோ சொல்லி சத்தம் இட்டார். எல்லோரும் பஸ் அருகே சென்றார்கள்.

"மட்டக்களப்பு பாலத்தடியில் குண்டு வெடிச்சதாம். ஏன் நாம போய் மாட்டுப்பட? நாங்க இன்டைக்குப் போகமாட்டோம். வாகனம் எதுவும் போகமாட்டா. மட்டக்களப்பு போறவங்க இருந்தா திரும்பி வீட்டுக்குப் போங்க. காத்து நிப்பீங்க என்று இதச்சொல்லத்தான் வந்தோம். நாங்க வாறம்" என்று கண்டக்டர் கூறிய பின் பேரூந்து டிப்போவை நோக்கி விரைந்தது.

"குண்டு வெடிச்சு ரெண்டு எஸ். ரி. எப். செத்துப்போனா இந்நேரம் எத்தனை இளம்பொடியன்மாரை பிடிச்சு சம்பல் போட்டானுகளோ? தெருவால போறவங்க எல்லோரையும் புலி என்றுதானே பிடிச்சிருப்பானுகள். பாவம் அப்பாவி சனங்கள். என்டைக்குத்தான் இந்த நிலை மாறுமோ. என்டைக்குத்தான் சமாதானம் நிலவுமோ?" என்று கூறி பெரியவர் ஒருவர் பெருமூச்சு விட்டார்.

மட்டக்களப்பு செல்வதற்காக பஸ் தரிப்பிடம் வெறிச்சோடிக்காணப்பட்டது. இரண்டு நாய்கள்தான் சுதந்திரமாக படுத்திருந்தன.

மட்டக்களப்பு இன்று எப்படி இருக்கும் என சற்று சிந்தித்துப்பார்த்தான் சிவராஜன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சில நேரங்களில் இளம்பெண்களைக் கெடுத்தும் விடுகிறானுகள். சாகடித்தும் விடுகிறானுகள். மிருகங்கள் புலி என்று சொல்லிக்கொண்டு இளம் பொடியன்களையும் சாகடிக்கிறானுகள். சிலர் கடைக்குள் போய் சாமான்களையும் அல்லவா தூக்கிட்டுப்போறானுகள். பணம் கேட்டால் உதைதான் கிடைக்கும்!' என்று நினைத்து சிவராஜன் தேநீர் அருந்தச் சென்றான்.

அன்றிரவு அக்கரைப்பற்றில் பலமான இரு குண்டுகள் வெடித்தன. சத்தம் காதை செவிடாக்கியது. என்ன நடந்தது? எங்கே வெடித்தது? என்பது யாருக்கும் தெரியாது. இரவு நேரம் யார் வீட்டை விட்டுப்போவார்கள்? இரவு பயத்தில்தான் குளிக்கிறது. விடியும் வரை பொறுத்திருந்துதான் அறிய வேண்டும்!

முன்னொருகாலத்தில் ஏதாவது சம்பவங்கள் நிகழ்ந்திருந்தால் அதிகாலை எழும்புவதற்கு முதல் செய்தி கிட்டி விடும். யுத்தம் நடக்கிற அந்த வேளையில் விடிந்து வானம் வெளுத்த பிறகுதான் ஏதாவது தெரியவரும்.

விடிந்து விட்டது. பஸ்தரிப்பில் பாரிய இரண்டு குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டதாம்! எந்த சேதமும் ஏற்படவில்லையாம்!

"புலிகள் இப்படிக்குண்டுகள் வைக்கப்போறதில்லே. ராணுவம்தான் பயம்காட்ட வச்சிருக்க வேணும். புலிகள் வச்சிருந்தா பொலீஸ், ராணுவம் செத்திருக்க வேணும். நடு இரவில் யாரும் இல்லாத இடத்திலே கட்டிடங்களுக்கு சேதமில்லாது புலிகள் செய்யப்போவதில்லை. இப்படி ராணுவம் செய்தாலும் புலிகளின் பேரில் செய்தி வரும்" என்றான் சிவராஜன்.

"புலிகளாலும் பொதுமக்களுக்கு கஷ்டம். நேற்றுமட்டக்களப்பில் புலிகள் குண்டு வைச்சிற்று ஓடிருப்பாங்க. பொதுமக்களை இவனுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகடிச்சிருப்பானுகள். ராணுவம் மட்டுமல்ல. புலிகளும்தான் இந்த நிலைக்குக் காரணம்" என்றான் இன்னொரு பொதுமகன். எப்படியோ யுத்தம் இருக்கும் வரைக்கும் மக்களுக்கு கஷ்டம்தான்!

மேலும் இரண்டுநாட்கள் கடந்தன. நள்ளிரவு அக்கரைப்பற்று அம்பாறை வீதிப்பக்கம் பாரிய குண்டு ஒன்று வெடித்தது.

அதன்பின்னர் ஊரே இருண்டுவிட்டது. மின்சாரம் அணைக்கப்பட்டது. துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகப் பொழிந்தன. ஊரே அல்லோல கல்லோலப்பட்டது. சந்தியில் இருந்த முஸ்லிம்கள் ஊருக்குள் வந்து ஒதுங்கிக் கொண்டார்கள். ஒரு மணித்தியாலம் வரை துப்பாக்கி ஓயாமல் வெடித்தது. என்னென்ன பெறுபேறு எனத்தெரியாத பொதுமக்கள் பீதியுடன் அன்றிரவைக் கடத்தினார்கள். ஒழுங்காகத் தூங்காமல் விழித்தார்கள்.

மின்சார ரான்ஸ்போமர் தகர்க்கப்பட்டதாம்! துரத்தி துரத்தி புலிகளை ராணுவத்தினரும் பொலிஸாரும் சுட்டார்களாம்.

தெருவால் வந்து போன மனிதர்கள்தான் அகப்பட்டுச் செத்தார்களாம். குண்டு வெடித்ததன் பின் புலிகளுக்கு என்ன வேலை? பாதுகாப்பு படையினர் வர முதல் அவர்கள் பல கிலோமீற்றருக்கு அப்பால் சென்றிருப்பாரகள்.

ராணுவத்தினரும் புலிகளும் யுத்தம் செய்ய அப்பாவிப் பொதுமக்கள் அல்லவா பலியாகிவிடுகிறார்கள். பாவம் கணவனை இழந்த விதவைகள். பெற்றோரை இழந்த பிள்ளைகள். மனைவியை பறிகொடுத்த வாலிபர்கள். யுத்தம் நின்று சமாதான பூமியாக மாறமாட்டாதோ என்ற ஏக்கமே எல்லோர் நெஞ்சங்களிலும் இழையோடியது.

காலை எட்டுமணிக்கு முதலே ராணுவத்தினர் சாரிசாரியாக தமிழ்ப்பகுதிக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுந்தார்கள். யாராவது உள்ளே போகிறார்களா? வெளியேறுகிறார்களா? என்பதைப் பார்த்து தடுக்க ஒவ்வொரு சந்தியிலும் எட்டு பத்து எஸ். ரி. எப். நின்று கொண்டார்கள். உள்ளே சென்ற இராணுவத்தினர் ஒவ்வொரு வீடாகப்புகுந்து இளம்வாலிபர்களை இவ்விருவராகப்பிணைத்து அழைத்துக் கொண்டு போனார்கள். சிலர் வீடுகளிலுள்ள பெண்களிடம் கைவரிசையைக் காட்டினார்கள்.

கன்னத்தைக் கிள்ளினார்கள். மேனியைத் தொட்டார்கள். அவ்வளவுதான் பெண்கள் ஓடிப்போய் அறைக்குள் புகுந்து தாழிட்டார்கள்.

இளம்பெண்களைக் கண்டால் "ஒயா கேணு கொட்டி நேத" என்று கேட்டார்கள்.

"மேயா... கொந்த வடு மச்சாங். துன்நொத்மம கொந்தவெட தெனவா. வளன்ன கொச்சர லஸ்சனய்" என்றான் எஸ். ரி. எப் ஒருவன்.

"வளவள இன்ட புளுவந்த? அபி பிரியிளமய் அரகேன யன்ட ஓன. பரக்குனோத் லொக்கா பணினவா" என்றான் அடுத்தவன்.

அந்த வீட்டை விட்டு அடுத்த வீட்டுக்குச் சென்றார்கள்.

"மச்சான் வடு வளலா வேட நே. வேளாவ ஆவொத் வெட தென்ட புழுவன்" என்றான் மிருகத்தனமான எஸ். ரி. எப் மீண்டும் அவனே பேசத்தொடங்கினான்.

"கல்முனை பத்த வெடகரன கொட்ட கொட்டி வோம்ப கெவ்வா. அள்ளப்பு கெதற கிஹிலா வயச தாசயய் கேனுளமய் கொட்டி கியலா கெனாவா. குவாட்டஸ் அரகென மமய் யாழூவ துன்தனக் கொந்த வெட துன்னா. கேணு பண நதுவ ஹிடியா. காமவீம தீளா அனித்தவச ஆயி வெட தீளா எழவ்வுவா. பொஸ் தக்கொத் அபி எவரய்" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதம் எத்தனை அப்பாவிப்பெண்களின் கற்பை ஏலத்தில் விலைபோட்டு விட்டது. எத்தனையோ பெண்கள் பைத்தியமாகி விட்டார்கள்.

கற்பை இழந்து வாழ்வது பெரிதல்ல என நினைத்த எத்தனையோ பெண்கள் தற்கொலை செய்து கொண்டார்கள்.

ஐம்பது பேருக்கு மேல் அழைத்துக்கொண்டு பொலீஸ் நிலையம் புறப்பட்டார்கள் ராணுவத்தினர். பாவம்! அதிலே படிக்கின்ற மாணவர்கள், அரச தொழில்புரியும் ஊழியர்கள், பெற்றோரை இழந்த அநாதைகள் ஆகியோரும் அடங்குவர். அரச தொழில் புரிவோரின் விபரங்களை உறுதி செய்து கொண்டு அவர்களை விட்டார்கள். திடகாத்திரமாக உள்ள இளைஞர்களை வெலிக்கடைக்கு அனுப்பிவிட்டார்கள்.

பாவம் தமிழர்கள்! தமிழர்கள் என்றால் புலியா? தமிழர்கள் எல்லாம் புலி என முடிவு எடுக்கும் நிலை என்று மாறுமோ அன்றிலிருந்து அமைதி ஏற்பட இடமுண்டு.

ராணுவமும் புலியும்தான் யுத்தத்திற்கு முடிவுரை எழுதாமல் இருக்கின்றார்கள். மக்கள் முடிவின்றி துயர்வெள்ளத்தில் மூழ்கி தத்தளிக்கிறார்கள். ஆளுகின்றவர்களும் மேலும் மேலும் நாட்டை ஆழத்தான் நினைக்கிறார்கள். சமாதானத்தைத் தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள் இல்லை.

இறைவா நீயும் கண்மூடிக்கொண்டா இருக்கிறாய்? கன்னிப் பெண்களை கதற கதற கற்பழிக்கின்றார்களே! மாணவர்களை சாகடிக்கிறார்களே!

சந்திரா பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட பெண்தான்! கணவனை இழந்து தனியாக பிள்ளைகளுடன் தவிக்கிறாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் சுகுமாரைக்காதலித்துத்தான் திருமணம் செய்தாள். இந்தக்காலத்தைப் போல் சொத்துசுகங்களைப் பார்த்து காதலிக்கத்தொடங்கியவனல்ல சுகுமார். சந்திராவின் இதயத்தில் எழுந்த அன்பே அவனுக்கு சொத்தாகியது. அது ஒன்றே போதுமென்று காதலித்தான். அவர்களின் வாழ்க்கை பத்து வருடங்கள் பசுமையாக கடந்தது. வருகின்ற வருமானத்தைக் கொண்டு வாழ பழகிக் கொண்டார்கள். பத்து வருடங்களின் பின்னர் தோன்றிய பயங்கரவாதம் அவளது அன்புக்கணவனைச் சாகடித்து விட்டது,

அன்று.... மாலை வேளை!

கடைத்தெருவுக்கு மரக்கறி வாங்கப்போயிருந்தான் சுகுமார். மரக்கறி வாங்கி கையில் எடுக்கும் போது பத்துயார் தொலைவில் பயங்கரமான குண்டு ஒன்று வெடித்தது.

ஐந்து பொலிஸ்காரர்கள் அவ்விடத்திலே மாண்டார்கள். ஏழு பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு காயம்.

தெருவெங்கும் ஈபோல மேய்ந்தார்கள் ராணுவத்தினர். இளைஞர் சுகுமாரை அவ்விடத்திலேயே இரையாக்கினார்கள். சுகுமாரை ராணுவ லொறியில் தூக்கிப்போட்டார்கள். சுகுமாரைப்போல மேலும் சில இளைஞர்களை அவ்விதம் சுட்டு தூக்கிப்போட்டார்கள். கண்டவர்கள் சந்திராவிடம் ஓடி வந்து கூறினார்கள்.

"என் இதய தெய்வமே! ஏழையான எனக்கு வாழ்வு தந்த வள்ளலே இதயமே இல்லாதவர்களின் துப்பாக்கிக்கா இரையாக வேண்டும்? எனது வாழ்விற்கு இனி யார் துணை? தெய்வமே எனது இரு குழந்தைகளுக்கும் யார் கதி?" என்று ஒப்பாரி வைத்தாள் சந்திரா. அவளுக்கு மட்டுமல்ல அவளைப்போல ஆயிரம் ஆயிரம் தமிழ்ப்பெண்களுக்கு இதுதான் கதியாகி விடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரா உயிருக்கு உயிராக காதலித்து கைப்பிடித்த கணவன் சுகுமாரையும் இழந்து விட்டாள். அவளுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவளுக்கு வயது பதினைந்தாகிவிட்டது. அடுத்தது ஆண் வயது பத்து. சுகுமாரின் ஓய்வூதியம் மூலமாக மூவரின் காலமும் போய்க்கொண்டிருக்கின்றன.

சந்திரா அவளின் வாழ்க்கைக்காக ஏங்கி கவலைப்பட்ட காலம் போய்விட்டது.

தற்போது மகள் ரேவதிக்கு எப்படி வாழ்வினை அமைத்துக் கொடுக்கலாம் என்பதிலே அவளின் முழுக்கவனமும் இருந்தது.

இரவு பகலாக இதுதான் சிந்தனை. ஆண் பிள்ளையைப் பற்றி அதிகம் கவலைப்படவேண்டிய அவசியம் இல்லை!

"பாவம் ரேவதி" என்று பெருமூச்சு விட்டாள் சந்திரா.

"வீட்டை புதிதாகத்தான் கட்டமுடியவில்லை என்றாலும் பழைய வீட்டையாவது திருத்தி கூலிவேலை செய்பவனையாவது திருமணம் முடித்து வைப்போம் என்றாலும் அதற்கும் முடியவில்லையே! என்ன செய்வது?" என நினைத்து நினைத்து நெஞ்சுருகினாள்.

ஒரு காலத்தில் "காதல் நிறைவேறி சுகுமாருடன் இன்பமாக காலம் கடத்தமாட்டேனா" எனத்துக்கப்பட்டாள். காதல் நிறைவேறியது.

சுகுமாருடன் நீண்டகாலம் வாழ அவளுக்கு கிடைக்கவில்லை. எதிர்காலம் இருண்டது மாத்திரமன்றி தனது பிள்ளைகளின் எதிர்காலமும் கேள்விக்குறியாகி நிற்கிறது. இந்த உலகை ஆட்டிப்படைக்கும் கோர யுத்தம்தான் காரணம். சமாதானம் என்கின்ற பேச்சு வரும் போது மக்கள் எவ்வளவோ ஆனந்தப்படுகிறார்கள். நாட்கள் நகரும் போது சமாதானப்பேச்சு யுத்தத்தில் முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் கண்ணீரும் கஷ்டமும்தான் தொடர்கதையாகி மனவடுக்களை ஏற்படுத்தி விடுகின்றன.

சிந்தனையில் இருந்தாள் சந்திரா. சற்றுத்தொலைவில் துப்பாக்கிகள் முழங்கும் சத்தம் கேட்டன. அதே நேரம் சில அழுகுரல்களும் கேட்டன. இதுதான் இன்றைய மாந்தர்கள் அடிக்கடி கேட்கும் ஓசை.

இந்த பாழாய்ப்போன உலகத்தில் நாயாக மனிதன் சாவதைப்பார்ப்பதை விட செத்துத் தொலைவது மேல் என முதியவர் பலரும் பேசிக்கொண்டார்கள். சிறிது நேரம் நிம்மதியாக இருந்த மனிதர்களுக்கு எங்காவது துப்பாக்கி, குண்டுகளின் சத்தம் கேட்டால் நிம்மதி காற்றில் மறைந்து விடும். எங்கே, என்ன நடக்கிறது என்று மனம் போராட தொடங்கும்.

"எங்கே நமது வீட்டுக்கும் வந்து பிள்ளைகளை அல்லது கணவனை அள்ளிக்கொண்டு போய்விடுவார்களோ? அல்லது சுட்டு தொலைப்பார்களோ?" என்ற சந்தேகக்கோடு பெண்களின் முகத்திலே விரியும்.

சந்திராவின் ஆண்மகனுக்கு வயது பத்து. பெண்பிள்ளைக்கு வயது பதினைந்து.

சந்தேகத்தின் பேரில் அழைத்துக் கொண்டு போனாலும் போவார்கள். யார் என்ன செய்ய முடியும்? அதனால் சந்திரா தன்மகள் ரேவதியை வெளி மலசலகூடத்திற்குள் ஒளித்துக் கொள்ளுமாறு கூறினாள். எங்காவது குண்டு வெடிச்சத்தம் கேட்டால். எல்லோருக்கும் பயம்.

"ஏய் உன் மாப்பிள்ளை எங்கே?" எனக்கேட்டவாறு உள்ளே புகுந்தான் குண்டான ஒரு ராணுவ வீரன். சந்திரா பயத்தினால் நடுங்கினாள்.

"செத்திட்டார்" என்றாள் சந்திரா. "நீங்கதான் சாகடிச்சுப் போட்டீங்க" என்று சொல்லியிருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கட பொடியன் புலிதானே?" மீண்டும் கேட்டான்.

"இவர் மட்டும்தான் எனக்குப்பிள்ளை. பத்து வயசு. அஞ்சு படிக்கிறான்." என்றாள் சந்திரா.

"அப்போ பெண்பிள்ளை புலி இருக்கா?"

"இல்லீங்க"

"காம்பறா ஒக்கம வளன்ட" என்றான் வந்தவர்களில் பதவியில் உயர்ந்தவன். வீட்டைச்சுற்றிப் பார்த்து விட்டு போய்விட்டார்கள் அதன்பின்னர்தான் சந்திராவிற்கு நிம்மதியான மூச்சு வந்தது. ஒருவன் போய் மலசலகூடத்தைப் பார்த்திருந்தால் என்ன கதி? புலியென்று இழுத்துக்கொண்டு போயிருப்பான். இப்படியாக செத்துச்செத்துப்பிழைக்கின்றது பெண்கள் கூட்டம்.

யுத்தம் என்று வந்து விட்டால் இதுதான் நிலை! ராணுவத்தையும் பிழை சொல்ல முடியாது. விடுதலைப்புலிகளையும் பிழை சொல்ல முடியாது. அரசு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளில் இறங்க வேண்டும்.

அக்கரைப்பற்றுப்பிரதேசத்தைப் பொறுத்தமட்டில் ஒரு மாதத்தில் இரண்டு தரம் மூன்று தரம் குண்டுகள் வெடிக்கும்.

அதன் பின் ஊர் சிதறும். மக்கள் பீதியுடன் தெருவை நோக்குவார்கள். எந்த நேரத்திலும் எவரும் கைது செய்யப்படலாம்.

யுத்த மேகம் கலையாமலே மேலும் மூன்று வருடங்கள் கடந்தன. சந்திராவின் மகனுக்கு பதின் மூன்று வயதாகியது. அவனை இயக்கத்தில் சேர்ப்பதற்காக புலிகள் பெருமுயற்சி செய்தார்கள். பலனளிக்கவில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தம்பிமாரே... யுத்தத்தால் அன்புக்கணவனை பறிகொடுத்தவள். ஆதாரம் ஏதுமின்றி குமர்ப்பெண்ணையும் வைத்துக்கொண்டு கண்ணீரில் மிதக்கின்றேன். எனது மகனையாவது படிப்பித்து ஒரு உத்தியோகத்தில் சேர்த்து அவன் மூலமாக எனது மகளை கரைசேர்க்க எண்ணியுள்ளேன். எனது கஷ்டம், எனது குடம்பத்தின் நிலை தெரிந்த நீங்கள் என் பிள்ளையை விட்டு விட்டுப் போய்விடுங்கள்.” என்று சொல்லி அழுதே விட்டாள்.

இப்படியாக நாட்கள் நகர்ந்து கொண்டிருக்கும் போது ஒரு நாள் காலை ஒன்பது மணிபோல் அக்கரைப்பற்றுப் பொதுச்சந்தையில் பாரிய குண்டொன்று வெடித்தது.

மக்கள் சிதறி ஓடினார்கள். மீன்கள் சந்தை முழுக்க சிதறிக்கிடந்தன. சில துவிச்சக்கர வண்டிகள் பாதி அங்கங்கள் சிதைந்த வண்ணம் தரையில் தூங்கிக் கிடந்தன.

சந்தையின் முன்புறத்தில் மனித ரத்தங்கள் இலவசதானத்தை நிறைவு செய்தன. மின்வெட்டும் நிமிடங்களில் மக்கள் எல்லோரும் மறைந்து விட்டார்கள். இரு மீன் வியாபாரிகள் இரத்தத்தில் குளித்து நித்திரை செய்து கொண்டிருந்தார்கள். காயப்பட்டவர்கள் வைத்தியசாலையின் வாடிக்கையாளானார்கள்.

பொலீசும் ராணுவத்தினரும் ஈபோல மீன்சந்தையை மொய்த்தார்கள். இறந்து கிடந்த வாலிபரை காலால் உதைத்துப்பார்த்தார்கள்.

“இறந்த பின்னும் ஏனிந்த சந்தேகம்”? ஊரார் பேசிக்கொண்டார்கள்.

இன்னும் சில மணித்தியாலங்களில் ராணுவத்தினர் ஊர்களுக்குள் புகுந்து இளைஞர்களை இழுத்துச் செல்லப்போகிறார்கள். அடியும் உதையும் கிடைக்கும் சில இளைஞர்களுக்கு இறப்பும் இரங்கலுறையும் நேரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகள் காட்டிற்குள் புகுந்து விடுவார்கள். அப்பாவிகள்தான் மாட்டிக்கொள்வார்கள்.

சந்திராவின் அடுத்த வீட்டிற்கு அடுத்த வீட்டில் ராணுவத்தினர் புகுந்து அங்குள்ள பதினைந்து வயது பையனை பிடித்துக் கொண்டு அடுத்த வீட்டிற்கு வந்தார்கள்.

சந்திராவின் நெஞ்சு "டிக் டிக்" என்று வேகமாக அடித்துக் கொண்டது. அடுத்தது சந்திராவின் வீடுதான்! அவர்கள், வீடு மாத்திரமன்றி சுற்றுப்புறம் மலசலகூடம் எல்லாம் பார்த்தார்கள். இதனால் எவரும் ஒழிந்து கொள்ளவும் வசதியில்லாமல் போனது.

சந்திராவின் வீட்டுக்கதவை உதைத்துத் திறந்தார்கள். சந்திரா முன்புறம் நின்று கொண்டாள்.

"கோ ... ஒயாகே புத்தா?" எனக்கேட்டுக்கொண்டே வீட்டிற்குள் பார்த்தான். சந்திராவின் பதின்மூன்று வயது மகன் நடுங்கிய படியே நிற்பதைக் கண்டு கொண்டான்.

"என்ட கொட்டிப்புத்தா" என்று கூறி அவனைப் பிடரியில் பிடித்து தள்ளிக் கொண்டு போனார்கள். ஒருவன் ஓங்கி முதுகில் ஒரு போடும் போட்டான். அழுது கொண்டே போனான்.

"கடவுளே எங்களுக்கு இதுதானா சோதனை? தமிழர்களுக்கு நிம்மதியே இல்லையென்றால் எங்களை ஏன் தமிழர்களாகப்படைத்தாய்? அன்புக்கணவனை இழந்து வாழ்வை இழந்து தவித்தேன். பிள்ளைகளின் எதிர்காலத்திற்காவது இருப்போம் என்றால் என் கண்மணியான மகனைப் பிடித்துக் கொண்டு போய்விட்டார்களே! அவனையும் இழந்து என்னால் எப்படி வாழ முடியும்? ஏன் வாழ வேண்டும்? எனது மகளின் எதிர்காலத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் மூலம் பார்க்கலாம் என்றல்லவா ஆசைப்பட்டேன். அந்த மகனை இனி எங்கே காண்பேன்" ஒப்பாரி வைத்தாள் சந்திரா.

மாலை நேரம் மயங்கிக் கொண்டு வந்தது. ஊரெங்கும் பேயடித்த காடுபோல மௌனம் முகத்தை நீட்டியது.

அன்றிரவை தூக்கமின்றிக்கடத்தினார்கள் சந்திராவும் ரேவதியும்! இவர்கள் மட்டுமா? இன்னும் எத்தனையோ ரேவதிகள் தூக்கமின்றி நிம்மதியின்றி வெந்திருப்பார்கள். விரைவாக விடியாதா என்று துடித்துக் கொண்டிருந்தார்கள்.

அதிகாலை சந்திராவும் ரேவதியும் எழுந்து கொண்டார்கள். அவர்களைப் போல் அக்கம் பக்கத்தில் உள்ள இளைஞர்களை பறிகொடுத்த வீட்டிலுள்ளவர்களும் எழுந்து கொண்டார்கள். புலிகளுக்கும் ராணுவத்திற்கும் பொதுவாக ஏசினார்கள்.

"யுத்தத்தை இருவரும் நிறுத்தி சமாதானத்திற்கு வந்தால் என்ன? பொதுமக்கள் அழிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இருதரத்தாரும் எண்ணிப்பார்த்தார்களா? யுத்தத்தால் அழிவதை விட ஆவது ஒன்றுமில்லை" என்ற பொருள்பட பேசினார்கள்.

பொலிஸ் நிலையத்தை நாடி பலரும் சென்றார்கள். பிடிபட்ட இளைஞர்களில் சிலர் அடிபட்டு மிதிபட்டு சோர்ந்திருந்தார்கள். சிலர் எதுவும் நடக்காதது போல முகத்தை மலரவைத்திருந்தார்கள்.

சில இளைஞர்கள் உடன் விடுவிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் அனேகர் அரச தொழிலாளர்கள். சிலர் பாடசாலை மாணவர்கள்.

சந்திரா தனது மகன் சுரேஷ் விடயமாக பொலீஸ் அதிகாரியிடம் கதைத்துப்பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவனை விட முடியாது. புலிச்சந்தேக நபர் வெலிக்கடைக்கு அனுப்பப்போகிறோம். இருந்தால் புலியில் சேர்வான். அப்படியான வயது." எனக்கூறி சந்திராவிடம் மகனைக் கொடுக்க மறுத்து விட்டார்.

சுரேஷ் அழுத வண்ணம் இருந்தான். சந்திராவிற்கு தலை சுற்றுவது போல் இருந்தது. அப்படியே நிலத்தில் அமர்ந்து விட்டாள். கெஞ்சிப்பார்த்தும் விட மறுத்து விட்டார்கள். சந்திராவால் என்னதான் செய்ய முடியும்?

பயங்கரவாதத்தால் அன்புக்கணவனை இழந்த காயம் ஆறும் முன்பே பெற்ற மகனையும் இழந்து அவளால் எப்படி இருக்க முடியும்?

வாகனத்தில் மகன் சுரேஷ் ஏற்றப்படும் போது அவளது இதயம் வெடித்து விடும் போல தெறித்தது. வாகனம் புறப்பட்டுப் போய்விட்டது.

சந்திராவும் மகள் ரேவதியும் அழுதவாறு வீடு நோக்கி வந்தார்கள்.

"ரேவதி... நான் பிறந்திருக்கக்கூடாத பிறவி. பிறந்து கஷ்டப்பட்டேன். காதல் கைகூடியது. ஆனால் வாழ்வதற்கு கொடுத்து வைக்கவில்லை! பயங்கரவாதம் கணவனின் உயிரை கைமாறிக்கொண்டது. அன்பு மகனையும் பறிகொடுத்து விட்டேன். இனி எதற்காக? யாருக்காக? உயிரோடு இருக்க வேண்டும்?" என்றாள் சந்திரா.

"ஆமாம் அம்மா. நானும் எதற்காக வாழவேண்டும். அம்மா, அப்பா சகோதரன் எவரும் வாழ வழியேற்படவில்லை. தந்தையை இழந்தேன் தம்பியாவது துணையாக இருப்பான் என்று இருந்தேன். அவனையும் இழந்து விட்டேன். வெலிக்கடைச் சிறைக்கு அழைத்துச் சென்றால் இனி எங்கே விடப்போகிறார்கள்"? என்றாள் ரேவதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரா தீர்க்கமான ஒரு முடிவுக்கு வந்தாள்.

"ரேவதி இனி... அடுத்த குண்டு வெடித்தால் உன்னைப் பிடித்துக் கொண்டு போனாலும் போவார்கள்" என்றாள் சந்திரா.

"என்னம்மா நாம் என்ன செய்வது?" என ரேவதி கேட்டாள்.

"இப்படி பலியாவதை விட தற்கொலை செய்து உயிரை விடுவது மேல். ஏன் துயரத்துடன் பயந்து பயந்து வாழவேண்டும்? நிம்மதியின்றி ஏன் காலத்தைக் கடத்த வேண்டும்?" என்றாள் சந்திரா.

"அதுதான் சரியம்மா. கத்தரிக்கன்றுக்கு அடித்த நஞ்சு கொஞ்சம் இருக்கு. இரண்டு பேரும் குடிச்சிற்று நிம்மதியாக கடைசி தூக்கம் தூங்குவோம்" என்றாள் ரேவதி.

இருவரும் அன்று மதியநேரம் நஞ்சை அருந்தி தரையில் சரிந்தார்கள்.

வானம் கறுத்துக்கொண்டு வந்தது. அவர்களின் கண்களும் சொருகிக் கொண்டன. வாயால் நுரை தள்ளியது. இனி அவர்கள் எவருக்கும் பயப்பட வேண்டிய அவசியமில்லை. எங்கு குண்டு வெடித்தாலும் அவர்களுக்கு ஒன்றுமில்லை.

யுத்தம் பல வழிகளிலும் உயிர்களை உறிஞ்சுக்கொண்டு வருகின்றது. யுத்த மேகம் கலையாதா? சமாதானம் இனி வராதா? இதுதான் இன்றைய மாந்தர்களின் எதிர்பார்ப்பு. நிறைவேறுமா?

(புனை கதை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோக மேகம்

ரஸீதா ஏழையாகத்தான் பிறந்தாள். அவளின் அழகிற்கு குறைவில்லை. குழிவிழுந்த மென்பட்டுக்கன்னங்கள். தலை நிறைந்த கறுத்த நீண்ட முடி. குறுகுறுக்கும் குண்டு விழி. பொத்திப்பிடிக்கக்கூடிய மெல்லிடை. அன்னம் அசைகின்ற அழகு நடை.

இளைஞர்கள் கண்டால் நிச்சயம் இன்னும் ஒரு தரம் பார்க்காமல் செல்லமாட்டார்கள்.

திருமணம் என்று பேச்சு தொடங்கும் போது மாப்பிள்ளை வீட்டாரின் பெண்பார்க்கும் படலம் தொடங்கும். உறவினர் தொடக்கம் மாப்பிள்ளை வரைக்கும் பெண்ணை பிடித்து விடும். சீதனத்தில் இழுபறி நடக்கும். பின்னர் திருமணம் நின்று விடும். இதுதான் ரஸீதா வாழ்க்கையில் கண்டவை. ரஸிதாவுக்கு வயது முப்பது. இளமைப்பருவத்தின் இறுதிக்கட்டத்திற்கு வந்து விட்டவள். அவளின் பெற்றோரும் மாப்பிள்ளை தேடித்தேடி அலுத்துப்போய் விட்டார்கள்.

“வாப்பா... விடுங்க வாப்பா கல்யாணம் முடிக்காட்டி பரவாயில்லை. நான் உங்களோட இருக்கன். நமக்கிட்ட அவங்க கேட்கின்ற பொருள், பணம் இல்லையே! நமக்கிட்டே இருக்கிற சீதனத்துக்கு யாரும் வந்தா... பார்ப்போம். இல்லாட்டி கல்யாணமும் மண்ணாங்கட்டியும். எத்தனையோ பேர் வாழாம சாகவில்லையா? அதுபோல இருந்திற்றுப் போறன்.” என்றாள் ரஸீதா.

“என்ர மனம் பொறுக்குமா மகள்? நீ வாழத்தான் வேணும். அதை நான் பார்க்கணும்” என்றார் தந்தை முகைதீன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாம ஏழைங்க. இதுக்கெல்லாம் கவலைப்படக்கூடாது. துன்பத்தை யெல்லாம் தூரசா நினைக்கணும்." என்றாள் ரஸீதா.

"உன்ர வயசையொத்த பணக்கார மருமகள் கல்யாணம் முடிச்சு பிள்ளையும் புருஷனுமாக வாழ்றதைப்பார்த்தா எனக்கு எப்படி இருக்கும் மகள்? எனக்கு வசதியில்லாத ஒரு காரணரத்திற்காக நீ துயர்படலாமா? இப்ப எல்லோரும் பணத்தைத்தானே பார்க்கிறானுகள். பண்புள்ள பெண்பிள்ளைகள் என்று பார்க்கிறானுகளா?" எனக்கேள்விக்கணை தொடுத்தார் முகைதீன்.

"கவலைப்படாதீங்க வாப்பா. நமக்கு ஒருகாலம் வரும். அதுவரை இருப்போம்." என தந்தையின் மனதைத் தேற்றினாள் ரஸீதா.

அவளின் இதயத்தில் இருந்தும் ஆசை எழாமலிருக்குமா? தானும் கணவன், குழந்தை என்று சந்தோஷமாக வாழவேண்டுமென மனக்கோட்டை கட்டியிருந்தாள்!

"இறைவா... எனக்கொரு துணைவன் வந்து சேரமாட்டானா? இனிதாக என்னை வைத்து அன்பு காட்டி வாழமாட்டானா? நானும் என் கற்பனைகளை நிஜமாக்க வேண்டாமா? ஏழையாக பிறந்தால் எங்களுக்கு வாழ்வில்லையா?" எனப்பல வேண்டினாள் ரஸீதா.

இப்படியாக நாட்கள் நகருகின்ற போது ஒரு நாள் அடுத்த ஊரில் இருந்து சிராஜ் என்ற நடுத்தர குடும்பத்து இளைஞன் ரஸீதாவை பெண்பார்க்க வருவதாக புரோக்கர் கபூர் கூறி இருந்தான்.

வழமைபோன்று அழகாக உடுத்தி மணமகள் போல வீற்றிருந்தாள் ரஸீதா. புதியமொடல் கார் ஒன்றிலிருந்து இளைஞர்கள் மூவரும் ஒரு முதிய ஆணும் பெண்ணும் இறங்கிவந்தார்கள். இளைஞர்களில் யார் மாப்பிள்ளை என்பது ரஸீதாவின் பெற்றோருக்குப் புரியவில்லை. ரஸீதா உள்ளே புகுந்து கொண்டாள். முன்ஹோலில் எல்லோரும் அமர்ந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவர்தான் எனது இரண்டாவது ஆண் மகன்" என்பதை சுட்டிக்காட்டினார் வந்த முதியவர். நீலநிற சேட்டும் கறுப்பு நிற நீண்ட காற்சட்டையும் அணிந்திருந்தான் அவ்விளைஞன். வெளிறிய சிவந்த மேனி. எடுப்பான தோற்றம். ஒரு ஆணழகனைப் போல தோன்றினான் சிறாஜ். ரஸீதாவின் தந்தை முகைதீனுக்கு அவனை பார்த்தவுடன் பிடித்துக் கொண்டது. சிராஜின் தந்தை மீண்டும் தொடர்ந்தார்.

"பொடுபோக்கான பேர்வழி என்மகன். ஊதாரித்தனமாக செலவு செய்வான். இதுக்கெல்லாம் விடப்போடா. உங்கள் மகள் இவருக்கு நல்ல கட்டுப்பாடு போடணும். மற்றப்படி தங்கமானவன். உங்க மகளுக்கு பொருத்தமான துணை. பணக்கார இடத்திலே மணம் செய்து வைக்க விரும்பல்லே! ஏனென்றால்...... இவன் அடங்கிப்போக மாட்டான். அதனால பிரிவு வரும். நீங்க போட்டு பொறுத்து விடாம வைச்சுக்கங்க" என்றார்.

நீங்க எங்களை விட வசதியுள்ளவங்க. இருந்தும் பண்பாகப் பேசுறீங்க இப்படி பண்பாக பேசிற உங்கட பிள்ளை பண்பாக இருக்கும். உங்க மகனை என்ர மகளுக்கு முடிச்சு வைக்கிறதிலே எந்த தடையும் இல்ல. ஆனா... உங்க பிள்ளையும் என் மகளைப்பார்த்து விரும்பணுமே" என்றார் ரஸீதாவின் தந்தை முகைதீன்.

"உங்க மகளை வரச்சொல்லுங்க" என்றார் சிறாஜின் தந்தை. முகைதீன் உத்தரவிட்டார். ரஸீதா சிவப்பு பூப்போட்ட சாரி உடுத்தி அடக்கமாக வந்து தந்தைக்கு முன்னால் நின்றாள். இரண்டு நிமிடங்களில் திரும்பி போய் விட்டாள்.

"மகன் பார்த்தாயா? என்ன விருப்பமா?" எனக்கேட்டார் சிராஜின் தந்தை. ஆம் எனும் பொருளில் தலை அசைத்தான் சிராஜ்.

"இனியென்ன ஒரு நாளைப்பார்த்துக் கொள்ள வேண்டியதுதான். இதுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு நகை ஐம்பதினாயிரம் பெறுமதி மகளுக்குக் கொடுப்போம். வீட்டுப்பொருட்களும் கொடுப்போம். காசு காணி கிடையாது" என ரஸீதாவின் தந்தை சொன்னார்.

"நாங்க சீதனத்துக்குப் பெண்பார்க்கிறதென்றால் இங்க வந்திருப்போமா? நாங்க கேட்கமாட்டோம். கொடுக்கிறதைக் கொடுங்க." என்றார் சிராஜின் தந்தை ரஸீதாவின் இதயத்தில் தேன்வார்த்தாற்போல் இருந்தது. இவ்வளவு காலமும் பெண்பார்க்க வந்தவர்கள் 'யாரோ' என்று சொல்லுமளவிற்கு போய்விட்டார்கள். இன்று வந்தவர் என் கணவனாகப் போகிறவர் என்று நினைத்து இன்புற்றாள் ரஸீதா. மீண்டும் ஒரு முறை சிராஜை நன்கு பார்க்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். எத்தனையோ ஆடவர்கள் பெண் பார்க்க வந்திருக்கிறார்கள். எவரையும் நிமிர்ந்து நோக்கவில்லை. ஆனால் சிராஜைப் பார்க்க வேண்டும் என்ற மேலீட்டினால் துரிதமாக தேநீரை தயாரிக்குமாறு தாயாருக்குச் சொன்னாள்.

பலகாரங்களை எடுத்து ஒவ்வொன்றாக, ஒவ்வொருவராக கொடுத்துக் கொண்டு வரும் போது சிராஜின் அருகே வந்ததும் அவனின் முகத்தை நிமிர்ந்து பார்த்து புன்னகைத்தாள். அந்த புன்னகையே சிராஜிக்கு தேவலோக தேவதைபோல ரஸிதாவைக்காட்டியது. அவளின் அழகு அவனது கண்களுக்குள் சிக்கிக் கொண்டது.

மீண்டும் வந்து தேநீர் கொடுக்கும் போது சிராஜ் ரஸிதாவை கண்களால் மேய்ந்தான். அவளும் ஒரு நிமிடம் பார்த்தாள். இருவரும் சில நிமிடங்கள் கண்களால் காவியமே படைத்தார்கள்.

அடுத்த வாரம் திங்கட்கிழமை எளிதான முறையில் திருமணத்தை செய்து வைப்பதாக முடிவெடுத்து போய்விட்டார்கள். மாப்பிள்ளை போகும் போது பின்புறத்தைப் பார்த்து ரசித்தவண்ணம் நின்றிருந்தாள் ரஸீதா. மாப்பிள்ளை கார் அருகே சென்றதும் திரும்பி ரஸிதாவைப் பார்த்து புன்னகைத்தார். இருவரின் பார்வைகளும் சந்தித்துப் பிரிந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ரஸீதா– அல்லாஹ் நம்மளை கைவிடமாட்டான்." என்று கூறினார் ரஸீதாவின் தந்தை முகைதீன்.

ரஸீதாவிற்கு உலகமே சொர்க்கபுரியாகத் தோன்றியது. கற்பனையே இனிமைச்சுரங்கமாக ஊறியது. எண்ணமே சிராஜின் நினைவாக நிழற்படம் விரித்தது.

எத்தனையோ அழகில்லாத ஆடவர்கள் பொருளையும், பணத்தையும் கேட்டு திருமணம் செய்யாது போய்விட்டார்கள். அழகான, சிவந்த மேனிகொண்ட சுருண்டைமுடி சிராஜ் என்னைத் திருமணம் செய்ய முன்வந்து விட்டாரே! பணக்கார குடும்பத்தில் பிறந்தும் எவ்வளவு நல்லவராக இருக்கிறார். ஏழையாக பிறந்தும் நான்கு காசு சம்பாதிக்கத்தெரிந்தால் சீதனத்தைத்தானே எதிர்பார்க்கிறார்கள். நான் எதிர்பார்த்த துணைவனை எனக்கு அளிக்கவே இறைவன் என்னைத் தடுத்து வந்திருக்கிறான். அல்லாஹ் புகழுக்குரியவன். அல்ஹம்துலில்லாஹ்" என நினைத்துக் கொண்டாள் ரஸீதா.

திருமணத்திற்கு இன்னும் நான்கு நாட்கள்தான் இருந்தன. பெண், மாப்பிள்ளை வீட்டார்கள் பலகாரம், நகை, உடை என பரிமாறிக்கொண்டார்கள். மாலை வேலைகளில் சிராஜும் ரஸீதாவின் வீட்டுக்கு போய்வரத் தொடங்கினான்.

இன்னும் நான்கு நாட்களில் திருமணம் நடைபெறவிருப்பதால் எவரும் இதை பெரிது படுத்தவில்லை. வழமை போல மாலைநேரம் போயிருந்தான். கதவைத்திறந்து நாற்காலியில் அவனை உட்காரச் சொன்னாள். அவள் உள்ளே சென்று தலையை மட்டும் வெளியே நீட்டி அவனிடம் கதைத்தாள். பெற்றோர்கள் எடுபிடி வேலைகளில் கவனம் செலுத்தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னை முன்னுக்கு வந்து உட்கார சொல்கிறீர்கள். திருமணம் செய்யாம சோசலிஷமாக வந்து உட்கார்ந்து பேசிற இஸ்லாத்திற்கு விரோதமான செயல் அல்லவா! இன்னும் நான்கு நாட்கள்தானே! பொறுத்துக்கோங்க அதன் பிறகு என்ன சொன்னாலும் ஓகே" என்றாள் ரஸீதா.

"இருங்க. நான்கு நாட்களுக்குப்பிறகு கணக்கைப் பார்க்கிறன்" என்றான் சிராஜ்.

"என்ன பிடிச்சு விழுங்கப்போறீங்களா" என ரஸீதா கேட்டாள்.

"விழுங்குறதை விழுங்குவன், கடிக்கிறத்தைக் கடிப்பன்" என்றான் சிராஜ்

"ஐயோ.... உங்களுக்கு வெட்கமா இல்லையா?" என்று கூறி கதவுத்துணியால் முகத்தை மூடிக்கொண்டாள் ரஸீதா.

கையைப் பிடித்து இழுத்து கதிரையில் உட்கார வைத்தான். பக்கத்துக்கதிரையில் சிராஜ் அமர்ந்தான். ரஸீதா சற்று தள்ளி உட்கார்ந்தாள். எவ்வளவோ சொல்லியும் அருகே அமர மறுத்து விட்டாள். தள்ளி இருந்தவாறே இருவரும் நீண்டநேரம் எதிர்காலத்தைப்பற்றி பேசினார்கள். இரவு எட்டுமணியானதும் வீடு நோக்கிப் புறப்பட்டான்.

நாட்கள் குறுகின. திருமணத்திற்கு இன்னும் ஒரேயொரு நாள்தான் இருந்தது.

"மாப்பிள்ளையைப் பற்றி நல்லா வெசாரிச்சிங்கிளா?" எனக்கேட்டவாறு வீட்டுக்குள் வந்து அமர்ந்தான் பக்கத்து வீட்டு பசீர்.

"விசாரிக்க என்ன இருக்கு? பணக்காரப்பிள்ளை. பண்பான பிள்ளை. ஏழையென்றும் பாராம என் மகள் விரும்புறான். என் மகளோட ஆயுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையும் வாழ விரும்புறான் இது போதும்" என்றார் ரஸீதாவின் தந்தை முகைதீன்.

"அவன் முன்பு ஒரு திருமணம் செய்து ஆறுமாதங்கள் மட்டும் வாழ்ந்தானாம். எங்கே உங்கள் மகளையும் ஆறுமாதங்கள்ள விட்டிடுவானோ..." என்று நிறுத்தினான் பசீர்.

"அவள் பொடியனோட ஒத்துப்போயிருக்க மாட்டாள். ஆம்புள பொறுப்பானா? விட்டெறிஞ்சிருப்பான். ஒரு திருமணம்தானே! நாலு திருமணம் முடிச்சவனும். நாலாவதிலே ஆயுள் வரை வாழல்லையா? நிம்தியாக இருக்கல்லையா? முதல் திருமணம் முடிச்சத கெட்டகாரியமாக சொல்ல வந்துட்டியே! சீதனம் இல்லாம ஒரு பொண்ணை வாழவைக்க இடுப்பில பெலமில்லாதவனுகளோட சிராஜை ஒப்பிடாதே! தங்கத்திலே வார்த்த மனசு எங்களுக்கு வேலை கிடக்கு! இருக்கிற என்டா இருந்து போ" எனக்கூறினான் முகைதீன்.

தனது பேச்சு வேகாததினால் சொல்லிக் கொள்ளாமலே வெளியிறங்கி தனது வீடு நோக்கி நடந்தான் பசீர்.

ஒரு ஏழைப்பெண்ணுக்கு மாப்பிள்ளை பார்ப்பதென்றால் யாரும் முன்வரமாட்டார்கள். பணக்காரப் பெண்ணுக்கு மாப்பிள்ளை பார்ப்பதென்றால். சொல்லாமலே செய்வார்கள். ஒரு ஏழைப்பெண்ணை யாராவது மனம் முடிக்க வந்தாலும் ஏதாவது சொல்லி தடைசெய்யத்தான் பார்ப்பார்கள். மாப்பிள்ளை வீட்டாரிடம் பலரும் பலவிதமாக கூறி பார்த்தார்கள். எடுபடவில்லை. பெண்வீட்டாரிடம் 'திருமணம் முடித்தவன்' என பொழிந்தார்கள். அதுவும் சரிவரவில்லை. திருமணம் இனிதாக நாளை நடைபெறவிருக்கின்றது.

ரஸீதா பல எதிர்பார்ப்புக்களுடன் சிராஜின் மனைவியானாள். சொர்க்காபுரி ராணி போன்று குறைவின்றி நிறைவாக பராமரிக்கப்பட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஸீதா நினைப்பதை வாங்கி அளிக்கும் நிலையில் இருந்தான் சிராஜ். அது மட்டுமல்ல அன்பை சொரிந்து அமுதைப் பொழிந்தான். ரஸீதா இன்ப மழையில் நிதமும் நனைந்தாள். இருவரின் மனமும் துன்பத்தின் சுவடு தெரியாமல் இன்பத்தில் ஊறி இருந்தன.

திருமணம் முடிந்து இருமாதங்கள் கடந்திருந்தன. ரஸீதாவின் தந்தை கொடுத்த சீதன பணத்தைத்தான் செலவிட்டு காலத்தை நகர்த்தினான். அவன் ஒரு வாகன சாரதிதான்! தந்தை பணக்காரர் என்ற மமதையில் படிப்பை உதறினான். அதுதான் போகட்டும் என்றால் உருப்படியான வியாபாரமும் தெரியாதவனா இருந்தான். ஒரு கிழமை தொழில் செய்தால் ஒரு மாதம் தொழிலுக்கு போகாமல் இருப்பான்.

இரண்டு மாதங்களாக தொழிலுக்குப் போகும் நேரம் தவிர மற்ற நேரங்கள் அனைத்தையும் ரஸீதாவோடுதான் போக்கி இருந்தான். தற்போது தொழிலுக்கு போனாலும் சரி போகாவிட்டாலும் சரி நள்ளிரவுதான் வீடு நோக்கி வருவான். ரஸீதாவோடு நெருங்கிப் பழகும் சிராஜ் தள்ளித் தள்ளி தூரப்போவதை உயர்ந்தாள் ரஸீதா. சில நாட்களில் எதுவும் பேசாமல் சாப்பிட்டு விட்டு தூங்கச்செல்வான். நாட்கணக்கில் ரஸீதாவோடு பேசாமலும் இருப்பான்.

"என்ன.... நீங்க முன்னரைப்போல இல்லே. நான் ஏதும் தப்புச்செய்தேனா? ஏன் பேசாம இருக்கீங்க சொல்லுங்க. உங்க மனசு புண்பட்டா திருந்திக்கிறேன். பிழை இருந்தா சொல்லுங்கோ." என்றாள் ரஸீதா.

"நீங்க ஒண்ணும் செய்யலே. நான்தான் செய்தேன். ஏழையான உன்னை திருமணம் செய்ததே மாபெரும் பிழை." என காரணம் இல்லாமல் கூறினான் சிராஜ். முன்பு காதலித்து திருமணம் செய்த பெண்ணையே ஆறுமாதங்களுக்குள் கைவிட்டான். ரஸீதாவை விரும்பி திருமணம் செய்து தனது ஆசைகளை நிறைவேற்றிவிட்டு அடுத்தவளை நாடித்திரிகிறான் என்பது ரஸீதாவுக்கு எங்கே தெரியப்போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது காரணமில்லாமல் ரஸீதா மீது எரிந்து விழுவது இரண்டொரு தினங்கள் வீடுவராமல் எங்கோ நிற்பது சிராஜின் செயலாகியது.

ரஸீதா அழுது கொண்டே தந்தையிடம் முறையிட்டாள்.

"பக்கத்து வீட்டுக்காரன் சொன்னதையும் நான் நம்பல்ல. ஆறுமாதங்களுக்குள் முதல் பெண்ணையே கைவிட்டவன் எண்ணாங்க. நான் கேட்கல்லையே! இனி என்ன செய்யலாம்? போட்டு பொறுத்து வாழ வேண்டியதுதான். நீ சொல்லு மகள் எங்கேயும் இனித்தங்கக் கூடாது. பத்துமணிக்கெல்லாம் ஊட்டுக்கு வரனும்." என்றார் ரஸீதாவின் தந்தை முகைதீன்.

"ஆயிஷா.... ராத்தா சொன்னா வெளிநாடு போய்வந்த யாரோ கேடுகெட்ட பெண்ணோட தொடர்பாம். அவள்ட வீட்ட போய் வாறதை நிறையப்பேர் கண்டாங்களாம். ஆயிஷா ராத்தாக்கிட்ட சொல்லி இருக்காங்க." என்றாள் ரஸீதா. அவள் எவ்வளோ கற்பனைகள் பண்ணி ஆசை நிறைய வைத்து இந்த திருமணத்தைச் செய்தாள். அவளது எண்ணங்கள் நிறைவேறமுதல் வாழ்க்கை நிரந்தரமாகுமா என்ற கேள்விக்குறி வந்து விழுந்து விட்டதே. இரண்டு மாதங்கள் சிரித்து மகிழ்ந்தவளுக்கு இன்று அழுகையே தொடர்கதையாகி விட்டது.

கணவன் வருவான் வருவான் என எதிர்பார்த்து எத்தனை இரவுகள் ஏமாந்து இருக்கிறாள். எத்தனை இரவுகள் அழுது தீர்த்திருக்கிறாள்.

கேடுகெட்ட கணவன் விட்டுப்போகட்டும் என்று விவாகரத்துச் செய்து வேறு திருமணம் புரிவதற்கு வசதியிருக்கும் என்றால் பரவாயில்லை! ரஸீதா என்ன செய்வாள்? ஏழையாயிற்றே!

"அழாதே மகள். அல்லாஹ்விடம் பொறுமையாக கேள். அவரிட்ட நல்லா சொல்லு. பத்துமணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்திரனும். கண்டிப்பா சொல்" என்றார் ரஸீதாவின் தந்தை முகைதீன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டுநாள் எங்கோ தங்கிவிட்டு மூன்றாவது நாள் வீட்டுக்கு வந்தான் சிராஜ்.

முன்பெல்லாம் வரும்போது உணவு வகைகள், சமையலுக்குத் தேவையான பொருட்கள் என்று வாங்கிக் கொண்டு வருவான். இப்போது வெறும் கையை வீசிக்கொண்டு வருவான். அவனது உடை அழுக்காகியிருந்தது. அதுதான் வந்திருக்க வேண்டும். இல்லையானால் இன்னும் இரண்டு நாட்கள் தாமதித்திருப்பான் போலும்!

"ஏன் இரண்டு நாட்கள் ஊட்ட வரல்ல? சொல்லுங்க சொல்லமாட்டீங்களா? ஊரெல்லாம் கேவலமாகக் கதைக்காங்க. எனக்காக அதையெல்லாம் விட்டுப்போடுங்க. இனி இரவு ஒன்பது மணியானா வந்திரனும்" என்றாள் ரஸீதா.

"ரஸீதா... பச்சைப்புள்ள மாதிரிக்கதைக்காத! ஆம்புள்ளைக்கு ஆயிரம் வேலைகள் இருக்கும். பொம்புளைக்கு வீடே உலகம். ஆம்புளக்கி உலகமே வீடு. இது தெரியாதா? ரெண்டு நாட்களுக்கு முதலாளியோட கொழும்புக்குப் போனேன். இப்ப சொல்றன். என்ற தொழில் அப்படி. முதலாளி காரை எடுத்திட்டு வா என்றால் போகத்தானே வேணும். இல்லாட்டி சாப்பாட்டுக்கு வழி என்ன?" உண்மையை மறைத்து, தனது கபடநாடகத்தை மூடி நல்ல பிள்ளைபோல பேசினான் சிராஜ்.

"அப்படிப்போனா நான் கவலைப்படமாட்டேன். யாரோ ஒருத்தியின் வீட்டுக்குப் போய் வாறத்த பக்கத்து வீட்டு ஆமிஷா ராத்தாக்கிட்ட பலரும் சொல்லி இருக்காங்க. இந்த வேலையை விட்டுப்போடுங்க. உங்கட ஆசாபாசங்களுக்கு நானிருக்கிற போதாதா?" எனக்கேட்டாள் ரஸீதா.

"மனிசனுக்கு மனிசன் உதவுற மனிசப்பண்பு. அவள் திரும்ப வெளிநாடு போப்பறாளாம்! பாஸ்போட் எடுத்துக் கொடுத்தன். அவ்வளவுதான்." என்று மறைத்து மழுப்பினான் சிராஜ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி சரி நடந்ததை விட்டுப்போடுங்க. இனி போயிராதீங்க. இரவு ஒன்பதுக்கெல்லாம் வந்திரனும். சரியா?" என்றாள் ரஸீதா. சிராஜ் எதுவும் பேசவில்லை. குளித்து ஆகாரம் உண்டான். உடை மாற்றிக் கொண்டு போனவன் இரவு பத்து மணியாகியும் வரவில்லை! ரஸீதாவின் தந்தை முகைதீன் சிராஜின் தந்தை வீட்டுக்குச் சென்றார். மகனின் தான்தோன்றித்தனமான செயலை தந்தையிடம் சொன்னார். கிளிப்பிள்ளை மாதிரிக்கேட்டுக் கொண்டிருந்தார். பெரிதாக பொருட்படுத்தவில்லை.

முடிவில் வாய்திறந்து "நான் சொன்னேன்தானே! அவன்ட போக்கிலே விடக்கூடாது. இப்ப என்னாலே என்ன செய்ய ஏலும்? சமாளிச்சு இருக்கிறான்" என்றார் சிராஜின் தந்தை.

"இப்ப புரியுது. ஏழைவீடு தேடி வந்து பெண் எடுத்த வௌக்கம். பணக்கார வீடென்றா துரத்தி இருப்பான் – துரத்தி! நாங்க ஏழைங்க. இனியொரு மாப்பிள்ளை எடுக்க வழியில்லே! உங்க மகன்ட கூத்தை நாங்க பாத்திருக்கனும். அப்படித்தானே? அவனைத் திருத்த சின்னப்பிள்ளையா?" என்று உருக்கமாகக் கூறிவிட்டு சிராஜின் தந்தையை நிமிர்ந்தும் நோக்காமல் வீட்டுக்கு வந்தார் முகைதீன்.

முன்விறாந்தையில் வெறுப்புடன் உட்கார்ந்தார் ரஸீதாவின் தந்தை முகைதீன்.

"தண்ணீர் கொஞ்சம் கொண்டா மகள்" என்றார். ரஸீதா தண்ணீர்ப்பாத்திரத்துடன் வந்தாள்.

"நாம ஏமாந்திட்டம் மகள். அவன் இனி திருந்த வழியில்லே! அவன்

திருந்த மாட்டான் என்றுதான் அவன்ட வாப்பா ஏழையான நம்மளைப்பார்த்து தள்ளிற்றார். நீ என்ன செய்யப்போகிறாய் மகள்? உன்ர முடிவு என்ன?" முகைதீன் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதுக்குத்தான் வாப்பா கல்யாணமே வேண்டாம் என்றேன். அங்க ரெண்டு நாட்கள் இங்க ரெண்டு நாட்கள் இருப்பதென்றால் அவர் தேவல்ல. தனியே நிம்மதியா இருக்கலாம். வயித்திலே ஒரு புள்ளய செமக்கவேண்டியும் வந்திராது" என்றாள் ரஸீதா.

"மகள் அப்படி தேவல்ல என்டு சொல்லாதே! வயித்துல புள்ளையும் இருக்கு. என்ன செய்யிற நம்மட கஷ்டகாலம்" என்றார் தந்தை முகைதீன்.

இரண்டு நாட்களுக்கு ஒரு முறை வீட்டுக்கு வரும் சிராஜ் நான்கு நாட்களாகியும் வரவில்லை. யாரோ ஒரு பெண்ணோடு கொழும்பில் நிற்பதாக தகவல் கிடைத்தது. பிள்ளை வயிற்றோடு ரஸீதா பெரும் வேதனைப்பட்டாள். பிரச்சினை ஏற்படுத்தும் வேதனைக்குரிய மனைவியாக இருந்து அவளைப்பிரிந்தால் அல்லாஹ்வும் மன்னித்துக் கொள்வான். இன்னொரு திருமணம் செய்து சிறப்பாக வாழவும் துணைபுரிவான். அன்புள்ள, பண்புள்ள உயிருக்குயிரான மனைவிக்கு துரோகம் செய்தால் இறைவன் மன்னிக்க மாட்டான்.

"வாப்பா இனியும் அவர் எனக்கு வேனுமா? அவர் எங்கென்றாலும் போகட்டும். நான் கூலிவேலையாவது செய்து என் பிள்ளையை காப்பாற்றுவேன். இனி வந்தா ஏசி துரத்துவன்" என்றாள் ரஸீதா.

"இப்படி பெண்களோட திரிந்து போட்டு வாறவனை நாம வெச்சிருப்பது நல்லதில்லை. அவன்ட ஆட்டத்துக்கு இனி இடமில்லை. வந்தா.... துரத்து" என்றார் ரஸீதாவின் தந்தை முகைதீன்.

இரு நாட்கள் அல்ல. ஒருவாரத்தின் பின் வீட்டுக்கு வந்தான் சிராஜ். அடக்கமாக இருந்து மெதுவாக பேசும் ரஸீதா புலியானாள். இப்படி பேசி விரட்டுவாள் என எதிர்பார்க்காத சிராஜ் பேயறைந்தவன் போலானான். இனி அவனது எந்த பேச்சையும் நம்ப ரஸீதா தயாரில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்க எவளோடு என்றாலும் போய் இருந்து போட்டு வந்தா உங்களை கணவன் என்று சொல்லி வெச்சிருக்கலாமா? உங்களோட இனியும் வாழலாமா? திருந்துவீங்க என்றுதான் பார்த்தேன். நீங்க திருந்துற ஆளில்லை. உங்களுக்கு அன்பு பெரிசில்லை. மோகம்தான் பெரிசு. மோகம் கொண்டவரோட வாழ ஏலா. கண்ட கண்ட வேசைகளோட திரிஞ்சு எங்களுக்கு நோயையும் தருவீங்க. உங்களோடு வாழ்ந்தது போதும். இப்படி ஒரு கணவனை விட தனிமையாக இருக்கலாம். போங்க எங்கென்டாலும் போங்க, எவளோட என்டாலும் திரிங்க. நான் கேட்கல்ல. நீங்க இனி தேவல்ல. போங்க போயிடுங்க" எனப்பொரிந்து தள்ளினாள் ரஸீதா.

இப்படி ஒரு நிலமையை எதிர்பாராத சிராஜ் திக்குமுக்காடிப்போனான். எதுவும் பேசவில்லை. பேசமுடியவில்லை.

"ஏன் சிலையாக நீண்ட நேரம் நிக்கீங்க? போங்க. அன்பான கணவன்தான் பெரிசு. மோகம் கொண்ட நீங்க தூசி" என்றாள் ரஸீதா. அப்போது ரஸீதாவின் தந்தையும் வந்து சேர்ந்து கொண்டார்.

"என்ர மகள் வாழனும் என்றுதான் நானும் பொறுத்துப்பார்த்தேன். உங்களைப்பற்றி இந்த ஊர் காறித்துப்புது. நீங்க பொண்டாட்டி புள்ள வெச்சி நடத்த தகுதியில்லாத ஆள். கண்ட கண்ட பெண்களோட சுற்றத்தான் சரி. போங்க எங்கெண்டாலும் போங்க. இந்த ஊரையே சுத்துங்க. என்ர மகள் எத்தனை நாட்கள் அழுதாள். பட்டினி கிடந்தாள். வாழ்க்கைக்காக போராடினாள். நீங்க வெறிகொண்டு அலைஞ்சீங்க. போயிடுங்க" என்றார். முகைதீன்.

ஆத்திரத்துடன் உடைகளை அள்ளிக்கொண்டு புறப்பட்டான் "இனி நான் இங்கே வரப்போறதில்லே" என்று கூறி சென்றான் சிராஜ். அவனின் முகத்தில் சோகம் இப்போதுதான் ஆரம்பமாகியது.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிய திரைகள்

அந்த அரச அலுவலகம் ஒரு கட்டிடத்தின் ஒதுக்குப்புறத்தில் இயங்குகின்றது. வாடகையை மட்டும் கணக்காக வாங்கிக் கொள்கின்றார்கள். ஊழியர்கள், பொதுமக்கள் ஆகியோர்களின் வசதிக்குப் போதுமானதாக இருக்கின்றதா என பார்க்கமாட்டார்கள். இடவசதியின்மையால் ஊழியர்களும் பொதுமக்களும் மோதும் இடமாக இருக்கின்றது.

இருபதாம் நூற்றாண்டு முடிந்து இருபத்தோராம் நூற்றாண்டு ஆரம்பிக்க இருக்கும் இக்காலகட்டத்தில் இப்படியொரு அடிப்படை வசதிகள் இல்லாத ஒரு தாபனம் இயங்குகின்றதென்றால் உலகத்தில் இதுதான் என்று துணிந்து சொல்லலாம்.

தண்ணீர் வசதி இல்லாத ஊர்களுக்கும் குழாய் மூலம் சுத்தமான நீர் வழங்கி தேவை பூர்த்தி செய்யப்படுகின்றது.

இங்கு ஊரெல்லாம் தண்ணீர் போதுமான அளவு இருந்தும் குடிக்க முடியாத கழிவு நீர்தான் குழாயைத் திறந்ததும் வருகின்றது. தண்ணீர் குடிப்பதென்றாலும் கடைகளை நாடிவேண்டிய கட்டாய நிலைக்கு ஆளாகி இருக்கிறார்கள் இங்கு கடமை புரியும் ஊழியர்கள்.

திங்கட்கிழமை பொதுமக்கள் நிரம்பிவழிவார்கள். ஊழியர்கள் உட்கார்ந்திருக்கும் கதிரை மேசைக்கு முன்னால் ஒருவர் நின்று தனது முடியவேண்டிய பணியை ஊழியரிடம் சொல்லும் போது அடுத்தவர் அடுத்த வேலையை முடிக்க அடுத்த ஊழியரிடம் செல்வதற்கு வழி இருக்காது. இப்படி ஒருவர் வழியை மறித்து தனது பணியை முடித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும் போது ஊழியர் சுகுமார் "பெரியவர் உங்கட வேலையைத்தான் செய்யிறன். முடிந்த பின் கூப்பிட்டுத்தாறன். போய் உட்காருங்க இது வழி. போக, வர இடமில்லை என்றான்! முதியவர் தள்ளிப்போய் நின்று கொண்டார். வேலை முடிந்ததும் முதியவரைக் கூப்பிட்டு கொடுத்தான் சுகுமார். அடுத்தநாள் நன்றி கெட்ட முதியவர் மேலிடத்திற்கு பெட்டிஷன் போட்டார்.

விசாரணைக்காக முதியவரும் அழைக்கப்பட்டார். மேலதிகாரியும் வந்தார். சுகுமார் சொன்னான். "மற்றவர்கள் போய் வர இடம்போதாது. அதனாலேயே கொஞ்சம் தள்ளி நிக்கச்சொன்னன். அவர் வேலையை உடன் முடித்துக் கொடுத்தன்." என்று உண்மையைச் சொன்னான். கிழவர் விடுவதாக இல்லை.

"என்னை ஏன் தள்ளிப்போகச் சொல்லனும்" என்று பிடிவாதமாக இருந்தார் முதியவர்.

மேலதிகாரி விசாரணையை முடித்து வைக்கும் நோக்குடன் "இனி வாருங்கள் உங்கள் வேலையை உடன் செய்து தருவார். இடவசதி போதாது கொஞ்சம் தள்ளிநிக்கத்தான் வேணும். விரைவில் கட்டிடம் கட்ட இருக்கின்றோம். அதன்பிறகு யாரும் தள்ளி நிக்கச்சொல்ல முடியாது. சொகுசான கதிரையில் உட்கார வேண்டியதுதான்" என்றார். விசாரணை முடிந்ததாயிற்று. பெட்டிஷன் போட்டதில் என்ன பயன்கண்டார்? பிட்டிஷன் போட்டு பழகியவர்கள் இறக்கும் வரைக்கும் மறக்காமல் செய்வார்கள். அவர்களின் இரத்தத்தோடு ஊறிய விஷயம்.

ஊழியர்கள் எவ்வளவோ வசதிக்குறைவுடன் இந்த நூற்றாண்டோடு ஒத்துப்போகாத அலுவலகத்தில் இருந்து அல்லல்படுகின்றார்கள் என்பதை பொதுமக்கள் சற்று எண்ணிப்பார்த்தார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வேலையை செய்யத்தொடங்கும் போது மின்சாரம் ஆயிரம்தரம் கழுத்தறுக்கும். காற்றுப்புக முடியாத அந்த அலுவலகத்தில் ஊழியர்கள் வியர்வையில் குளிப்பார்கள். ஊழியர்கள் என்ன இயந்திரமா? அப்படித்தான் அதிக பொதுமக்கள் எண்ணி விட்டார்கள். மேலும்! கம்பியூட்டர் பொருத்தப்பட்ட அலுவலகங்களிலும் இரண்டு நிமிடங்கள் செல்லும். இங்கு வருபவர்கள் அஞ்சலோட்டத்தில் செல்லத்தான் வருகிறார்கள். நாம் வருவதற்கு முன்னர் வந்தவர்களும் இருக்கின்றார்களே! அவர்களின் வேலையை முடித்து விட்டுத்தானே நமது வேலையை முடிப்பான் என்ற எண்ணமே இல்லாத சுயநல போக்குள்ளவர்கள்.

டைப்பிஸ்ட் தேவராணிக்கு எதைப்பற்றியும் கவலையில்லை! தட்டச்சு இயந்திரத்தை கட்டிப்பிடித்தவாறு மேசையில் படுத்திருந்தாள்.

ஊழியர்கள் முடியுமானவரை கடிதங்களை கைகளால் எழுதி அனுப்பிவிடுவார்கள். ஏதாவது ஒன்றிரண்டு கடிதங்கள்தான் அவளுக்கு டைப் பண்ண வரும். வேலையைப் பொறுத்தவரை அவளுக்குக் கொண்டாட்டம். மற்ற ஊழியர்களுக்கு மூச்சுவிடக்கூட முடியாத அளவிற்கு வேலை. ஒருசிலர்தான் வேலைக்கு டிமிக்கு கொடுத்து கதைத்து பொழுது போக்குவதையும் ஒரு வேலையாக்கி விடுவார்கள். மேலதிகாரி வந்து நிலமையைக் கவனித்தால் மும்மூரமாக வேலை செய்வதாக காட்டிக்கொள்வார்கள். மேலதிகாரி அவரது ஆசனத்தில் அமர்ந்த பின் கதைக்கும் வேலையை தொடர்வார்கள்.

உண்மையில் யார் யார் வேலை செய்கிறார்கள் யார் யார் குறைவாக வேலை செய்கிறார்கள் என்பது மேலதிகாரிக்கு தெரியாமல் இருந்தது. காரணம் ஒரு சில ஊழியர்களின் நடிப்பாற்றல்.

இவர்கள்நடிகர் திலகம் சிவாஜிகணேசனை வெற்றி கொள்ளக்கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிப்பாற்றல் கொண்டவர்களாக இருக்கிறார்கள். நியாயமான அளவு வேலைகள் செய்து விட்டு ஏச்சு வாங்கும் அப்பாவிகளும் இருக்கின்றார்கள். இவர்கள் நடிப்பதை விரும்பாதவர்கள். நடிப்புக்கலை தெரிந்தவர்கள் மேலதிகாரிக்கு இல்லாததையும் பொல்லாததையும் உண்மை போன்று கூறிவிடுவார்கள். பின்னர் என்ன? அப்பாவிகளுக்கு ஏச்சு. போலிகளுக்கு மவுசு.

இவற்றையெல்லாம் பார்த்துச் சிரித்துக்கொண்டிருக்கும் ராஜனும் லோகனும் 'எல்லாம் காலத்தின் கோலம்' என்று வேதனைப்படுவார்கள்.

அன்றொரு நாள் காலைவேளை எழுதுவினைஞர் ஜெயராஜா காலையில் இருந்து நண்பகல் பனிரெண்டு மணிவரையும் ஓய்வின்றி இயந்திரமாக இயங்கிக் கொண்டிருந்தார். வாடிக்கையாளரும் அவனை ஈ போல மொய்த்தார்கள். வாடிக்கையாளர்கள் அனேகமானோரின் பணிகளை முடித்து விட்டு தேனீர் அருந்த ஹோட்டலுக்குச் சென்றான்.

இதுதான் தக்கசமயம் என எண்ணி மோகன் மேலதிகாரியிடம் "ஜெயராஜா மிச்ச நேரம் தேனீர் குடிக்கப்போனவரு இன்னும் காணல்ல. அவர்ர மேசையைச் சுற்றி ஒரே சனக்கூட்டம்" என்றான் மோகனுக்கு ஜெயராஜா மீது தனிப்பட்ட கோபம் அதற்கு மருந்தாக மேலதிகாரியை பயன்படுத்தினான். தனிப்பட்ட விரோத எண்ணம் மேலதிகாரிக்கு தெரியாது.

"ஜெயராஜா வந்தா வரச்சொல்லுங்க" என்று பக்கத்து மேசையில் பணிபுரிந்த இலிகிதரிடம் சொல்லி விட்டு சென்றார் மேலதிகாரி.

பனிரெண்டு மணிக்கு தேநீர் அருந்தச்சென்ற ஜெயராஜா பத்து நிமிடங்களில் வந்து விட்டான். மேலதிகாரி வரச்சொன்னதை பக்கத்து ஊழியர் வேதநாதன் சொன்னான். ஜெயராஜாவுக்கு விஷயம் விளங்கி விட்டது. 'யாரோ ஏற்றி விட்டார்கள்' என நினைத்தவாறே மேலதிகாரியின் அறைக்குள் நுழைந்தான். அவ்வளவுதான் மேலதிகாரி எரியத்தொடங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அலுவலகமா வீடா? நினைத்தமாதிரி வெளியிலே மணிக்கணக்காக திரியலாம்? தேநீர் குடிக்கப்போகிறேன் என்பதற்காக அடிக்கடி போகலாமா? ஆட்கள் மணிக்கணக்காக நிற்கிறாங்க. இனி கண்ட கண்ட மாதிரிதிரிஞ்சா ரிப்போட் பண்ணுவன்" என்றார். மேலதிகாரி பேசி முடிக்கட்டும் என்று வாய்மூடி இருந்தான் ஜெயராஜா.

"சேர் எனக்கு தேநீர் எடுக்கவே நேரம் கிடைக்கல்ல! எட்டு மணியிலிருந்து தொடங்கிய வேலையை மூச்சு விடாம செய்து பனிரெண்டு மணிக்கு தேனீரக்குப் போய் பத்து நிமிஷத்தில வந்திருக்கிறேன். என்ர கோபக்காரன் சொன்னதை கேட்டீங்க. சொன்னவனை கூப்பிட்டு கேளுங்க" என்றான் ஜெயராஜா.

அப்போதுதான் மேலகாரி உணர்ந்தார். மற்றவன் சொன்ன கதையைக் கேட்டு எரிந்து விழுந்தது. எவ்வளவு மூடத்தனமான காரியம் என்பதை! இருந்தும் வெளியே அதைக்காட்டிக் கொள்ளவில்லை. பிடிவாதத்தை விடவும் இல்லை.

"தேனீர் குடிக்க போகக்கூடா என்று சொல்லல்லையே! எவ்வளவு ஜனம் இருந்தாலும் சரி பத்தரைக்கெல்லாம் போய் வாங்க பனிரெண்டு மணிக்குப் பிறகு போவதை விட்டுப் போடுங்க. சரி போய் வேலையைச் செய்யுங்க" என்றார் மேலதிகாரி. ஜெயராஜா கடமையில் ஈடுபட்டான். என்றாலும் இல்லாததையும் பொல்லாததையும் சொன்னவன் எவனாக இருக்க முடியும் என்பதிலே அவனது மனம் தீவிரமாக ஈடுபட்டது.

இரண்டு நிமிடங்கள்தான் கடந்திருந்தும் பியூன் வந்து "மோகன் உங்களை மனேஜர் வரட்டுமாம்" என்றான். ஜெயராஜாவுக்கு விஷயம் விளங்கிவிட்டது.

"மோகன்தான் பொய்யன்; பொறாமைக்காரன். மேலதிகாரி செம்மையாக கொடுக்கப்போகிறார். பின்னேரம் நானும் மறைமுகமாக அறுக்க வேண்டும்" என நினைத்துக் கொண்டான் ஜெயராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகன் அதிகாரியின் அறைக்குள் நுழைந்ததுதான் தாமதம். "நீங்க சொல்ற கதையெல்லாம் இனி எப்பிடி நம்புற? ஜெயராஜா டீ குடிக்க நேரமில்லாம இப்பதான் போய் வாறான். அவனோட கோபம் இருந்தா நீங்க பார்த்துக் கோங்கோ இந்த மாதிரியெல்லாம் பொய் சொல்லக்கூடாது விளங்கிச்சா? இனி மத்தவங்களைப் பற்றி சொல்லுறத்தையும் விட்டிடனும்." என்றார் மேலதிகாரி. மோகனுக்கு எதுவும் பேச முடியாது போய்விட்டது. எப்படி பேசமுடியும்?

"ஜெயராஜா அலுவலகத்தில் இருக்கிறானே! எதிர்த்துப் பேசினால் மேலதிகாரி அவனையும் கூப்பிடுவார். அப்போது எட்டப்பன் வேலை பார்த்தது எல்லோருக்கும் தெரிய வந்துவிடும்" என நினைத்தான் மோகன்.

மோகனின் திருகுதாளம்! மோகன் இதை உணர வில்லை. சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்த நிலைதான் மோகனின் நிலை. மூன்று மணியாகட்டும் என்று காத்திருந்தான் ஜெயராஜா.

பகல் சாப்பிடப்போனவர்கள் வந்து சேர்ந்து கொண்டிருந்தார்கள். சாப்பிடுவதற்காக ஒரு மணிநேரம் எடுத்தவர்கள், இரண்டு மணி நேரம் எடுத்தவர்களுடன் ஏற்கனவே அரைமணி நேரம் எடுத்து வந்தவர்களுடன் இணைந்து கொண்டார்கள். மேலதிகாரி வருவதற்கு பத்து நிமிடங்களுக்கு முன்னர் வந்து சேர்ந்தான் மோகன். அவன் தாமதித்து வந்தாலும் கேட்பதற்கு மேலதிகாரி இருக்க மாட்டாரே! அதனால் மேலதிகாரி சாப்பிட செல்வதற்கு முன்னர் சென்று அவர் வருவதற்கிடையில் வந்து உட்கார்ந்து நீண்டநேரம் கடமையில் இருப்பவன் போன்று நடித்துக் கொள்வான். இன்னும் பத்து நிமிடங்களில் மேலதிகாரி வந்து விடுவார். அதற்கிடையில் தாக்குதலை தொடர்வோம் என்று பேசத்தொடங்கினான் ஜெயராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பச்சை தண்ணியும் இல்லாமல் பனிரெண்டு மணிவரையும் தலைநிமிராமல் வேலை செய்யிறன். ஒரு பயலும் எனக்கு உதவல்லே! நான் தேனீர்க்கடைக்குள்ள படுக்குறன் என்று சொன்ன ராஸ்கல் யார்? அவன் நிச்சயம் நல்லாப் பொறந்திருக்கமாட்டான். சொன்னவண்ட அம்மா கூடாதவளாக இருப்பாள்" என்றான் ஜெயராஜா.

கடைக்கண்களால் மோகனைப்பார்த்தான். முகம் கறுத்திருந்தது. எதுவும் பேசமுடியாது இருந்தான். பேசினால் கள்ளன் தானாக பிடிபட்டமாதிரி ஆகிவிடும். ஆத்திரத்தை வெளிக்காட்டாது. மனதுக்குள் ஜெயராஜாவை திட்டித்தீர்த்தான் மோகன்.

வேலைகள் விறுவிறுப்பாக நடந்து கொண்டிருந்தன. டைப்பிஸ்ட் தேவராணி வேலை ஏதுமின்றி கண்களை அங்கும் இங்கும் சுழன்று பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் இந்த அலுவலகம் வந்தபின்னர்தான் சிவாவும் கொஞ்சம் கலகப்பாக இருக்கினறான். சிவா முப்பது வயதுக்கு மேலாகியும் குடும்பச்சுமை காரணமாக திருமணம் செய்யவில்லை. வயதுக்கு வந்த சகோதரியின் திருமணத்துக்காக காத்து நிற்கிறான். இருந்தும் ஆசைகள், உணர்ச்சிகள் அடங்கக்கூடியதா?

அடிக்கடி தேவராணியை மறைமுகமாக பார்த்து ரசிப்பான். அவளும் இடுப்புத் தெரிய உடுத்து வருவாள்.

"உங்களுக்கு இப்படியான உடைகள் அழகாக இருக்கின்றன. இப்படி உடுத்து வரணும். நீங்க திருமணம் செய்து பிள்ளை பெற்றிருந்தும் அழகாக இருக்கீங்க. இளமையா தெரியிறீங்க" என்றான் சிவா.

"ரொம்ப நன்றி. ஒரு அட்வைஸ். நீங்க முதுமை வரமுதல் திருமணம் செய்துக்கங்க. பொறகு ஒருத்தியும் உங்களை பார்க்கமாட்டாள்." என்றாள் டைப்பிஸ்ட் தேவராணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அதுவரை யாரும் பார்க்காட்டா பரவாயில்லை. நான் உங்களை பார்த்து ரசிப்பன்” என்றான் சிவா.

“இது என் கணவருக்குத் தெரிந்தாலோ.... பல்லை உடைப்பார்” என்று இலேசாகச் சிரித்தாள் தேவராணி. இவளுக்கு எந்த கெட்ட எண்ணமும் கிடையாது. சோஷியல் டைப். பகிடியை கேட்டுக்கொண்டிருப்பாள். அளவிற்கு மிஞ்சினால் நாய் மாதிரிபாய்வாள்.

இதற்கு பயந்து அளவிற்கு மேலே பேசாமல் எல்லைக்கோடு வைத்துவிடுவான் சிவா. அளவிற்கு மிஞ்சினால் தேவராணியை நெருங்கி, பார்த்து பேசும் சந்தர்ப்பமும் இல்லாமல் போய்விடுமே!

வீட்டிலிருந்தே வரும் போது காலை ஆகாரமும் கையோடு கொண்டுவருவான் சிவா. தேவராணி தேநீர் அருந்த கன்டீனுக்கு போகும் போது காத்திருந்து பின்னால் செல்வான் சிவா. தான் கொண்டு வந்த ரொட்டி, பழ வகைகளை அவளுக்கும் கொடுப்பான். அவள் மகிழ்வுடன் வாங்கி சாப்பிடுவாள். சிவாவுக்கு கொஞ்சநேரம் பக்கத்திலிருந்து பேசினால் போதும். திருமணம் செய்யாத சிவாவைப் போன்றவர்கள் பெண்களுக்குப் பக்கத்தில் அமர்ந்து சும்மா பேசுவதிலும் ஒரு இன்பத்தை காண்கின்றார்கள். திருமணம் முடித்து முதுமை அடைந்தவர்களை கேட்டால் பெண்களுக்குப் பக்கத்திலிருந்து என்ன சுகம்? எனக்கேட்கின்றார்கள்.

பருவம் சும்மா விடுமா? அந்த முதியவர்கள் இளம் வயதில் என்ன பாடு பட்டிருப்பார்கள்.

சிவாவின் பருவக்கோளாறு தேவராணிக்கு பால், பழம், ரொட்டி என உணவுகளை உடனுக்குடன் தந்து கொண்டிருந்தன. காலையில் வந்தவுடன் தேவராணிக்கு “மோனிங்” சொல்லிவிட்டுத்தான் கையெழுத்திடுவான். இவரின் கோளாறை நினைத்து அவளும் உள்ளுக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்துக்கொள்வாள். ஓசியில் கிடைக்கும் ருசியான உணவு வகைகளை யார் வேண்டாம் என மறுப்பார்கள்.

மேலதிகாரியும் ஒரு புதுமையான மனிதர். யார் அவருக்குப் பிடிக்கவில்லையோ அவர் என்ன நல்லகாரியம் செய்தாலும் அது பிடிக்காத மாதிரி காட்டிக்கொள்வார். எவரை அவருக்குப் பிடிக்குமோ அவர் எந்த கூடாத காரியத்தை செய்தாலும் எதுவும் சொல்லமாட்டார். அந்த அலுவலகத்தில் அசம்பாவித காரியம் ஏதாவது அவருக்குத் தெரியாமல் நடந்தால் அவருக்குப் பிடிக்காதவர்களைத்தான் சந்தேகப்பட்டு கேட்பார். அப்பாவிகளான அவர்கள் தாங்கள் செய்யாத காரியத்தை செய்ததாகக் கேட்டால் ஆத்திரப்படாமல் அன்பா கொள்வார்கள்? யார் இந்த அநியாயத்தைச் செய்தவர்? என்று கேட்கலாம். அதை விட்டு விட்டு ஜெயராஜா செய்ததா? அல்லது சுந்தர மூர்த்தி செய்ததா? என்று கேட்டால் கோபம் வராதா? அவருக்குப் பிடிக்காதவர்தான் ஜெயராஜா, சுந்தரமூர்த்தி இருவரும்.

வழியில் யாரோ ஒருத்தன் கதிரையை வைத்து விட்டான். பார்த்து நடக்க வேண்டியதுதானே! பொதுமகன் ஒருவனோடு உரையாடி வரும் போது கதிரையில் மோதினால் இனி கேட்க வேண்டுமா?

"யார் இவ்விடத்தில் கதிரை போட்டது? இது வழியல்லவா? ஜெயராஜா நீங்க வைத்ததா?" என மேலதிகாரி கேட்டார். அதிக வேலையால் திண்டாடிக் கொண்டிருந்தவனுக்கு இந்தக் கேள்வி ஆத்திரத்தைமூட்டியது.

"நான் நிமிர்ந்து பார்க்கவும் நேரமின்றி இன்றைய மெயிலில் அனுப்ப வேண்டிய வேலைகளை செய்யிறன். என்ன அசம்பாவிதம் நடந்தாலும் நான் செய்ததா என்று என்னத்தை வைத்துக் கொண்டு கேட்பீங்க? என்ன நடந்தாலும் ஜெயராஜா செய்ததா என்று கேட்பதை விட்டிடுங்க கேள்வி கேட்டா கடுமையா ஏசுவன். ஆதாரத்தை வச்சுக்கொண்டு கேட்டா பரவாயில்லை. அதுமட்டுமல்ல. என்னைப்பத்தி யாரோ பொறாமைக்காரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாம சொல்லி இருக்கான். என்னைப்பற்றி கெட்ட எண்ணம் உங்க மனசில பதிஞ்சுற்று. அதற்கு நான் பாத்திரவாளி இல்லே. ஆனா... ஒன்டு சொல்றன். இஞ்ச உள்ள ஊழியர்களுக்குக் கிட்ட என்ன வெச்சுக்கேளுங்க நான் கூடாத சின்னதொரு செயல்கூட செய்தவனல்ல. யாராவது அப்படிச் சொன்னா ஏசுங்க. ஒன்று சொல்றன் ஒருசில நல்லகாரியங்கள் நடக்குறதென்டா அதற்கு நான்தான் காரணம்" என்றான் ஜெயராஜா.

மேலதிகாரி வாய்திறக்காமல் மௌமாக நின்றுவிட்டு போனார். என்ன அதிகாரியாக இருந்தாலும் நியாயத்திற்கு முன்னே தலை குனியத்தானே வேண்டும்!

ஏனோ தெரியாது. ஜெயராஜா மீது மேலதிகாரிக்கு ஒரு வித வெறுப்பு. அவனைப்பற்றி நல்லதாகப் பேசியதே கிடையாது. அவனுக்கு அலுவலகத்தில் மற்றவர்களைப் போல் எந்த சலுகையும் கிடைக்காது. உரிமையைத் தவிர. சில வேளைகளில் உரிமையை போராடியும் பெற்றிருக்கின்றான். அலுவலகங்களில் ஒரு சில ஊழியர்கள் இருக்கின்றார்கள். வேலைகளில் மிக மிக சோர்வு பிடித்தவர்கள்.

பல விடயங்களை கூறும் பலகடிதங்களை ஒரு பைலில் அள்ளிக்கட்டி வைத்துவிட்டு இருப்பார்கள். வெட்டி பிடுங்குவதாக காட்டிக்கொள்வார்கள். மற்றவர்களால் செய்யமுடியாது என கதை வேறு சொல்வார்கள். இப்படியான அலுவலக நடிகர்களால் சிறப்பாகக் கடைமையாற்றும் ஜெயராஜா போன்றவர்களுக்கு கெட்ட பெயர். செத்துப்பணி புரிந்தும் நல்ல பெயரில்லை.

ஒரு அலுவலகத்தில் பொய்யும், புழுகும் உருவாகலாம். மேலதிகாரியானவர் நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதை விட்டு விட்டு கண்டபடி கதைப்பது கண்மூடித்தனமான காரியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமையாக உழைத்தும் மதிப்பில்லாமல் இந்த அலுவலகத்தில் கடமையாற்றுவதை விட பக்கத்து ஊர் சென்று பணிபுரிவது மேலென இடமாற்றம் பெற்றுப் போய்விட்டான் ஜெயராஜா. நன்றாக வேலை செய்தவர்கள், நல்லவர்கள், நடிக்கத்தெரியாதவர்கள் இந்த அலுவலகத்தில் நிலைத்து நிற்பதில்லை.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் மாறும்

முத்துலிங்கம் முகத்தைச் சுருட்டி வைத்திருந்தான். ஊரில் எவரின் பிள்ளையாவது ஒழுங்காக உயர்தர வகுப்பில் சித்தியெய்தி விட்டால் போதும் அவருக்கு நிம்மதியிருக்காது. ஊரில் அவர்தான் முதல்தர பணக்காரர். ஆனால் அவரின் பிள்ளைகள் பல்கலைக்கழகத்தில் கற்க கொடுத்து வைக்காத படு முட்டாள்கள்.

பட்டினத்திற்கு அனுப்பி பணத்தின் பெருமையை காட்டிக் கொண்டார்.

எதிர்காலத்தில் தனது பிள்ளைகளை வைத்தியராகவும், வக்கீலாகவும் பொறியியலாளராகவும் பார்க்கலாம் என்றிருந்தவருக்கு எல்லாம் பகற்கனவாகி விட்டது. அப்பம் விற்று குடும்பம் நடத்தியவனின் பிள்ளைகள் வைத்தியராகி விட்டார்கள். பணக்காரர் முத்துலிங்கம் பொறாமையின் இருப்பிடம். அவரின் இதயத்தில் பொறாமை தீ போன்று எரிவதினால்தான் போலும் அவர் பூனை போல தோற்றமளிக்கின்றார்.

பூனை போல தோற்றமளித்தாலும் வாய் திறந்தால் எரியும் நெருப்பாய் வெடிப்பார். அந்த வார்த்தைகளை கேட்கும் ஏழைகளின் நெஞ்சம் பற்றி எரியும்.

அவரின் நியாயமற்ற பேச்சுக்கு ஏழைகள் எதிர்ப்பேச்சு பேசினால் ஆள்வைத்து அடிப்பார். அதற்கும் சரிவரவில்லையென்றால் பொலிஸைக் கூட்டி வந்து உதைவாங்கிக் கொடுப்பார். இப்படியாக எத்தனை வழிகளில் ஏழைகளை பந்தாடுவார் முத்துலிங்கம். அப்பம் விற்கும் அன்னம்மாவின் மகன் ராகவன் வைத்தியத்துறைக்கு தெரிவாகி இருந்தான். இந்தச்செய்தி காட்டுத்தீ போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரெங்கும் பரவியது. முத்துலிங்கத்திற்கும் எட்டியது. வழமையாக அமர்ந்து வீராப்பு பேசும் சந்திக்கடை முன்புறம் அமர்ந்திருந்தார்.

"அப்பக்காரியின் மகன் டாக்டர் ஆகப்போறானாம்! என்ன ஆனாலும் அப்பக்காரியின் மகன் என்ற சொல் அழிந்திடுமா? இவர்களுக்கெல்லாம் படிப்பு கீழ்சாதி நாய்கள்" என்று முட்டாள்தனமாகவும் முரட்டுத்தனமாகவும் பேசிக்கொண்டிருந்தார் முத்துலிங்கம். அவரின் அடிவருடிகள் "ஆமா" போட்டு அவரை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்கள். சிலர் ஏழையாகப் பிறந்தாலும் ஒரு டீக்காக மனச்சாட்சியை கொன்று நடக்கிறார்கள்.

இவர்களுக்கு நீதி நியாயத்தைப் பற்றி அக்கறையில்லை. முத்துலிங்கம் பணக்காரர் எதையும் செய்யும் சக்தி உள்ளவர். இவருக்கு தலையாட்டி பொம்மைகளாக இருந்தால் போதுமென்ற கொள்கை இல்லாத வெறும் ஜடங்கள் நிறைந்த ஊர் அந்தக்கிராமம். நேர்மையுள்ளவர்கள் சிலர் இருந்தார்கள்.

முகுந்தனின் கடையில் முத்துலிங்கத்திற்கு எதிர்ப்பான சிலர் கூடுவார்கள். முத்துலிங்கத்தோடு ஒட்டி உறவாடாதவர்கள் அவனின் தீய செயலை விமர்சிப்பார்கள். முத்துலிங்கத்தின் கையாட்கள் இல்லாத வேளையில் திரை விலகும்.

"மடப்பயல் அல்லவா முத்துலிங்கம். அவனைப்போலதானே அவனது பிள்ளைகளும் இருக்கும். அவன்ட பிள்ளைகளுக்கு கெம்பஸ் போக முடியல்லே! பணமிருந்தா படிப்பு வருமென்று நினைச்சானா? அப்பக்காரிட மகன் படிச்சு வந்தா அவன் டாக்டர்தான் ஒன்ட மகனைப்போல தெரு அளக்கல்லே! சும்மாடாக்டர் அல்ல. எம்.பி.பி.எஸ். டாக்டர் அவனை சீதனம் கொடுத்து மகளுக்கு மாப்பிள்ளையாக்க இந்த ஊரில் யாருக்கிட்டேயும் பணமில்லே! முத்துலிங்கத்திற்கு ஊரில் உள்ள சொரட்டைகளைத்தானே மாப்பிள்ளை ஆக்க முடியும். சாகிற வயசு வந்தும் பொறாமையையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபத்தையும் விடுறானில்லை. முசுறுப்பயல்! கொஞ்ச நேரம் வீட்டுல குந்துறானா? காகக்கு நாயாக அலைகின்றான்!" என்றான் முற்போக்கு சிந்தனையுள்ள முருகேசு.

"பிள்ளைகள்தான் படிக்கல்ல. நாலுவரி படிச்சிட்டு வெள்ளைக்காரன் பாணியில இங்கிலீசு பேசுவார். இங்கிலீசு தெரிஞ்சவனைக்கண்டா எல்லாம் மறந்து போகும். கொஞ்சம் சிந்திச்சு பார்த்தாரா? அவர்ர காது கேட்க பேசாட்டியும், மனிசன் காதிலே விழாமப்பேசுவான் என்பதை சிந்திக்காத முட்டாள் ஆச்சே! அவன் மத்தவனை முட்டாள் என்று நினைக்க அவனின் குடும்பத்திலே நல்லா படிச்சவன் கெடயாது. அவன் முட்டாள் என்று நெனைக்கிற ஏழைகள்ள குடும்பத்திலே டாக்டரும், என்ஜினியரும் உருவாகுறாங்க. முத்துலிங்கத்தால் என்ன பண்ணமுடியும்?" என்று மீண்டும் சொன்னான் முருகேசு.

"பல ஏழைகள்ள காணியை அவர்ர வாப்பா புடுங்கிட்டார். இவர் புடுங்க இப்ப உள்ளவன் மடயன் இல்லையே. மொதல்ல சண்டித்தனம் காட்டினாரு. பொலிசை கூட்டிவந்து அடிச்சாரு. இப்ப பொலிசைக் கூட்டி வந்தா லோயரைக் கூட்டி வந்து அவரை முட்டாள் ஆக்குவாங்க. முந்திமாதிரி வீறாப்பு பேசமுடியுமா" என்றான் செந்தில்நாதன்.

"பணம் என்ன பணம்? பொறக்கும் போது கொண்டு வந்ததா? இல்லே போகும் போது கொண்டு போகப்போறியா? உனக்கும் வெறும் மண்தான்டா சொந்தம்! உலகம் ஒரு ஓரங்க நாடக மேடை. மரணம் உன்னைத் தூக்கி விழுங்கும். உன்னால் எதுவும் செய்ய ஏலா. இவன் அதை எண்ணிப்பார்க்கிறானில்லையே." என்றான் முருகேசு.

"மெதுவாக பேசு அவன்ட கையாட்கள் போய் சொன்னா சண்டைக்கு வருவான். ஆவ்விட்டு அடிப்பான் என்றான்" செந்தில் நாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆள்விட்டு அடிச்சா அடியை வாங்குவம். பொறகு இருட்டில் நின்று முத்துலிங்கத்தின் தலையை ஒடைக்க வேண்டியதுதான்! இப்ப படிச்சவன்ர காலம் என்ர மகள் அடுத்த மாசம் லோயரா வாறான். முத்துலிங்கத்தைப் போல கெட்டவர்களுக்கு பாடம் படிப்பிப்பதும் அவன்ட ஒரு லட்சியமாம்! கடிதத்திலே எழுதியிருக்கான். இனியாருக்கும் கையை வெச்சா பல்லை உடைச்சுப்போட்டு வரட்டாம். வழக்குப்பேசி வென்று தருவானாம்." என்றான் முருகேசு.

அப்படியெல்லாம் ஏழைகள்ள காலமாசி வரும் போது இனி முத்துலிங்கம்தான் பயப்படனும். எந்த அலுவலகத்திலே பார்த்தாலும் நம்முட புள்ளைகள் வேலை பார்க்குது. அந்த மரமண்டைக்குத் தெரியாதா? அமெரிக்கா ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கனும் ஏழையாகத்தான் பொறந்தவன். படிக்கவழியில்லாம தெருவிளக்கிலே படிச்சவன். ஏழையாக பிறந்தவர்கள் நாளைய தலைவர்கள். காரணம் நேர்மையானவர்களுக்கு பொறந்த பிள்ளைகள்" என்றான் செந்தில்நாதன்.

"ஒன்று தெளிவாக தெரியுது. முத்துலிங்கத்தைப்போல கெட்டவர்களின் எதிர்காலம் இனி இருள்தான்! நல்மனம் கொண்ட ஏழைகளை இறைவன் கைவிடுவானா?" என்றான் முருகேசு உரையாடலை முடித்துக் கொண்டு தங்கள் இருப்பிடம் சென்றார்கள்.

தேர்தல் காலம் நெருங்கிக் கொண்டு வந்தது. அவல்கூட கிடையாமல் இருந்த சிலருக்கு இறுங்குப்பொரி கிடைத்த மாதிரித்தான். எங்கும் தேர்தல் பற்றிய கதைதான். சிறுவர்களின் கைகளிலும் தேர்தல் துண்டு பிரசுரங்கள் இருந்தன.

"தேர்தல் முடிந்து பார்ளிமன்ட் போனா.... அடுத்த இலக்ஷன் வரக்குள்ளதானே எங்கட எம்.பி. ஊர் பக்கத்தை திரும்பிப் பார்க்கிறார். எம்.பி. ஆனா கொழும்பிலே படுத்து குசிபண்ணுறார். கொழும்புக்குப் போனாலும் அவரைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திக்க முடியாது. கொழும்புக்குப் போய் எவ்வளவு ஜனங்கள் வேலைகளை முடிக்க முடியாது கஷ்டப்படுறாங்க. ஏமாற்றத்தோடு வீடு வாறாங்க. இப்பேர்ப்பட்ட எம்.பி நமக்குத் தேவைதானா? முத்துலிங்கத்திற்கும் அவர் குடும்பத்திற்கும் எம்பியாக இருக்கிறார். அவர்ர பத்து வோட் கிடைச்சா எம்பியானார்? நாம போடாட்டி எம்பி வெறும் முள்ளுக்கம்பி" என்றான் ஒரு பொதுமகன்.

இதைக்கேட்டுக்கொண்டிருந்த கடைக்கார முகுந்தன் வாய்திறந்தான்.

"முத்துலிங்கம் எங்கால நிக்காரோ ஊர்மக்கள் நிக்கப்போடா. அவரும் அவர்ர அடியாரும் நிற்கட்டும். நாமெல்லாம் எதிர்ப்பாட்டியிலே நின்று நாம ஆதரிக்கிற அபேட்சகரை வெல்ல வைக்கனும். அதன் பொறகு எங்கட எம்.பி என்ர கையிலே எதுவும் செய்வன் என்று மார்தட்டும் முத்துலிங்கம் வாய்மூடனும். பொறகு, எல்லாம் நம்மட ஆட்சிதானே! முத்துலிங்கத்தின் வாயை மூடவெச்சா இந்த ஊரிலே கெட்டவன்ட வாயை மூடவெச்சமாதிரித்தான்!" என்றான் முகுந்தன்.

தற்போது முத்தலிங்கத்திற்கு எதிராக ஊர்மக்கள் பேச துணிந்து விட்டார்கள். ஊரே பேசத்தொடங்கினால் அவரால் என்ன செய்ய முடியும்? ஊர் வாயை மூட உலைமூடி செய்ய முடியுமா?

"நாம நிக்கம் பொதுமக்களின் தேவைக்காக வைத்தியசாலையை தரமுயர்த்தனும். வைத்தியநிபுணர்களை போடவைக்கனும். மழைவந்தால் வெள்ளம் நிக்கும் வீதிகளை கான் அமைத்துத் திருத்தனும். தரமான வாசிகசாலை வேணும் என்று கேட்கிறம். முத்துலிங்கம் அப்படியா? தெருஅமைக்க கான்கட்ட வேணும், பில்டிங் கட்ட கொன்ரக்ட் வேணும். அப்பதானே பொய்க்கணக்குக் காட்டி அரசாங்க பணத்தைத் திருடலாம். இப்படிப்பட்ட சுயநலவாதிகளின் கொட்டத்தை அடங்குவதற்காக எம்பி.யை தோற்கடிச்சு புதிதாக போட்டியிடுகிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதயன்" தம்பியை வெல்லவைக்கணும் அவனுக்குத்தான் மக்களின் மனசைத் தெரியும் முத்துலிங்கத்தின் குடும்ப எம்பியாக இருக்கும் குமரனை தோற்கடிக்கணும். பொதுமக்களுக்கு சேவை செய்யிறவன்தான் நமக்குத் தேவை" என்றான் செந்தில்நாதன். முகுந்தனின் கடையில் இவ்வாறு செந்தில்நாதன் பேசிக்கொண்டிருக்கும் போது முத்தலிங்கத்தின் அடிவருடியான கந்தசாமி நின்று பேச்சை கேட்டான். ஆத்திரமுற்றான்.

கந்தசாமி முத்துலிங்கத்தின் வீட்டுல நக்கித்திரிஞ்ச நாயல்லவா! நல்லது கெட்டது தெரியாத மனித ஜடம். முத்துலிங்கம் கூறும் நேர்மையற்ற போக்குகளுக்கு கட்டுப்பட்டு நேர்மையைக் கைவிட்டவன்.

"ஏய் நீங்க கதைங்க. எம்பியைப்பற்றி எங்க முத்துலிங்கம் அண்ணனைப்பற்றி கூடாம கதைச்சா பல்லை உடைப்பேன்" என்றான் கந்தசாமி.

"மடப்பயலே. எம்பிமாரை கெடுக்கிற கெட்டவன் உங்க முத்துலிங்கத்தை எப்படிடா போற்றிப் பேசுற? எம்பியும் பொதுச்சேவையை மறந்து முத்துலிங்கத்தின் குடும்ப வேலையை செய்து கொண்டிருக்கிறார். அந்த குடும்ப எம்பி எங்களுக்குத் தேவல்ல" என்றான் முருகேசு.

சாறத்தை மடித்து கட்டிக்கொண்டு முருகேசை நாடினான் கந்தசாமி. கையை முருகேசின் முதுகுக்கு முன்னே நீட்டும்போது நின்றவர்களெல்லாம் கந்தசாமியை கட்டிப்பிடித்து தூக்கி பந்தைப்போல தெருவில் வீசினார்கள்.

"ஐயோ.... அம்மா... ஆ... ஊ..." என்றான் கந்தசாமி. இறக்கை இழந்த பறவை போல எழுந்து நின்றான்.

"உன்ர பரம்பரை ஒரு பிடி சோத்துக்கு கஷ்டப்படுது. இதைவிட்டுப்போட்டு முத்துலிங்கத்துக்கு முதுகு சொறியிறியே" என்றான் செந்தில்நாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இருங்க முத்துலிங்கத்தோட சொல்லி படையை திரட்டிக் கொண்டு வாறன்." என்றான் கந்தசாமி.

"முத்துலிங்கமும் அவர்ர படையும் அந்தக்காலம். இப்ப எங்கிட்டே இருப்பது செங்கோல் படை. அது எதற்கும் அஞ்சாத படை. ஊர்மக்கள் அனேகர் சேர்ந்தபடை. வந்தீங்க. இப்படித்தான் தூசி மாதிரி தூக்கித்தூக்கி எறிவோம். இப்படித்தான் அடிப்போம்." என்று கூறி தடியைத்தூக்கிக் கொண்டு கந்தசாமியை அடிக்கத்துரத்தினான் முருகேசு. பாய்ந்து ஓடினான் கந்தசாமி.

முருகேசு நின்றவர்களையும் தெருவால் வருவோர், போவோர் எல்லோரையும் நிற்பாட்டி வைத்துக் கொண்டான்.

"இனியும் முத்துலிங்கத்திற்காக இந்த ஊரை விக்கப்போடா. அவர்ர பணத்துக்காக பணியப்போடா. முன்னையே நெனப்பிலே பத்து, இருபது பேரை கூட்டிக்கிற்று அடிக்க வருவார். நாம எல்லோரும் இவடத்த கூடனும். வீட்ட போய் வாற ஆட்கள் சுறுக்கா போய் வாங்க. வீட்டிலுள்ள பெரிய மகன்மாரையும் கூட்டி வாங்க. இன்டைக்கு வந்து ஏசினா நல்லா ஏசனும். அடிக்க வந்தா எல்லோரையும் அடிச்சு நொறுக்கனும். இண்டைக்கு நடக்கப்போற சமரைக் கண்டு முத்துலிங்கம் ஒதுங்கனும். நம்மைக்கண்டு பதுங்கனும்." என்றான் முருகேசு.

பொதுமக்கள் முகுந்தனின் கடைக்கு முன்னால் திரண்டு விட்டார்கள். ஊர் இரண்டு பட்டால் கொழுப்பவனுக்கு, கொள்ளை அடிப்பவனுக்கு கொண்டாட்டம். ஒன்று பட்டால் அரசியல் மூலம் ஆதாயம் பெறுபவனுக்கு திண்டாட்டம்.

முத்துலிங்கத்திற்கு எதிராக இவ்வளவு மனிதர்கள் திரண்டது இதுவே முதன் முறை. இங்கே திரண்டிருப்பது அங்கே உள்ளவர்களுக்கு தெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயமில்லை. முத்துலிங்கம் வந்ததும் காணத்தான் போகிறார்.இருபது பேர்மட்டில் கூட்டிக்கொண்டு வந்தார். நடுவில் மகாராஜா போல கையில் தடியுடன் வந்தார் முத்துலிங்கம்.

ஊர்மக்கள் 'புதினம்' பார்க்கத்தான் கூடி இருக்கிறார்கள். தன்னை எதிர்க்க அல்ல என்ற பழைய எண்ணத்தில் இருந்தார் முத்துலிங்கம். அவருக்கு மனித மனங்களின் மாற்றம் தெரியத்தான் போகிறது. மக்கள் என்றும் மடையர்களா? பொறுமைக்கும் ஒரு அளவு கோல் உண்டல்லவா! மக்கள் மிக துணிந்து விட்டார்கள்.

"யார் அவன் முருகேசு? என்ற கையாள்கந்தசாமிக்கு அடிக்கவந்த நாய்களெல்லாம் வாங்கடா" என்றார் முத்துலிங்கம் ஒரு வினாடிதான் தாமதம்.

"யாருடா நாய்? நன்றி கெட்ட கெழட்டு நாயே! எங்குட வாக்குப்பலத்தால வென்ற எம்.பியை உன்ர குடும்பத்தேவைக்கு மட்டும் வெச்சு பயன்படுத்துறாய். இனி உன்ர கூத்து செல்லாது இனி நாங்க பயப்பட மாட்டோம்." என்றான் ஒரு பொதுமகன்.

இப்போதுதான் முதன்முறையாக மக்களின் குரல்கள் முத்துலிங்கத்தின் முகத்துக்கு முன்னே ஒலித்தன. நாயே என்ற வார்த்தை கேட்டு தடுமாறிப்போனார். முகத்துக்கு முன்னே சீ என்றும் பேசாத மக்கள் இன்று நாயே பேயே என்று பேசுகிறார்கள். தன்னை சமாளித்துக் கொண்டு மீண்டும் பேச தயாரானார் முத்துலிங்கம்.

"முருகேசு, செந்தில்நாதன் வாங்கடா வெளியே" என்றார் முத்துலிங்கம். ஆணவம் அவர்கூடப்பிறந்த ஒன்று.

"வெளியே நிற்கும் நாங்கள் எல்லோரும் முருகேசும் செந்தில் நாதனும் சொன்னதைத்தான் சொல்கிறோம். இப்ப நாங்க நிற்கிற புதினம் பார்க்கவல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவுக்கு மிஞ்சிப்போனா... முத்துலிங்கம்... உன்னோடையும் உன்ர ஆட்களோடையும் சண்டைபோடவும் ரெடியாக நிக்கம். உன்ட பெயரே சொல்லாத நாங்க பெயர் சொல்லி கூப்பிடுறம். சுயநலம் கொண்ட உன்னைப் போன்றவர்களின் கொட்டத்தை அடக்க எதுவும் செய்வம். எதிர்காலம் எங்கள் கையில்" என்று தைரியமாக கூறினான் கடைச்சொந்தக்காரன் முகுந்தன்.

முத்துலிக்கத்திற்கு ஆத்திரம் பொங்கியது. வெளியே வந்தார்கள். முருகேசு செந்தில்நாதன் ஆகியோருடன் மேலும் பல இளைஞர்கள். உள்ளேயும், வெளியேயும் முத்துலிங்கத்திற்கு எதிர்ப்பானவர்களே நிறைய நின்றார்கள்.

"உன்னோடு ஊரே நின்றது ஒரு காலம். இப்ப இருபது பேர். நாளை பத்துப்பேர். பிறகு உன் குடும்பத்தார் மட்டும்தான் உன்னோட நிற்பாங்க! பொறகு தெருவுக்கும் வராம வீட்டுக்க படுக்க வேண்டி வரும்" என்றான் முருகேசு.

"பிச்சைக்கார நாயே! உன்ட மகன் லோயரானா எனக்கென்ன பயமா? வாடா உன் தலையை இன்டைக்கு ஒடைப்பன்" ஆவேசமாக சொன்னார் முத்துலிங்கம். அவருடன் வந்திருந்தவர்கள் நடுநடுங்கிய படியே நின்றார்கள். நூற்றுக்கணக்கானவர்களுடன் இருபது பேரால் என்ன செய்ய முடியும்? இருந்தாலும் அடக்கமில்லாமல் துடித்துக்கொண்டிருந்தார் முத்துலிங்கம். தாறுமாறாகப் பேசத்தொடங்கினார்.

"உனக்கு முன்னாலதான் முருகேசு இருக்கிறான். அடி பார்க்க! முருகேசு இன்னும் முன்னாலே வா" எனக்கூறி முருகேசை இழுத்துக் கொண்டு தெருவுக்கு வந்தான் முகுந்தன்.

"தொடுபார்க்க" என்றான் முருகேசு. தடியை எடுத்து முருகேசை குறிவைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கினார் முத்துலிங்கம். பக்கத்தில் நின்றவர்கள் முத்துலிங்கத்தை கெட்டியாகப்பிடித்துக் கொண்டார்கள். முத்துலிங்கத்தின் கரத்தில் இருந்த தடி செந்தில்நாதனின் கரத்தில் இருந்தது.

அதே நேரம் முத்துலிங்கத்தின் அடியாட்கள் இருவர் முருகேசின் முதுகில் அடித்தார்கள். பலமான அடி இரத்தம் வழிந்தது.

அதன்பிறகு தெருபுழுதியால் போர்த்தப்பட்டிருந்தது. ஆ... ஊ... என்ற ஓசைதான் கேட்டது. சற்றுநேரத்தில் புழுதி அடங்கியது. முத்துலிங்கம் கூட்டி வந்தவர்களில் பத்து பேருக்கு மேல் நிலத்தில் விழுந்து உருண்டு கொண்டிருந்தார்கள். இரத்தம் உடலில் இருந்து பீறிட்டது. முத்துலிங்கத்தின் வெள்ளை சேட் சிவப்பாக மாறியது. வீரம்பேசியவர் தெருவில் புரண்டு மண்ணை முத்தமிட்டுக்கொண்டிருந்தார்.

செந்தில்நாதன் சொன்னான் "இன்றைக்கு இவ்வளவு போதும். எல்லோரு கலைஞ்சு வீட்ட போங்க. நம்ம அடிபட்டு, வீரம்பேசிய முத்துலிங்கம் முனகிக் கொண்டிருக்கிறார். அவர் எழுந்ததும் பொலிஸிற்கு போவார். நாம நல்ல லோயரோட போய் விளக்கத்தைப் பொலிஸில் சொல்லனும். பொலிஸ் நம்மை ஒன்றும் செய்ய முடியாது. பெரியவரை பார்த்தியா? நாயை மிதிக்கிறாப்போல மிதிச்சு போட்டாங்க. ஏழைகளை எந்நாளும் ஏமாற்ற முடியாது. ஏழைகள் ஒன்று சேர்ந்தா ஒன்னால ஒன்றும் செய்ய முடியாது. இது ஆரம்பம். எங்க வழியிலே வந்தா தண்டனை தொடரும்" என்றான்.

கஷ்டப்பட்டு எழுந்து கொண்டார் முத்துலிங்கம். கை, கால்களை தட்டி துடைத்துக் கொண்டார் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

"இருடா உங்களை பொலிஸில் எடுத்து உதைச்சு காட்டுறன்" ஆத்திரத்துடன் சொன்னார் முத்துலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது அந்தக்காலம். உனக்கு முன்னே முருகேசுட மகன் போய் பொலிஸில விளக்கம் கொடுத்திருக்கிறான். அவன் யாரு தெரியுமா? லோயர். உன்ர மகனைப் போல முட்டாள் அல்ல." என்றான் செந்தில்நாதன். அறியாமையில் ஊறியவன் அல்லவா முத்துலிங்கம். பொலிஸிற்குப் போனான்.

"உங்க கலாட்டா இனி செல்லாது. காரணம் மக்கள் படிச்சு அறிவாளியாகிட்டாங்க." என்றார் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி.

"கொஞ்சம் கதையைக் கேளுங்கோ சேர்" என்று ஐஸ்வைத்துப்பார்த்தார் அது பயனளிக்கவில்லை.

"உனக்கு ஒருவன் ஏசினா அடிக்க ஆள்கூட்டிப் போனது மாபெரும் குற்றம். உன்னை கூட்டிலே போடனும். தெரிஞ்சதுக்காக விடுறன். அடிக்க போனாய், அடித்தாய் ஆனா... அதைவிட பல மடங்கு நீயும் உன்ர ஆக்களும் வாங்கிற்றீங்க. ஊர் மக்கள் உன்னை எதிர்க்கிறாங்க. இனி வாய்மூடி உன் வேலையைப் பாரு. இல்ல ஊர் மக்கள் உதைப்பாங்க. இஞ்ச நாங்களும் உதைப்போம்" என்றார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி.

வெட்கத்துடனும் வேனையுடனும் ஊர் மக்களிடம் வாங்கிய அடிகளுடனும் வீடு வந்தார் முத்துலிங்கம். எத்தனை பேருக்கு இதுவரை அடித்திருப்பார் எத்தனை பேருக்கு அடிவாங்கிக் கொடுத்திருப்பார். இப்போது அவர் பட்ட அடிக்கு கேட்பாரே இல்லை!

சட்டமும் நீதியும் அவர் பக்கமில்லை. நீதி எந்தநாளும் உறங்காது. இப்போதுதான் இதை முத்துலிங்கம் உணர்ந்திருப்பார்.

தேர்தல் நெருங்கிக் கொண்டு வந்தது. இரண்டு வாரங்கள் வீட்டை விட்டு எங்கும் முத்தலிங்கம் செல்லவில்லை. வேதனை அவரை வாட்டியது. தேர்தல் முடிவின் பின்னர் அவரது பல தொழில்களுக்கு இழப்பு வந்து விடும். வருமானத்திற்கு குண்டு விழுந்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தலுக்கு இன்னும் பத்து நாட்கள் இருந்தன. தெருவெங்கும் போஸ்டர்கள் காட்சியளித்தன மக்களின் வாயெல்லாம் தேர்தல் கதைதான். நாள் நெருங்க நெருங்க வாக்குவாதங்களும் விவாதங்களும் பெருகின, முத்துலிங்கத்தின் முதலாளி வர்க்க அபேட்சகருக்கு ஊரெல்லாம் வெறுப்பு கூடியது. புதிய அபேட்சகர் வெற்றி பெறும் நிலையில் இருந்தார்.

தேர்தல் நடந்தாயிற்று வானொலிப்பெட்டிகளுக்கு முன்னாலும் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு முன்னாலும் மக்கள் அமர்ந்து தேர்தல் முடிவுகளை எதிர்பார்த்திருந்தார்கள்.

"அம்பாறைமாவட்டம். ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த ஒரேயொரு தமிழ் பேசும் உறுப்பினர் பத்தாயிரம் மேலதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளார்." என்று தெரிவிக்கப்பட்டதுதான் தாமதம் பட்டாசு வெடி காதை பிளந்தது. முத்துலிங்கத்தின் வீட்டு அருகிலுள்ள வீடுகளில் அதிகமான பட்டாசுகள் வெடித்தன.

முத்தலிங்கத்தின் இறுதி எதிர்பார்ப்பு நமது எம்பி மீண்டும் வெல்ல வேண்டும் என்பதே! அதுவும் தோல்வியில் முடிந்து விட்டது.

அவரது எதிர்பார்ப்புக்கள் யாவும் ஏமாற்றத்தில் முடிந்து விட்டன. அவர் தெருவுக்கு செல்வதையும் குறைத்துக் கொண்டார். போனாலும் முன்னரைப் போல சத்தமிடவோ உதவிக்கு ஆட்கள் பெறவோ முடியாது. அதிகாரமும் கைமாறி விட்டது.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு படைப்பாளியின் பயணம்

ரகுமான் கவிஞன் என்ற வட்டத்திற்குள்ளோ, எழுத்தாளன் என்ற வரையறைக்குள்ளோ விழுந்து விடவில்லை. கண்முன்னே நடக்கும் அநீதிகளை அக்கிரமங்களை சாடி எழுதுவான். அது கவிதையாகவும் அமையும், சில கதையாகவும் போகும். சில கட்டுரையாகவும் வரும் இலக்கிய வடிவங்கள் கதை, கவிதை, கட்டுரை, நாடகம், பாடல். இதில் இக்கருவை எந்த வடிவில் கொண்டு போகலாம் என்று அவன் மனம் சொல்கின்றதோ அந்த வடிவத்தில் படைப்பான்.

ரகுமானை விட வயதில் கூடுதலாக உள்ள கவிஞர்கள் அவனை எள்ளி நகையாடுவார்கள். இருந்தாலும் அவர்களின் படைப்பை விட ரகுமானின் படைப்பில் வேகம் இருந்தது, விவேகம் இருந்தது.

பல வருடங்களுக்குப் பின்னர் ஒரு கவிதையை பிரபல பத்திரிகையில் எழுதியிருந்தான். அது பலரின் பாராட்டையும் பெற்றது. பொறாமை கொண்ட, அதிக காலமாக எழுதினாலும் இன்னும் வளராத ஒரு சில பொறாமை கொண்டவர்கள் மறைமுகமாக வேறும், அவனிடத்தில் வேறும் பேசிக் கொண்டார்கள்.

"இவரும் பெரிய எழுத்தாளன் என்று நினைச்சு வந்திற்றார். என்னத்தை எழுதிக்கிழிக்கப்போகிறார். எப்படியோ ஒன்டை எழுதிற்றார். அதற்குள் பெரிய கதை. இனி எழுதிப்பார்க்கட்டுமே என மறைமுகமாக மற்றவர்களிடத்தில் கூறினார்கள். இவ்வாறு மறைமுகமாக கூறியவர்களிடம் நேரடியாகக் கேட்டுப்பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லா எழுதுறீங்க. தொடர்ந்து எழுதுங்க. நல்ல கருத்துக்களை சொல்லி வாறீங்க" ஐஸ்வைத்து கூறினார்.

தீய மனிதர்களின் மனதிலும் நல்லவற்றை விதைத்து தூயவனாக்க வேண்டிய கவிஞர்கள், எழுத்தாளர்களே இவ்விதம் பொறாமை கொண்டு பேசினால் நல்லமனம் கொண்டவர்கள் யாரிருப்பார்கள்?

பெரும் கவிஞர்கள், எழுத்தாளர்கள் ரகுமானை மனதாறப்பாராட்டினார்கள்.

"சுறுசுறுப்பான பொடியன். துணிச்சலான கருத்துக்களை எழுதிவிடுறான். ஒரு சில படைப்பாளிகள் சில நண்பர்களுக்காக அவர்கள் செய்கின்ற தவறுகளை மறைத்து எழுதிவிடுகிறார்கள். காரணம் நட்பு கெட்டு விடுமென்று! ஆனால் ரகுமான் அப்படியல்ல. நண்பர்கள் செய்த, செய்கின்ற தவறுகளை வைத்தே படைப்புக்களை படைத்துள்ளான். அதனால் அவன் நேர்மை நிறைந்த படைப்பாளி. வெறும் கற்பனை படைப்பு கற்பனையாகவே இருக்கும் உண்மையை வைத்து எழுதும் படைப்புக்கள் உயிரோட்டமுள்ளவையாக இருக்கும். இவ்வாறு எழுதுவதால் நல்ல நண்பர்கள் நட்பை விடமாட்டார்கள். கெட்ட தனத்தை விடுவார்கள். தீய நண்பர்கள் உறவை விட்டு விடுவார்கள்" என்றார் பிரபல எழுத்தாளர் சஹீட்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்தார் இன்னொரு நடுத்தர வயது கவிஞர் ஒருவர். ஏதோ பேச வேண்டும் போல் இருந்தது அவருக்கு! அவரால் பேசிக் கொள்ள முடியவில்லை. எழுத்தாளர் சஹீட் சொன்ன கதைக்கு எதிர்மாறான கருத்துக்களை அவர் கூற நினைத்திருக்கலாம். அதாவது படைப்பாளி ரகுமானை தரக்குறைவாக பேசுவதாக இருக்க வேண்டும்.

"அப்படி பேசிவிட்டால் சஹீட் எனது புறாமைக் குணத்தை கண்டுவிடுவானே" என்றுதான் நடுத்தர வயதுக்கவிஞர் அனிபா வாய் மூடி மௌனியானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தான் மட்டும் எழுத வேண்டும். தனது ஆக்கம் மட்டும் பத்திரிகையில் வரவேண்டும்" என்று நினைப்பவர்கள் உண்மையில் எழுத தகுதியில்லாதவர்கள். பலரின் ஆக்கங்களுக்கு மத்தியில் தனது ஆக்கமும் வெளிவந்து தனக்கொரு தனியிடத்தை பெறுபவனே தகுதியுள்ள ஒரு படைப்பாளி. அவனே மக்கள் எழுத்தாளன்.

ரகுமானுக்கு யாரின் ஆக்கம் எந்த சஞ்சிகை, பத்திரிகையில் வந்தாலும் கவலையில்லை. பொறாமையில்லை திறமையுள்ளவர்கள் புதுமை படைக்க முனைபவர்கள் எழுதட்டும் என்றிருப்பான்.

அனிபா அப்படியல்ல. தெரிந்தவர் அறிந்தவர்களிடம் படைப்பு கொடுத்து பிரசுரிக்க வைப்பான். கருத்துக்கள் புதுமையுமல்ல. புரட்சியுமல்ல. பழைய சரித்திரத்தை ஒரு பாணியில் சொல்லி முடிப்பான். அரைத்தமாவை அரைப்பவர்கள் புளித்துப்போன அப்பத்தை பலகாரமாக்கி "ஏய் சாப்பிடு" என்று மக்களிடமும் அதிகாரம் காட்டுபவர்களாக இருக்கிறார்கள். புளித்ததை, புழுத்ததை எப்படி மக்கள் விரும்பி உண்பார்கள்?

இளம் எழுத்தாளன் அவரைவிட சிறப்பாக எழுதினாலும் "இவங்கெல்லாம் என்னத்தைஎழுதிக்கிழிக்கப் போறாங்க" என்ற தாழ்வு மனப்பான்மையில் பேசுவார். அப்போது பல வருடங்களுக்கு முன்னர் எப்படியோ ஒரு சிறுகதை தொகுதியை வெளியிட்டு விட்டார். அதை இமயமலையில் ஏறி சாதனை புரிந்தாற்போல கூறித்திரிந்தார். நண்பர்களின் காலைப்பிடித்து பல பத்திரிகைகளிலும் விமர்சனமும் வரையவைத்தார். விமர்சனம் எழுவது யார்?

நண்பனுக்காக, நண்பன் எழுதினால் எப்படி இருக்கும்? போற்றிப் புழுகி தூக்கி வைத்து எழுதிவிட்டார்கள். அவர்களுக்கு புகழ் தலைக்கேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது இளம் எழுத்தாளர்கள் நிறைய எழுதுகிறார்கள். அதில் பாதிப்பேர்களுக்கு மேல் நல்ல கருத்துக்களை அள்ளித்தெளிக்கிறார்கள். ரகுமானும் ஓரளவு எழுதி வருகிறான்.

இந்த நாட்டில் கண்ணதாசனோ வைரமுத்துவோ கிடையாது. அவர்களுக்கு நிகரான கருத்துக்களை எழுதுகிறார்கள். மு. வரதராஜனோ, அகிலனோ இங்கு இல்லை. ஆனால் சமுதாய பிரச்சினைகளை வைத்து பயன்தர தக்கவகையில் எழுதுபவர்கள் நிறைய இருக்கிறார்கள்.

ரகுமானுக்கும் ஒரு எண்ணம் வந்தது. நானும் ஒரு புத்தகத்தை வெளியிட்டால் என்ன? என்பதே அது.

தீவிரமாக முயற்சியில் இறங்கினான். பெரும் எழுத்தாளர்களிடம் அறிவுரை கேட்டான். அவர்களும் புத்தக வெளியீட்டுக்கு உறுதுணை புரியக்கூடிய வகையில் கருத்துக்களை கூறினார்கள் அவர்களின் நற்கருத்துக்களை கேட்டதும் புத்தகம் வெளியிடும் எண்ணம் ரகுமானுக்கு வந்தது. இளமைக்கும் முதுமைக்கும் இடையில் உள்ள படைப்பாளி ஒருவரின் கருத்தை கேட்டறியும் நோக்குடன் அனிபாவின் இல்லம் சென்றான் ரகுமான்.

"வா ரகுமான்" வாய் மலர வரவேற்றான் அனிபா. உள்ளத்திலே தீ வெந்தது. இவனும் புத்தகம் வெளியிடப்போனிறானா என்ற அலட்சியம் உள்ளத்தில் இருந்தாலும் வெளிக்காட்டவில்லை. தெரியாதது போல் கேட்டார்.

"என்ன விஷயம்" என்ற வினாக்குறியில் விசயத்தை கிளறினான். "இல்லே... சேர் ஒரு புத்தகத்தை வெளியிடுற முயற்சியில் இருக்கன் உங்களிட்டேயும் ஆலோசனை கேட்பம் என்று வந்தன்" என்று நிறுத்தினான் ரகுமான்.

"என்ன தம்பிஎத்தனையோ மேதைகள் என்னவெல்லாம் எழுதிப்போட்டாங்க. சமூகம் திருந்திச்சா? நானும் எழுதினன்தான்! இப்ப குப்பைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவருது. என்னத்தை எழுதப்போறாய் தம்பி? வீணாக பணத்தைக் கரைக்காதே வாப்பா உம்மாவுக்குக் கொடுத்தாலும் நல்லது." என்றார் குள்ளநரி எழுத்தாளர் அனிபா.

"சமூகம் திருந்தாட்டி ஒரு சிலராவது திருந்துவாங்க. திருந்தாட்டியும் எனக்கேற்ற இலக்கியப்பணியை நானும் செய்யப்போறன். பிரபல எழுத்தாளர் சஹீட் தொடக்கம் பாவலர் காரியப்பர் வரையும் சந்தித்து விட்டுத்தான் உங்களை சந்திக்க வந்தேன். உங்களை நல்லவர் என்று நெனச்சது எவ்வளவு தப்பு. எழுத்து வேறு இதயம் வேறு என்றதை காட்டிட்டீங்க. புத்தகம் வெளியிட எல்லோரும் ஆலோசனை சொன்னாங்க. ஆனா... நீங்க மட்டுந்தான் "வெளியிடாதே" என்று சொல்லி முளையிலே கிள்ளப்பார்த்தீங்க. ஆனா ஒன்று சொல்றன் நீங்க ஒரு புத்தகம் மட்டும்தான் வெளியிட்டீங்க. ஆனா... உங்கட வெளியீட்டை மீறி சாதனை படைப்பேன். என் வெளியீட்டை தடுக்கவே வழி சொன்னீங்க. அதனாலே வெகுவிரைவில் அடுத்த வெளியீட்டையும் செய்வன். அழைப்பிதழ் அனுப்புவேன். விரும்பினா வாங்க" நின்றவாறே பேசிவிட்டு வெளியிறங்கினான் ரகுமான்.

"அவசரப்படாதே. உனக்கு நல்லதை சொன்னேன் காசு வீண்தானே? கொஞ்சம் நில்லு" என்றார் அனிபா.

"என்ர காசு. நீங்க வெளியிட்டது. தூசுக்கா? உங்களுக்கு எப்படியோ எனக்கும் அப்படி. உங்களை மிஞ்சி விடுவேன் என்று பயப்படுறீங்க. நீங்களும் கதை, நாவல் என்று எழுதுங்க. நான் தடுக்கல்லே! போனதும் புத்தகத்தை பிரஸிற்கு கொடுக்கிறன்." என்று கூறி புறப்பட்டு விட்டான் ரகுமான்.

அனிபாவிற்கு வெட்கம் ஒரு புறம், துக்கம் மறுபுறம் "நான் நெடுநாளாக இருந்த கோழி ஒரு முட்டை இட்டது போல்தான்" என்று அனிபாவே நினைத்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரகுமான் சாய்மனையில் சாய்ந்திருந்தான். சிந்தித்தான்.

"அனிபாவை நம்பி ஏமாந்தேன். அவனது படைப்பு ஒரு நடிப்பு. இப்படிப்பட்ட தீயகொள்கை உடையவன் எப்படி நடிப்புக்காக எழுதுறான்? நேரில் ஏழைகளை மட்டம் தட்டுகின்றான். பணக்காரன் பக்கம் பேசுகின்றான். ஏழைகளுக்கு சிறிதும் உதவமாட்டான். தீயவர்களை ஒழிக்கத்தான் எழுத்து என்கிறான். தீயவர்களோடு உறவு கொண்டு தீயவர்களை வளர்க்கிறான். தீயதையும் வளர்க்கிறான். இவர்களெல்லாம் எழுத்தாளர்கள்." என எண்ணிப்பார்த்தான் ரகுமான்.

ரகுமான் அவனுக்குள் ஒரு பாணியை வைத்து எழுதி வந்தவன். அவைகள் புத்தகமாக வந்தால் புகழ்பெறத்தானே செய்வான்.

அனிபா தான் இருக்க தன்னைவிட இளைஞன் புகழ்பெறுவதை ஒரு நாளும் விரும்பமாட்டான்.

இரண்டு வாரங்களின் பின்னர் பாதையால் செல்லும் போது அனிபா ரகுமானைக் கண்டு கொண்டார்.

"நில்லுதம்பி. ஆத்திரப்படாமல் நான் சொல்வதை கொஞ்சம் கேள் தம்பி." என்றார் அனிபா. நின்று கொண்டான் ரகுமான்.

"கவிதையை விட கதை எழுது. அதிகம் விற்கும். இதைத்தான் சொல்ல வந்தேன். அதற்கிடையில் அவசரப்பட்டு ஆத்திரப்பட்டு போயிற்றாய்" என்று நல்லபிள்ளை மாதிரி நடிப்புக்கலையை காட்டினான்.

"இப்ப கவிதையைத்தான் வெளியிடப்போறேன். கவிதையை வெளியிடப்போறேன் என்றால் கதையை வெளியிடு என்பாங்க. கதையை வெளியிடப் போறேன் என்றால் கவிதையை வெளியிடு என்று மாற்றி மாற்றி கதைப்பாங்க." என்றான் ரகுமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்ல தரமான எழுத்தாளர்களிடம் ஆலோசனை கேட்டிருந்தன். நீங்களும் எல்லோரையும் பார்க்க நல்லவர் என்று நினைத்திருந்தேன். நல்ல நடிகர் என்பதை தெரிஞ்சுக்கிட்டேன்." என்று மீண்டும் கூறி விட்டு போய்விட்டான் ரகுமான்.

அவன் முதன் முதல் ஒரு புத்தகத்தை வெளியிட எவ்வளவோ எதிர்ப்புக்களை சந்திக்க வேண்டி வந்தது. எவ்வளவோ போராட்டங்களை செய்ய வேண்டி இருந்தது. வெளியீட்டு விழாவிற்கு அழைப்பிதழ் கொடுக்க வீடுகளுக்கு செல்லும் போது எத்தனையோ பேர் எவ்விதம் எல்லாம் கீழ்த்தரமாக பேசினார்கள். இரண்டு வரி எழுதியவர்களெல்லாம் பெரும் மேதைகளாக காட்டி கொண்டார்கள். எவ்வளவோ சகிப்புத்தன்மையை பெற்று புத்தகத்தை வெளியிட வேண்டி வந்தது.

எல்லோரும் ஏதோ ஒரு விதத்தில் அவனைக் குற்றம் சொல்லி வந்தார்கள்.

ஒரு சில பெயர்பெற்ற படைப்பாளிகள் மட்டும் அவனை பாராட்டினார்கள்.

புத்தக வெளியீட்டு விழாவும் வந்தது. பலரும் ரகுமானைப் பாராட்டியே பேசினார்கள். இரண்டு மூன்று பேர் மட்டும் தனது சொந்த விடயங்களை வைத்துக் கொண்டு கொஞ்ச நேரம் காரமாக பேசினார்கள்.

ரகுமான் பதிலுரை ஆற்ற வேண்டிய நேரம் வந்தது.

"அன்புள்ள பெரியார்களே... இலக்கிய ஆர்வலர்களே அஸ்ஸலாமு அலைக்கும்.

இலக்கிய உலகிற்கு என்னை தெரிந்தாலும் என்னை விட சேவை புரிந்த இலக்கிய வாதிகள் நிறைய இருக்கிறார்கள். அதில் சிறப்பு வாய்ந்தவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் என் வெளியீட்டிற்கு தேவையான ஆலோசனைகள் தந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை நடிப்புக்காக எழுதும் போலி இலக்கியவாதிகள் இரண்டொருவர் நேரத்திற்கு ஒரு கதை கதைத்தார்கள். கவிதை வெளியிடப்போகிறேன் என்ற போது கதை வெளியிடு என்றார்கள். கதை வெளியிடும் போது கவிதை வெளியிடு என்றார்கள்.

நான் முடிவான மனதுடன் திடமாக இருக்கிறேன். இலக்கியத்திற்கு என்னால் ஆன பணியை புரிவதுதான் என்வாழ்க்கையின் நோக்கம் இதற்கு பிறகுதான் சொந்த வாழ்க்கையைப் பற்றிய எண்ணம்" என்று சுருக்கமாக கூறி முடித்தான் ரகுமான். பார்வையாளர்கள் கைதட்டி மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

ரகுமானுக்கு இலக்கிய உலகத்தில் ஒரு தனியிடம் கிடைக்கத்தொடங்கியது. எல்லோரும் எழுதிய பாணியில் எழுதாமல் புதிய கோணத்தில் எழுதத்தொடங்கினான்.

அவனது எழுத்தில் இறுக்கம் இருந்தது. கருத்தில் முற்போக்கு இருந்தது.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிய அரசன்

சிறுவர் கதை

முன்னொரு காலத்திலே தேவபுரி என்ற கிராமத்திலே சேமகாண்டன் என்றொரு அரசன் இருந்தான்.

அவன் மற்றவர்களின் பிள்ளைகள் படித்து முன்னுக்கு வருவதை கொஞ்சமும் விரும்பாதவன். அரசன் சேமகாண்டனுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் இருந்தார்கள். இருவரையும் படிப்பிக்க பட்டினத்திற்கு அனுப்பியும் பயன்கிடைக்கவில்லை.

படிப்பதற்குப்பதிலாக மது, சூது என்பவற்றைப் பழகிக் கொண்டு வந்தார்கள். தன் மக்களான இவர்கள் படிக்காததினால் மற்றவர்களின் பிள்ளைகள் படித்து முன்னுக்கு வருவதை அவன் விரும்பவில்லை.

பணக்காரர்களின் பிள்ளைகள் என்றால் தப்பினார்கள் எத்தனையோ ஏழைப்பிள்ளைகள் கெட்டித்தனமாகப் படித்துக்கொண்டு வரும் போது மாயமாக மறைந்து விடுவார்கள்.

எவ்வளவோ முயற்சித்துத் தேடியும் தங்கள் பிள்ளைகள் எங்கே என்று கண்டு பிடிக்க முடியாது போயிற்று. அரசன் சேமகண்டன்தான் கெட்டித்தனமான ஏழைப்பிள்ளைகளைப் பிடித்துத் தனது தோட்ட வேலைக்கு வைத்துக் கொள்கின்றான். என்பது எவருக்கு தெரியப்போகிறது?

மனிதர்களின் கண்ணுக்குப்படாத காட்டுப்புற தோட்டங்களில் தான் வேலைக்கு வைத்துக் கொள்வான். கண்டால் ஊர்மக்கள் போர் தொடுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவிடுவார்களே...! அரசன் என்ற அந்தஸ்தே பறிபோய்விடுமே என்றுதான் இவ்விதம் செய்வான்.

அன்றொரு ஞாயிற்றுக்கிழமை பாடசாலை விடுமுறை என்ற படியால் மாணவர்களான சண்முகமும், சந்திரனும் அரசமாளிகையையும் பூந்தோட்டத்தையும் பார்க்க ஆசைப்பட்டார்கள்.

ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்ட கட்டடத்தைக் கண்டு மெய்மறந்தார்கள். இடது புறமாகவுள்ள பூந்தோட்டத்தில் பல நிறங்களிலும் பூக்கள் பூத்துக்குலுங்கின.

அப்போது...!

"அடே பொடிப்பயல்களே நில்லுங்கடா" என்றவாறு ஒரு முரடன் ஓடிவந்தான்.

"வா ஓடிப்போவோம்" என்று சண்முகம் கூற இருவரும் ஓடினார்கள். கல்லொன்று தடுக்கியதால் சந்திரன் கீழே விழுந்தான். அவன் எழுந்து ஓடுவதற்குள் முரடன் பிடித்துக் கொண்டான்.

நின்றால் தன்னையும் பிடித்துக்கொள்வான் என்று நிற்காமல் ஓடிவிட்டான் சண்முகம்.

சந்திரன் "அம்மா... அம்மா" என்று அலறினான். அவனை இழுத்துச் சென்றான் முரடன்.

வீட்டுக்குச் சென்ற சண்முகம் தன்பெற்றோரிடமும் சந்திரனின் பெற்றோரிடமும் நடந்த கதையைச் சொன்னான்.

ஊரில் நூறு பிள்ளைகளுக்கு மேல் காணாமல் போய்விட்டார்கள். இதைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் என் பிள்ளையும் காணாமல் போய்விட்டானே! ஐயோ... கடவுளே... இதற்கொரு தீர்ப்பை நீயே வழங்கு என ஒப்பாரி வைத்தாள் சந்திரனின் தாயார். சண்முகத்தின் தந்தையும் வருத்தப்பட்டார்.

"அப்பா இதற்கொரு வழியிருக்கு எல்லாப்பிள்ளைகளும் அரச மாளிகை அருகேதான் காணாமல் போயிருக்கிறார்கள். எனவே அரசனுக்கும் இதற்கும் தொடர்புண்டு என்றான்" சண்முகம்.

"பேசாதே அரசன் சேமகாண்டன் கேள்விப்பட்டால் நம் குடும்பத்தையே அழித்திடுவான்" என்றார் சண்முகத்தின் தந்தை.

"இப்படியே பயந்தால் எல்லோரும் தங்கள் பிள்ளைகளையே இழக்க வேண்டி வரும். நாமெல்லாம் துணிந்தால் இதற்கு முற்றுப்புள்ளி கிடைக்கும்." என மீண்டும் சிறுவன் சண்முகம் சொன்னான்.

"உங்க பிள்ளை சொல்வது சரி. யாருக்கும் தெரியாமல் இரவுவேளை முப்பது நாற்பது பேர் வரை அரச மாளிகையைச் சுற்றிப்பார்ப்போம்" என்றார் சந்திரனின் தந்தை. அன்றிரவே சொல்வதென முடிவெடுக்கப்பட்டது.

நள்ளிரவு எல்லோரும் பதுங்கிப்பதுங்கிச் சென்றார்கள். முன்புறம் உள்ள காவலாளி துப்பாக்கியை சுவரில் சாய்த்து வைத்துவிட்டுத்தூங்கினான். ஓசைப்படாமல் எடுத்தார்கள். அவனை ஏன் அடிக்கவேண்டும்? தூங்கட்டும் என்று விட்டு விட்டு உட்புறம் சென்றார்கள்.

உள்ளே மூன்றுகாவலாளிகளும் மதுவருந்திக் கொண்டிருந்தார்கள். நன்றாகக் குடித்துப் போதை ஏறட்டும் என்று பொறுத்திருந்தார்கள். ஒரு காவலாளி தடாலென நிலத்தில் சாய்ந்தான்.

மற்ற இரு காவலாளிகளும் வாய்க்கு வந்தபடி அரற்றிக் கொண்டிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதான் தருணம் என்று எல்லோரும் உட்புகுந்து காவலாளிகளின் வாய்களை துணியால் அடைத்து விட்டு கையையும் காலையும் கட்டிப்போட்டு விட்டார்கள்.

காவலாளிகள் குடிவெறியில் நம்மதியாக தூங்கி குறட்டை விட்டார்கள். அவர்கள் உள்ளே சென்றதும் தகரத்தால் வேயப்பட்ட கட்டிடம் ஒன்று தெரிந்தது. அதற்கு ஜன்னல் கூட இல்லை. கதவு இடுக்கவழியே பார்த்தார்கள்.

உள்ளே பல சிறுவர்கள் உறங்கிக் கொண்டிருந்தார்கள். சிலர் தூங்காமல் அழுது கொண்டிருந்தார்கள். சத்தம் வராமல் கதவை உடைத்துத் திறந்தார்கள்.

"உடனடியாகப் புறப்படுங்கள். தாமதித்தால் ஆபத்து. காவலாளிகள் விழிப்பதற்கு முன் போய்விட வேண்டும். எல்லோரும் எழும்புங்க, உங்க வீடுகளுக்குக் கொண்டு விடுகின்றோம்" மெதுவாகச் சொன்னார் சந்திரனின் தந்தை.

சிறுவர் எல்லோரும் தப்பினோம் பிழைத்தோம் என்று ஒரே ஓட்டமாக ஓடிச்சென்றார்கள்.

(சூடாமணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகள் = கற்பனைகள்

மேகம் கறுத்திருந்தது. மழைவரப்போவதை வானம் முன்கூட்டியே அறிவித்திருந்தது. ஒவ்வொரு ஊழியராக அலுவலகத்திற்கு வரத்தொடங்கினார்கள். மழையோ, வெயிலோ, புயலோ, இடியோ வேலைக்கு வேளைக்கு வரத்தானே வேண்டும்.

மழைபேய ஆரம்பித்தால் அது சங்கடம் என்று வழமையை விட முன்கூட்டியே வேலைக்கு வந்திருந்தார்கள் சிலர். அதில் ஜெமீலாவும் ஒருத்தி. அங்கு கடமைபுரியும் பெண்களில் செல்வியாக இருப்பவர் ஜெமீலா மாத்திரம்தான்! மற்றவர்கள் திருமணம் செய்து பிள்ளையும் கண்டவர்கள். இன்னும் திருமணம் ஆகாமல் இருக்கும் ஜெமீலா மனதில் கனவுகளை வளர்த்து கற்பனையில் எண்ணத்தைப் போக்குவாள் என்பதை சொல்லியா தெரிய வேண்டும்.

எதிர்கால வாழ்வை எண்ணித்தான் கற்பனை பண்ணினாள். அந்த அலுவலகத்திற்கு புதிதாக நியமனம் பெற்றுத்தான் ஜெமீலாவும், சுஹைப்பும் வந்திருந்தார்கள். இரண்டு பேரும் திருமணம் செய்யாதவர்கள் என்பதால் இரண்டு பேரையும் "காதல் கதை" கட்டிவிட்டார்கள் அலுவலக ஊழியர்கள்.

"எங்களிடம் மறைக்காதே சுஹைப். நீ காதல் கடிதம் எழுதா விட்டாலும் உன் கண்கள் ஜெமீலாவுக்கு தூது விடுகின்றதே! உன்பார்வை ஜெமீலாவை காந்தமாய் இழுக்கின்றதே! ஜெமீலாவுக்கு உன்னைப்பார்க்காவிட்டால் பைத்தியமே பிடித்து விடுமாம்" இருவருக்கும் கேட்கக் கூடியதாகச் சொன்னான் சரீப்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்கத்தால் நிலம் நோக்கினாள் ஜெமீலா. "அப்படி ஒன்றுமில்லை. சும்மா கதையாதீங்க" என்றான் சுஹைப். உண்மையாக ஜெமீலாவைக் காதலிக்கும் எண்ணம் சுஹைப்புக்கு வரவில்லை. ஊழியர்கள் இரண்டு பேரையும் பற்றி கதை கட்டிவிட்டதால் சுஹைப்பைக் காதலிக்கும் எண்ணம் ஜெமீலாவுக்கு வந்து விட்டது. இரவு பகல் இன்றி அவனது நினைவில் நீந்தினாள்.

"சுஹைப் ஆண் பிள்ளைதானே அவர் என்னைக் காதலிக்கின்றார் என்றால் சொல்ல வேண்டியதுதானே! சொல்ல முடியா விட்டால் எழுத வேண்டியதுதானே! அவர் காதலிக்காவிட்டால்...! எப்படியோ என்னைக் காதலிக்கிற அளவிற்கு கொண்டுவரவேண்டியதுதானே" என்று கற்பனை பண்ணிக் கொண்டாள் ஜெமீலா.

ஓய்வு நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஜெமீலா சுஹைப்போடு கலந்து பேச துணிந்து விட்டாள். யார் என்ன சொன்னாலும் பரவாயில்லை! பழகுவோம், கதைப்போம் என முடிவெடுத்து உறவாடத் தொடங்கினாள் ஜெமீலா.

சக ஊழியர்கள் ஜெமீலாவையும், சுஹைப்பையும் பற்றி மேலும் கதை கதையாக கதைத்து காதல் உருவாக வழிசமைத்தார்கள். அவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்கும் போது "அவங்க கல்யாண நாளைப்பற்றி தீர்மானிக்காங்க. அவங்க முடிவெடுத்த பின்னர் கார்ட் அடித்து நமக்கு அழைப்பு விடுவாங்க" என்றான் சுலைமான்.

"ஜெமீலாவைக்காதலித்தால் என்ன? நல்லதுணைதானே! வயதுக்கு பொருத்தமான துணைதானே!" என்று விரும்பத்தொடங்கினான் சுஹைப். துணிவாக ஜெமீலாவிடம் எடுத்துச்சொல்ல அவனால் முடியவில்லை. நெருங்கி நெருங்கி ஜெமீலாதான் கதைப்பாள்.

அன்று மாலை வேளை வேலை முடிந்து போகும் போது "உங்கட நடை ஒரு கவர்ச்சி. சுருண்ட முடி அதைவிட அழகு" என்றாள் ஜெமீலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்துக் கொண்டான் சுஹைப் "உங்களை நான் விரும்புறன் ஐ லவ் யூ" என்று சொல்லிக் கொள்ள ஆசை. ஆனால் அவனால் முடியவில்லை. ஆணாக இருந்தும் ஒரு வகையில் கோழையாகி விட்டான்.

இன்று கொடுப்பதற்கென கொண்டு வந்த காதல் கடிதத்தை வீட்டுக்குப் போய் படித்துப்பார்த்து சில வசனங்களை மீண்டும் மாற்றிக் கொண்டாள். எப்படியாவது நாளைக்கு இதனை சுஹைப்பிடம் கையளிக்க வேண்டும் என முடிவெடுத்துக் கொண்டாள்.

அதே வேளை இன்று கல்முனையிலிருந்து இடமாற்றமாகி வந்த சியாமா சுஹைப்புடன் நெருங்கி நெருங்கி கதைத்தது ஜெமீலாவுக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. "சியாமாவும் திருமணம் முடிக்காதவள். அவள் சுஹைப்பை வாரிக்கொள்வதற்கு முன் நான் காதல் கடிதத்தைக் கொடுத்து கருத்தை எதிர்பார்க்க வேண்டும்." என தீர்மானித்துக் கொண்டாள் ஜெமீலா.

"நான் சுஹைப்பை காதல் வலையில் விழ வைத்து திருமணம் செய்தால் நல்லது" என்று சியாமாவும் நினைத்துக் கொண்டாள்.

காலை மலர்ந்தது. நேரகாலத்துடன் அலுவலகம் சென்றாள் ஜெமீலா. சிற்றூழியர் தூசி தட்டி துப்புரவு செய்து கொண்டிருந்தான். சுஹைப்பும் வந்து விட்டான். வேறு எவரும் வரவில்லை. பேசாமல் சுஹைப்பின் அருகே சென்று காகிதத்தைக் கையில் வைத்து விட்டு வந்தாள் ஜெமீலா. சிற்றூழியருக்கு இது தெரியாது. மற்ற ஊழியர்கள் வராதது ஜெமீலாவுக்கு உதவியாகியது.

தனது டைரிக்குள் வைத்துப்படித்தான் சுஹைப். அவனது முகம் மலர்ந்தது. நான் கண்ட கனவு நனவாகப் போகிறதே என மகிழ்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்டீனில் தேநீர் பருகிவிட்டு வெளியில் வந்தாள் ஜெமீலா. "ஐ லவ் யூ ஈவினிங் லெட்டர் தாறன்" என்றான் சுஹைப்.

ஜெமீலாவுக்கு தலை கால் தெரியாத சந்தோஷம். அவள் நினைத்த காரியம் நடக்கப்போவதை எண்ணினாள் இன்பம் பொங்காதா?

அதே நேரம் சியாமா கற்பனையில் சிறகடித்தாள்.

"இங்கு இடம்மாறி வந்தாலும் பரவாயில்லை. திருமணம் செய்யாத சுஹைப் இருக்கிறார். அவரை மெதுவாக கைக்குள் போட்டுக் கொண்டால் என் மேல் ஆசைப்பட்டு காதலிக்கத்தொடங்குவார். பிறகென்ன? கல்யாணம்தான்! இனி மெல்ல மெல்ல சுஹைப்பை நெருங்கி சிரித்து பேச வேண்டும். என் சிரிப்பு அவருக்கு பிடிக்கிற மாதிரி சிரிக்க வேண்டும்" என நினைத்துக் கொண்டாள் சியாமா.

சுஹைப் – ஜெமீலா காதல் விவகாரம் சியாமாவுக்குத் தெரியாது. இப்போதுதான் அவர்களது காதல் முளைவிட்டிருக்கின்றதே; பின்னர்தானே கிளைவிடும்.

நண்பர்களுக்குக்கூட தெரியாது. அவர்கள் விடுமுறை நாளில் வாசிகசாலையில் சந்தித்து உரையாடுவார்கள். ஒரு சில நண்பர்களுக்கு தெரியவந்தது.

அலுவலகத்திலும் இடைக்கிடை பேச்சுக் கொடுப்பாள் ஜெமீலா. அப்போது பல்லைக்கடித்துக் கொள்வாள் சியாமா. கண்டீனுக்கு சுஹைப் தனியாகப் போகும் போது பின்னால் சென்று "உங்களைக் காதலிக்கிறேன் சம்மதமா" என்று கேட்கவேண்டுமென கங்கணம் கட்டினாள் சியாமா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீர் அருந்த கன்டீனுக்குப் போனான் சுஹைப்.

யாரும் வருகிறார்களாக எனப்பார்த்தாள் சியாமா. யாரும் வரவுமில்லை, கவனிக்கவுமில்லை. விரைவாக கன்டீனுக்குள் போனாள் சியாமா. சுஹைப் தண்ணீர் பருகிக் கொண்டிருந்தான். சியாமா வருவதைக் கண்டு புன்னகைத்துக் கொண்டான்.

சிறிது நேரம் மௌனமாக நின்றாள் சியாமா. ஏதோ சொல்லப்போகிறாள் என்பதை மட்டும் ஊகித்துக் கொண்டான்.

"சுஹைப் ஒன்று சொல்ல நினைக்கிறேன் நெடுநாளாக. இன்டைக்கு சொல்லத்தான் வேணும். இனியும் மனதிலே வைச்சிருக்க முடியா. உங்களை நான் மனமார விரும்புறேன். நீங்க என்ன சொல்றீங்க சொல்லுங்க" என்றாள் சியாமா.

"ஞ லேட். வெரி சொறி ஜெமிலாவைக் காதலிக்கிறேன். அடுத்தமாதம் திருமணம் செய்வதாகவும் முடிவெடுத்திருக்கிறோம்" என்றான் சுஹைப்.

சியாமா பண்ணிய கற்பனையெல்லாம் கனவாகி விட்டது. கனவில் நடப்பது நிஜமாக நடப்பதில்லையே!

"நானும் பார்க்கிறன் வேலைக்குச் சேர்ந்து மூன்று வருடங்களாகிறது. ஒருத்தனும் கிடைக்கமாட்டேங்கிறானே! ஜெமீலா அதிர்ஷ்டசாலி. இல்லா விட்டால் வேலைக்குச் சேர்ந்து சில மாதங்களில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியுமா? எனக்கு எல்லாம் கனவுகள் கற்பனையாகிவிடுகின்றனவே! என்றெண்ணி வேதனையுற்றாள் சியாமா.

நாளையொருநாள் நிச்சயம் அவளும் வாழத்தான் போகிறாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்கள் இரையாகின்றன

சலீம் வங்கியொன்றில் லிகிதர் வேலை பார்க்கிறான். கடமையை உயிராக மதிப்பவன். நேரம் தவறாமல் வேலைக்குச் செல்வான். லீவு கூட அதிகமாக எடுக்க மாட்டான்.

அன்றொருநாள் உடம்புக்கு ஒரு மாதிரியாக இருக்கின்றது என்று சொல்லி விட்டு ஒருவாறு லீவு எடுத்தான். லீவு அதிகமாக எடுக்காத சலீம் இவ்விதம் லீவு பெற்றது. அதிசயம்தான்! காய்ச்சல் வந்து அவனை வாட்டியது. அவனின் உயிராக இருக்கும் அன்புக்காதலி சுலைஹாவைக் காணாது ஒறு புறம் தவித்தான். சுலைஹா வேறொரு வங்கியில் தட்டச்சாளராக கடமையாற்றுகின்றாள். இருவருக்கும் வேலை கிடைப்பதற்கு முன்பு காதல் அரும்பிவிட்டது.

சலீம் சுலைஹாவிடம் காதல் கொண்டிருப்பது ஜுனைதாவுக்குத் தெரியாது சலீமுக்கும் ஜுனைதாவுக்கும் படிக்கின்ற காலத்திலிருந்து நட்புண்டு ஜுனைதா அதைக் காதலாக மாற்ற முற்பட்டாள். சலீம் நட்பு என்ற முறையில் மட்டும் பழகுகிறான். நாட்கள் கடந்தன.

ஜுனைதா தன் எண்ணத்தை சலீமிடம் சொன்னாள். சலீம் மறுத்தான். சுலைஹா என்ற பெண்ணைக்காதலிப்பதாக சலீம் சொல்லவில்லை. சலீமை எப்படியாவது அடைய வேண்டும் என்ற முடிவு எடுத்தாள் ஜுனைதா.

சலீமை அடிக்கடி தன் வீட்டுக்கு வரவழைத்தாள் ஜுனைதா, ஒவ்வொரு முறையும் ஏதாவதொரு பொய்க்காரணத்தைச் சொல்வாள். அவளின் உள்நோக்கம் சலீமுக்குப் புரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுனைதா தன் சினேகிதி, நண்பர்களுக்கெல்லாம் சலீம் தன்னைக் காதலிப்பதாக பெருமையடித்தாள். சலீமுக்கும் சுலைஹாவிற்கும் திருமண ஏற்பாடு நடக்கத்தொடங்கியது. இதையறிந்த ஜுனைதாவின் கற்பனை இதயம் வெடித்து விடும் போலாகியது.

அன்று சலீம் ஜுனைதாவின் வீட்டுக்குச் சென்று திருமண விடயத்தைத் தன் வாயாலேயே சொன்னான். அவளுக்கு ஆத்திரம் வந்தது. காட்டிக் கொள்ளவில்லை. அவள் கொடுத்த தேநீரை அருந்தி விட்டு வீட்டுக்கு வந்தான் சலீம்.

மயக்கநிலை அவனுக்கு ஏற்பட்டது. உடனே வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றார்கள். ஜுனைதா கொடுத்த தேநீர் நஞ்சு கலக்கப்பட்டிருந்ததாம்! தாமதிக்காமல் உடன் வைத்தியசாலைக்குக் எடுத்துச் சென்றதால் சலீம் பிழைத்தான்.

ஜுனைதாவின் கொடிய எண்ணத்தை நினைத்து மனம் வருந்தி அவளுக்கே அவளின் கெட்ட எண்ணத்தை எழுதியிருந்தான் சலீம்.

சுலைஹா சலீம் மீது சந்தேகம் கொண்டாள். ஒரு வேளை ஜுனைதாவைக் காதலித்து திருமணம் செய்வதாக சொல்லி அவளை ஏமாற்றி விட்டாரோ! அப்படியும் இருக்கலாம். உண்மையை அறிய வேண்டும் என்று முனைந்தாள் சுலைஹா. ஜுனைதாவைச் சந்திக்கச் சென்றாள்.

சலீம் காதலித்துக் கைவிட்டதாகச் சொன்னாள் ஜுனைதா. அதைக்கேட்டுக் கொண்டிருந்த சுலைஹா கண் கலங்கினாள். இதனால் சலீம் காதல் தடைப்பட்டது மாத்திரமன்றி கல்யாணமும் நின்று விட்டது. சுலைஹா சலீமுக்கு எழுதினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஏழைப்பெண்ணின் வாழ்க்கையை பாழ்படுத்தி விட்டாயே! எங்கள் பெண் இனத்தையா இவ்வளவு அவமதிக்கிறாய்? ஜுனைதாவை ஏமாற்றாமல் கல்யாணம் முடித்துக் கொள்.

இதைப்படித்ததும் சலீமுக்கு ஆச்சரியம் உண்டானது யார் இந்தக்கட்டுக்கதையை சுலைஹா நம்பும்படியாக சொல்லியிருப்பார்? எவ்வளவு கெஞ்சிக்கேட்டும் யார் சொன்னது என சுலைஹா சொல்லவில்லை. ஜுனைதா தன் வாயால் சொன்னதை சுலைஹா நம்புவாள்தானே!

ஜுனைதாவின் வீட்டுக்கு சலீம் செல்வதேயில்லை. தேநீரில் ஏதோ கலந்து கொடுத்தது முதல் அவர்களின் தொடர்பு நின்று விட்டது. சலீம் தன்னைக் காதலிப்பதாக ஜுனைதா பொய் சொன்னதும் சலீமை திருமணம் செய்து கொள்ள சுலைஹா விரும்பவில்லை ஒரு வாழ்க்கையையே ஜுனைதா கெடுத்து விட்டாள். இதை அல்லாஹ் பொறுத்துக் கொள்வானா?

ஜுனைதாவின் மேனியெங்கும் ஒருவித சொறியும், சிரங்கும் தோன்றியது. எந்த வைத்தியராலும் குணமாக்க முடியவில்லை. படுத்த படுக்கையிலே இருந்தாள். தான் பிழைப்பது சந்தேகம் என அவளே உணர்ந்தாள். போகப்போக நோயும் அதிகரித்தது.

அவசரமாக சுலைஹாவிற்கு கடிதம் எழுதினாள் அனுப்பவில்லை. சுலைஹா அவளைப்பார்க்க வந்தாள். பேசக்கூட அவளால் முடியவில்லை. கடிதத்தைப் படிக்கும் படி கூறிக்கொடுத்தாள். மறுகணமே ஜுனைதாவின் உயிர் பிரிந்தது. சுலைஹா கடிதத்தைப் படித்தாள்.

அன்புள்ள சுலைஹா,
நான் சலீம்மீது வீண் ஆசை கொண்டேன். அவர் என்னை விரும்பவில்லை. எனத்தெரிந்தும் அவரை விரும்பினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னிடம் பொய் கூறி மணவாழ்க்கையை கெடுத்த பாவி நான். சலீம் உத்தமர். அவரைத் திருமணம் முடித்து சந்தோஷமாக இரு சுலைஹா நான் இன்றோ நாளையோ இறந்து விடுவேன். எனக்கு வாழ்க்கை இல்லை என எழுதியிருந்தாள்.

சுலைஹா ஜுனைதாவைப்பார்த்தாள் அவள் பேச்சு மூச்சின்றியிருந்தாள். இறந்து விட்டதை உணர்ந்து அழுதாள்.

ஜுனைதா இறந்து விட்டதை சலீம் உணர்ந்து அவள் வீட்டுக்குச் சென்றாள். ஒரு முஸ்லிம் இறந்தால் மற்ற முஸ்லிம் சென்று பார்ப்பது கடமையல்லவா!

– நன்றி –

(சங்கமம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிச்ச மரம்...!

சிறுவர் கதை

சிறுவர்கள் மட்டுமல்ல பெரியவர்களும் நெருப்பாய் ஒளிரும் அந்த மரத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள்.

காலை மலர்ந்து கதிரவன் மறையும் வரையும் அந்த மரம் ஒரு சிறு துளி வெளிச்சத்தையும் பரப்புவதில்லை. இரவானதும் ஒளி வெள்ளத்தை உவந்தளிக்கும்.

இதன் மர்மம் என்னவென்பது எவருக்கும் புரியாதிருந்தது.

ஆழ்ந்து சிந்திக்கும் ஆற்றலைக் கொண்டவன் சிறுவன் குமாரன். ஏழாம் வகுப்புப் படித்தாலும் பெரிய பெரிய விடயங்களிலெல்லாம் பெரியவர்களுக்கு அறிவுரை பகர்வதில் வல்லவன் இவன்.

வெளிச்சமரமுள்ள காட்டுப்புற பகுதிக்கு குமாரன் தன் நண்பர்கள் இருவருடன் புறப்பட்டான்.

மாலை வேளை சூரியனின் ஒளி முற்றாக மறையவில்லை. இன்னும் அரைமணி நேரம் கடந்தபின்னர்தான் இருள் பரவ ஆரம்பிக்கும்.

பாதை அருகே இலை குழைகளைப் பரப்பிவிட்டு அமர்ந்தான் குமாரன்.

ஊரவர்களும் வெளிச்சமரத்தைப் பார்க்க அவ்விடத்தில் அணி திரள ஆரம்பித்தார்கள். அந்த மரத்திலிருந்து வெளிச்சம் வருகிறது. என்பதை அறிய வேண்டுமானால் இரவு வரவேண்டுமே! அதுவரை பொறுமையோடு இருந்தான் குமாரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள் இலேசாக பரவத்தொடங்கியது. உயரமாக வளர்ந்திருந்த அம்மரம் வெள்ளித்தகடு போல பளபளத்தது.

இருள் பரவபரவ மரமும் வெள்ளி மரமாகக் காட்சியளித்தது.

"இருளில் பளபளக்கும் தன்மை கொண்டதுதான் இம்மரம்! வேறு எந்த மாயமும் இல்லை! மந்திரமும் இல்லை." என்றான் சிறுவன் குமாரன்.

"நாம் எப்படிச் சொல்லமுடியும்? கடவுளுக்குத்தான் வெளிச்சம்" என்றான் குமாரனின் நண்பர்களில் ஒருவன். வாருங்கள் அந்த மரத்தின் கிளையை முறித்து வீட்டுக்குக் கொண்டு செல்வோம்" என்று தன் நண்பர்களை அழைத்தான் குமாரன்.

"ஐயோ நாங்கள் வரமாட்டோம். நீ போய் முறித்துக் கொண்டு வா...." என்று நண்பர்கள் மறுத்தார்கள்.

துணிந்து சென்றான் குமாரன். பளபளக்கும் ஒளி அவனது கண்களை கூசவைத்தது. கண்களை மூடிக்கொண்டு கிளையொன்றை ஒடித்தெடுத்தான். அதுவும் பளபளத்துக் கொண்டே இருந்தது. அதை சிறு துண்டுகளாக்கி கைலேஞ்சினால் வைத்துச் சுற்றி எடுத்தான்.

குமாரனின் துணிவைக் கண்டவர்கள் பாராட்டினார்கள். பயந்து தூரத்தே நின்ற அனைவரும் அந்த மரத்தின் அருகே சென்று பார்வையிட ஆரம்பித்தனர்.

அடுத்த நாள் காலை ஒடித்துக்கொண்டு வந்த மரக்கிளையின் துண்டுகளைப்பார்த்தான் குமாரன். சாதாரண மரக்கிளை போன்றுதான் இருந்தது. ஆனால் அதில் ஒரு திரவம் படர்ந்திருந்தது. இரவானதும் இருட்டில் வைத்துப்பார்த்தான். வெள்ளியைப் போல பளபளத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை ஊர்மக்களுக்கெல்லாம் காட்டி அவர்களின் பயத்தைப் போக்கியதுடன் துணிவையும் ஏற்படுத்தினான் குமாரன்.

ஒரு சில நாட்களில் அம்மரத்தின் கிளைகள் குறைய ஆரம்பித்தன. பயம் தெளிந்த அவ்வூர் மக்கள் மரத்தின் கிளைகளைத் தினமும் பறித்துச் செல்ல ஆரம்பித்தனர்.

காலப்போக்கில் "வெளிச்ச மரம்" முற்றாக மறைந்து போயின.

– நன்றி –

(சூடாமணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடங்கிய பயணம்!

படிக்கிறகாலத்திலே விதவிதமாக உடையணிந்து நாகரீக வளர்ச்சியை காட்டித்திரிந்தவன் சிவகுமார்.

படிக்க முடியாவிட்டாலும் நாகரீகத்தை மட்டும் நன்றாகக் கற்றுவிட்டான். அந்த நாகரீகத்தால் அவனுக்கே பயனில்லை!

இளமைத்துடிப்பு சும்மா விடுமா? வனிதாவைக்காதலித்தான்.

வனிதாவைத்திருமணம் செய்ய போதுமான "உழைப்பு" எனும் சீதனம் இல்லாத போது, அவளை திருமணம் செய்தே தீரவேண்டும் என்ற இறுக்கமான முடிவுக்கு வந்தான்.

வனிதாவின் வீட்டார்கள் சிவகுமாரின் உறவைக்கைவிடுமாறு கண்டித்தார்கள்.

காதலில் கட்டுண்ட வனிதாவால் அது முடியவில்லை! மகளின் விருப்பத்தை நிறைவேற்ற தந்தையும் முடிவெடுத்தார். "திருமணத்தைச் செய்து கொடுத்தால் உழைத்துக் கொடுப்பான்" என்று வனிதாவின் தாயிடமும் சொல்லித்திருமணத்தை நடத்தி வைத்தார்.

ஆறு மாதங்கள் உருண்டோடின. இலவச சாப்பாட்டில் உடம்பு வளர்த்தான். இனி எப்படியாவது தொழில் புரிய வேண்டிய கடமை சிவகுமாருக்கு! என்ன தொழில் செய்வது? எப்படிச் செய்வது?

மத்திய கிழக்கு நாடொன்றுக்குச் சென்றால் உழைத்து வரலாம். அதற்கு பத்து, இருபதினாயிரம் பணம் வேண்டுமே. காணியை ஈடுவைத்து பணம் எடுக்க முடிவானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணி ஈடாகி பணமாகியது. பணம் கரைந்ததே தவிர சிவகுமார் வெளிநாடு போனபாடில்லை! ஏஜென்சியும் நாட்களை துரத்திக் கொண்டிருந்தான்.

வேறு வழியின்றி அன்பு மனைவியை அறபு நாட்டுக்கு அனுப்ப ஆயத்தமானான் சிவகுமார்.

வனிதா வெளிநாடு சென்றாள்.

மாதாமாதம் வனிதா அனுப்பிய பணத்தை விலைமாதர் மூலம் விரயமாக்கினான் சிவகுமார்.

ஒன்றுமறியாத வனிதா மற்றவர்கள் எழுதிய கடிதத்தைக் கூட நம்பாது, கணவனுக்கு பணத்தை தொடர்ந்தும் அனுப்பிக் கொண்டிருந்தாள்.

சிவகுமார் சுகபோக வாழ்வில் மகாராஜவானான்.

நாட்கள் நகர்ந்தன.

வனிதா நாடு திரும்ப ஆறுமாதங்கள் இருந்தன.

இடையில் கணவனிடமிருந்து கடிதங்கள் வருவது குறைய ஆரம்பித்தன.

வனிதாவுக்கு அவளின் தாயாரே கைப்பட கடிதம் எழுதினாள். சிவகுமார் சித்ரா என்ற பெண்ணுடன் எங்கோ சென்று விட்டதாகவும், மனம் தளராது தாய் நாடு திரும்பும் படியும் கேட்டிருந்தாள் அவளின் தாய்.

கணவனின் துரோகச் செயலுக்கு முன்னால் அவளின் மன வேதனைகள் எல்லாம் மங்கிப் போயின. தெளிந்த மனதோடு தாய்நாடு திரும்ப ஆயத்தமானாள் வனிதா.

– நன்றி –

(சூடாமணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுத்து வைத்தவர்கள்!

சுதன் வழமையாக அலுவலகம் செல்லும் பாதைதான் அது. என்றாலும் அந்த வீட்டில் இப்படியொரு அழகு தேவதை இருப்பாள் என்று அவன் கனவு கூட கண்டதில்லை! ஆனால் நேருக்கு நேராக அவளைக் கண்டு கொண்டான் சுதன்.

இந்திரலோகத்து அழகு சுந்தரி என்றுதான் எண்ணத்தோன்றியது அவனுக்கு!

"சுதன்... உனக்கு வயது போகுது, சுறுக்கா உனக்கொரு கல்யாணத்தைச் செய்து வைக்க ஆசைப்படுறன். அதை பேசிக்கொண்டு வந்தாலும் விரும்புறாயில்லை! யாரையாவது விரும்புகிறாயா? என்று கேட்டால் அதற்கு இல்லை என்கிறாய். இப்படியே சொல்லிக் கொண்டு போனால் எப்போ திருமணம் செய்யப்போகிறாய்?" என்று தினமும் சுதனின் அப்பா மூர்த்தி நச்சரிப்பார்.

இனி அப்பா கேட்டால் இவளைச் சொல்ல வேண்டும். பேசி எனக்கு முடித்து வைக்கட்டுமே! அழகு என்றால் இவள்தான் அழகு பணம் இன்றைக்கு இருக்கும் நாளைக்குப் போய்விடும். இளமைக்காலப்பசிக்கு அழகுதானே விருந்து" என்று நினைத்தான் சுதன். தீர்க்கமான முடிவை தந்தையிடமும் சொன்னான்.

மகனின் திடீர் முடிவை அறிந்த மூர்த்தி சந்தோஷப்பட்டார். புரோக்கர் ராமநாதன் மூலமாக பெண் வீட்டாருக்கு தூது அனுப்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களுக்கு நல்லகாலம் வந்திருக்கு. உங்கட மகள் இருக்கிற அழகுக்கு எவனும் விரும்பி வருவான்தானே! அவள் தங்கச்சிலை அல்லவா! மூர்த்தியின் மகன் சுதன் உங்க மகளை மணம் முடிக்க ஆசைப்படுகிறான். என்ன சொல்றீங்க?" என்று புரோக்கர் ராமநாதன் கேட்டார்.

"இந்த அதிஷ்டத்தை யார்தான் தட்டிவிடுவாங்க. நாளைக்கு என்றாலும் திருமணத்தை நடத்தி வைக்க சம்மதம். கடவுள் என் மகளை கைவிடவில்லை! என்று கூறினாள் பெண்ணின் தாய்.

"படைத்தவன் எல்லோரையும் காப்பான்" என்று ஒரு போடு போட்டார் புரோக்கர் ராமநாதன். முன்கூட்டியே சந்தோஷமாக ஐந்நூறு ரூபாயை பெண்ணின் தாயிடமே பெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

மூர்த்தியை நீண்ட நாட்களுக்குப் பின்னர் அவரது பாடசாலைத் தோழன் கணேசன் சந்திக்க வந்தான்.

"மூர்த்தி... நீ நல்லா கிழவனாய் பெயித்தே..." என்றார் கணேசன்.

"அடே.... நீ கடும் மொட்டை கிழவனாய் போயிற்றே" என்றார் மூர்த்தி.

"முக்கியமான செய்தி புரோக்கர் என்னிடம் சொன்னான். அந்த ஊமைப்பெண்ணையா உங்க மகன் விரும்பினான்? அவள் ஊமையென தெரிந்துமா விரும்பினான?" என்றார் மூர்த்தி.

சுதனுக்கு இந்த விடையத்தை எடுத்துச் சொன்னார் மூர்த்தி.

சுதன் நிதானமாகச் சொன்னான் "அப்ப.... கண்டதும் காதல் என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல, அல்லாது அழகில் மயங்கித்தான் அவளை விரும்பினேன். இருந்தாலும் அவள் ஊமை என்று தெரிந்தும் அவள் மீதுண்டான எனது விருப்பம் பன்மடங்காகி விட்டதப்பா..."

"அப்படியென்றால்?"

"புரியவில்லையா அப்பா...? நான் திருமணம் செய்து கொள்வதாயின் அவளைத்தான் திருமணம் செய்து கொள்வேன். இல்லையேல் எனக்குத் திருமணமே வேண்டாம். ஆமாம் அப்பா.... வாய் பேச முடியாத ஒரு பெண்ணுக்கு வாழ்வளிப்பதற்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்...!"

மூர்த்தியின் கண்கள் திடீரெனப் பணிந்தன. அவர் தன் மகனைத் தழுவிக் கொண்டு சொன்னார்.

"இல்லையப்பா.... ஒன்ன மகனாகப் பெற்றதுக்கு நான்தான் கொடுத்து வைச்சிருக்க வேணும்...!"


– நன்றி –

(சங்கமம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலையாத மேகங்கள்

மானிட நேயமும், கூர்மையான சமூகப்பார்வையும் வாழ்வியலை யதார்த்தமாகக் காணத்துடிக்கும் உத்வேகமும் கொண்ட கவிஞர் ஒலுவில் அமுதனின் சிறுகதைகள் "கலையாத மேகங்கள்" எனும் பெயரில் ஒரு தொகுப்பாக வெளிவருவது மிக மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

ஏற்கனவே மனகோலம், மரணம் வரும் வரைக்கும் ஆகிய இரு கவிதைத் தொகுதிகளை வெளியிட்டு தன் கவியாற்றலை படம் போட்டுக்காட்டியுள்ளார்.

சமூக விழுமியங்களை தீட்சண்யமாக காட்டும் சாளரங்களாகவுள்ள சிறு கதைகளின் மூலம்தான் வாழும் சமூகத்தை தன்னுடைய எழுத்தாற்றல் மூலம் படம்பிடித்து எம்மை எல்லாம் சிந்திக்கவும் சீர் பெறவும் வைத்துள்ள இவரை மனதார பாராட்டுகின்றேன்.

என் மாணவன் இன்று வங்கி அதிகாரியாகப் பணியாற்றி இறுக்கமான இலக்கியப்படைப்பாளியாக மிளிர்வது எனக்கு மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருகிறது. வாழ்க்கை உண்மைகளை சிறுகதைகளாக படைத்திருக்கும் இவருக்கு என் வாழ்த்துக்கள்.



**அல்-ஹாஜ். எஸ். முத்துமீரான்**

(தமிழ்மாமணி, கலாபூஷணம், தாஜுல் அதீப், சட்டத்தரணி)

தொலை பேசி 067-50042

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலக்ஷன் அக்கரைப்பற்று.